RESTAURANT VIGNESHWAR
முற்றிலும் வேறுபட்ட சுவையான பல புதிய உணவு வகைகள்
விக்னேஷ்வர் உணவகம்
உங்கள் கொண்டாட்டங்கள் அனைத்திற்குமான உணவுகளை வேண்டுகை செய்து பெற்றுக்கொள்ளலாம்
Tel: 0142052179 / 0620440537
14, Rue Perdonnet , 75010 Paris
Métro: La Chapelle/Gare du Nord

1.50 Euro பிரான்ஸ்

சிறகுகள் ஐரோப்பா

POOBALAM WEEKLY

2004 14 - 20 Avril 2004 09

V.T.Cash & Carry
VAAHESAN TRADERS LTD
Epicerie Fine Indienne
15, Rue Cail, 75010 Paris
www.restoindianparis.com
Tel: 01 40 05 07 18
Fax: 01 40 05 06 92
e-mail:Suresh@cocoeuro.com

இராணுவபலமும் அரசியல் பலமும் மீண்டும் நிரூபிக்கப்பட்டது

கிழக்கு மாகாணத்தில் கருணாவின் வசமிருந்த சகல பிரதேசங்களையும் விடுதலைப்புலிகள் உயிர்ச் சேதங்கள், இழப்புக்கள், சொத்து அழிவுகளின்றி கைப்பற்றியதன் மூலம் சர்வதேச அரங்கில் புலிகளுக்கு பலத்த வரவேற்பு கிடைத்துள்ளது. கிழக்கில் கருணாவை பயன்படுத்தி விடுதலைப் புலிகளுடன் மோத விட்டு தமிழ்த்தேசிய முரண்பாடாக சர்வதேச சமூகத்திற்கு காட்ட முற்பட்டவர்களுக்கும் பலத்த அடியாக அமைந்துள்ளது. குறிப்பாக தென்பகுதியில் இனவாத சக்திகளும் சிங்கள ஆங்கில ஊடகங்களும் புலிகளின் கருணா மீதான தாக்குதலை பெரிதுபடுத்தி மனிதவுரிமைகள் மீறப்படுவதாகவும் பெருமளவில் மக்கள் இடம்பெயர்ந்திருப்பதாகவும் செய்திகளை வெளியிட்டு வந்தன. ஆனால் இடம் பெயர்ந்த கணிசமான மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பியிருக்கின்றார்கள். அத்துடன் கிழக்கு மாகாணம் அமைதியாக இருக்கின்றது. குறுகிய நாட்களுக்குள் புலிகள் இந்த இராணுவ நடவடிக்கையை வெற்றி கரமாக நடத்தி முடித்ததன் மூலம் தமது இராணுவ பலத்தையும் அரசியல் ரீதியான மக்கள் சக்தியையும் நிரூபித்திருக்கின்றார்கள்.

கருணா இந்தியாவில்!



கிழக்கு மாகாணத்திலிருந்து தப்பி வந்த கருணா இந்தியாவிற்கு சென்றிருப்பதாக தெரிய வருகின்றது. மின்னேரியா இராணுவ முகாமிலிருந்து கருணா கொழும்பிற்கு அழைத்து வரப்பட்டு இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக இராணுவ வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது. கிழக்கு மாகாணத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து கருணாவும் அவரது சகாக்களான நிலாவினி, வரதன், தாத்தா உட்பட ஐந்து பேர் மின்னேரியா இராணுவ முகாமிலிருந்து கொழும்பிற்கு வந்திருந்ததாகவும் அறிய முடிகின்றது. கருணாவின் சகோதரர் றெஜி குறித்து எத்தகைய தகவலும் வெளியாகவில்லை.

மட்டு-அம்பாறை பிரதேசம் புலிகளின் கட்டுபாட்டில் வந்தது

தளபதிகள் ரமேஷ், பிரபா, ஜெகத்தான் அணிகளை நெறிப்படுத்தினர்



மட்டக்களப்பு நகரின் சுற்றுப்புறங்கள் அனைத்தும் விடுதலைப் புலிகளின் படையணிகளால் 12ம் திகதி கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டன. விடுதலைப் புலிகளின் பல தாக்குதல் அணிகள் பல்வேறு பக்கங்களிலிருந்தும் மேற்கொண்ட நகர்வினாலேயே இப்பிரதேங்கள் மீட்கப்பட்டுள்ளன. ஜெயந்தனின் படையணிப்பிரிவுகளே மட்டு-அம்பாறை மீட்புத் தாக்குதலின் முதற்கட்டமான வாகரை நோக்கிய பலமுனைத் தாக்குதலைத் தொடுத்தன.

கருணாவின் அணியினர் மீதான இத்தாக்குதல்களை மட்டு-அம்பாறை மாவட்டங்களிற்கான விசேட தளபதியான ரமேஸ் அவர்களும், ஜெயந்தன் படையணியின் விசேட தளபதியான ஜெகத்தானும் வழிநடத்திச் சென்றனர். ஜெயந்தன் படையணியான மட்டு-அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களால் உருவாக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

(தொடர்ச்சி 21ம் பக்கம்)



விடுதலைப் புலிகளுக்கு கொக்கட்டிச்சோலையில் அமோக வரவேற்பு

12.04.2004

கொக்கட்டிச்சோலையில் விடுதலைப் புலிகளுக்கு மக்கள் அமோக வரவேற்பு கொடுத்துள்ளதாக அங்கிருந்து எமக்கு கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பல நூற்றுக்கணக்கான மக்கள் தளபதிகளையும் போராளிகளையும் மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்பளிப்பதைக் காணக்கூடியதாகவுள்ளதாகவும் தெரியவருகிறது. இதேவேளை கருணாவின் தமிழ் அலை பத்திரிகை நிர்வாகமும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வேறு வேறிடங்களில் இருந்து கருணாவின் குழுவில் இருந்து பிரிந்து வெளியேறும் போராளிகள் விடுதலைப் புலிகளின் மீட்பு அணிகளை பெருந்தொகையில் நாடிவந்தவண்ணமுள்ளனர்.

தங்கள் பிள்ளைகளின் கதி


(தொடர்ச்சி 21ம் பக்கம்)

கருணாவுக்காகப் போராடப் போராளிகள் தயாரில்லை

– சுவிசிலிருந்து கரிகாலன்

தனது தன்னிச்சையான செயற்பாடுகளால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து விலகிய-விலத்தப்பட்ட கருணாவின் பாதுகாப்புக்காக அவரால் பலவந்தமாக காவலரண்களிலும் போர் முனைகளிலும் நிறுத்தப்பட்ட போராளிகள் அவரது பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கத் தயாரில்லாமல் இருந்தார்கள் என்பதையே தற்போதைய கிழக்கு

(தொடர்ச்சி 21ம் பக்கம்)



மோகன் ஜுவலரி மார்ட்

201 Rue du fg. st. Denis, 75010 Paris.

Tel: 01 42 05 65 26 / Fax: 01 42 05 65 79

Mº: La Chapelle / Gare du Nord

தங்க நகைகளுக்கு தவணை முறையில் செலுத்தும் கடன் வசதியுடன்!

Pub.

உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை – கப்டன் கஜன்

கருணாவின் பிரதேசவாதத்தில் குளிர்காய முயன்ற சர்வதேச செய்தி ஊடகங்களுக்கு பெரும் ஏமாற்றம்

கருணாவின் பிரச்சினைகளைப் பூதாகரப்படுத்தி, சர்வதேச மட்டத்தில் பிரதேசவாதத்தைத் தூண்டுவதற்கும், விடுதலைப் புலிகளுக்கெதிரான பிரச்சாரத்தை முடுக்கி விடுவதிலும் கடுகதியில் உழைத்த பல சர்வதேச ஊடகங்கள் பெரும் ஏமாற்றமடைந்திருப்பதாகத் தெரியவருகிறது.

மட்டக்களப்பு தமிழ்அலை உட்பட, ஐரோப்பா, கனடா, இந்தியா போன்ற நாடுகளில் இயங்கும் சில ஊடகங்கள், கருணாவின் பிரச்சினை குறித்து, உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிட்டமை, பொய் வதந்திகளைக் கட்டவிழ்த்து விட்டமை, கருணா கிளப்பிய பிரதேசவாதத்திற்கு வக்காலத்து வாங்கியமை, மக்களைப் பீதிக்குள்ளாக்கியமை போன்றவை உட்பட, அவசிய மற்ற தகவல்களை அநாமதேய ஊடகங்களை மேற்கோள் காட்டி தொடர்ச்சியாக வெளியிட்டு வந்த நிலையில், திடீரென கருணா குழுவினர் பின்வாங்கியதுடன், கொழும்புக்குத் தப்பியோடிவிட்டனர்.

இந்நிலையில், இவ்வூடகங்கள் மிகப் பெரும் வெறுப்பும் ஏமாற்றமும் அடைந்துள்ளதுடன், இத்தகைய செயலில் ஈடுபட்ட ஊடகங்கள் சில, வேகமாகவே சுதாகரித்துக்கொண்டு மீண்டும் கருணாவுக்கு எதிரான செய்திகள் சிலவற்றைப் பிரசுரித்து, தங்களது பக்கச் சார்பு நிலையை மீண்டும் நியாயப்படுத்த முயல்வதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நெருக்கடியான காலப் பகுதியில், நேர்மையுடன் செயற்பட்ட சில சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ள கருத்தில், தமிழ்த் தேசியத்தின் ஒட்டு மொத்த வெற்றிக்காக அனைத்து ஊடகங்களும் இணைந்து செயற்பட வேண்டிய தேவையை உணர்ந்து, இனிவரும் காலத்தில், ஓர் தொலை நோக்குப் பார்வையுடன் தமிழ்த் தேசியத்தின் ஒன்றுபட்ட இனவிடுதலையை நோக்கி அனைத்து ஊடகங்களும் செயற்பட வேண்டுமென்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் ரோந்து நடவடிக்கைகள் தீவிரம்

யாழ். குடாநாட்டின் கரையோரங்களில் சிறீலங்கா கடற்படையினரும் பிரதான வீதிகளில் இராணுவத்தினரும் ரோந்து நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

கரையோரப் பிரதேசங்களை அண்டிய கடற்பரப்பில் விசைப் படகுகளில் திடீர் திடீரெனத் தோன்றும் சிறிலங்கா கடற்படையினர் கடலில் ரோந்து செய்வதுடன், இரவுக் கண்காணிப்பிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன் கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களிடம் அடையாள அட்டையைக் கேட்டு விசாரித்ததுடன், உடன் சோதனைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

சிறீலங்கா கடற்படையினரதும், இராணுவத்தினரதும் இத்திடீர் நடவடிக்கைகளையடுத்து மீனவர்கள் மத்தியிலும், கரையோரங்களில் வாழும் மக்களிடையேயும் ஒருவித அச்சநிலை தோன்றியுள்ளது.

இதேவேளை யாழ். வல்லை வெளிப் பாலத்தில் நிலைகொண்டுள்ள சிறீலங்கா படையினர் வீதியால் செல்வோரைத் தடுத்து அடையாள அட்டைகளைப் பார்வையிடுவதுடன் உடல் பரிசோதனைகளிலும் ஈடுபடுகின்றனர். வல்லைப்பாலமூடாக நடந்தும், மிதிவண்டிகளிலும், உந்துருளிகளிலும், மற்றும் வாகனங்களில் செல்வோரும் இவ்வாறு தடுத்து நிறுத்தப்பட்டு தீவிர சோதனை -க்கு உட்படுத்தப்படுகின்றனர்.

தேர்தல் முடிந்து புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டபின் யாழ். குடாவில் சிறீலங்கா படைத்தரப்பினர் மேற்கொள்ளும் இந்நடவடிக்கைகளையடுத்து யாழ். குடாநாட்டு மக்களிடையே அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது.

வீடு விற்பனைக்கு (தனிவீடு)
Vente de Maison

à Savigny le temple (bourg)

- Utiliser Seulement 3 ans - **புதிதாக கட்டப்பட்டது** (3 வருடமே பாவனைக்குட்பட்டது)
- Terrain 540 M² - **மேலதிகமாக** 540M² **காணியுண்டு**
- Maison de 115 M² - **வீடு** 115M² **உள் அளவைக் கொண்டது**
- 6 Piece
- 4 Chambre - **4 அறைகள்**
- Avec Garage - **வாகனத் தரிப்பிடம்**

Savigny-Paris 45 min (RER D)

Contacter au:

Fixe: 01 60 63 40 02 - Port: 06 64 10 39 70

பாரிசில் இருந்து 45 நிமிடத் தூரம்

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

INDIAN ASTROLOGER
சாய்பாபா

Laxmi Kanthswamy

பிரபல இந்திய ஜோதிடர் கைரேகை நிபுணர் இந்தியாவிலிருந்து இங்கே வருகை தந்துள்ளார்.

எம்மிடம் வருவதால் உங்கள் சகல பிரச்சனைகளும் தீர்த்து வைக்கப்படும். 99 வீதம் சரியாக கணித்துச் சொல்லப்படும். உங்கள் நிகழ்காலம், வருங்காலம், வியாபாரம், கல்வி, குடும்ப விபரங்கள், தேகசுகம் எல்லாம் சரியாக கணித்துச் சொல்லப்படும். அத்துடன் சாந்தி பூஜா, இலட்சுமி பூஜா பிரார்த்தனைகளும் செய்து தருவோம்.கண் திருஷ்டி, சூனியம் அகற்றுதலும் செய்து தருவோம்.

சந்திக்குமிடம்:

(West London) South hall

Contact:

Tel: 07932724065 / 07939613067

பிரான்ஸ் புங்குடுதீவு மக்கள் ஒன்றியம்

பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும்

காலம்: 18.04.2004 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பிற்பகல் 15.30 மணிக்கு
இடம்: A.B.C. Espace
3, Rue de la Chapelle
75018 Paris.
M°: Marx Dormay

பிரான்ஸ் வாழ் புங்குடுதீவு மக்கள் அனைவரையும் இந் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்புகட்கு:
06 63 74 74 98 - 06 63 35 59 27
06 75 49 79 66 - 06 16 39 12 51

தமிழீழ விடுதலைப்புலிகள் பிரான்ஸ் கிளை நடாத்தும்

மாவீரர் நினைவு விளையாட்டுப் போட்டிகள்-2004

– கரப்பந்தாட்டம் (Setup lover game)
– கூடைப்பந்தாட்டம் (ஆண்-பெண்)
(15 வயதிற்கு கீழ் - 18 வயதிற்குக்கீழ் -18 வயதிற்குமேல்)

காலம்: 18/19 – 04 –04 சனி, ஞாயிறு
இருதினங்கள் (கூடைப்பந்தாட்டம்)
19.04.04 ஞாயிறு (கரப்பந்தாட்டம்)

இடம்: Gymnase Louis Lumierne
30 Rue Louis Lumierre, 75020 - Paris
Mo: Portd de Bagneolet *ou* Porte de Montreuil

நேரம்: 10–00 மணி

குறிப்பு: குலுக்கல்கள் விளையாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

தொடர்புகளுக்கு 01 43 58 11 42
விளையாட்டுப் பிரிவு
தமிழீழ விடுதலைப்புலிகள் பிரான்ஸ் கிளை

சாயி துர்க்கா புகைப்படச் சேவை

தரம், வேகம், மலிவு

இத்துடன் தரமான 'லெமனேசன் அல்பங்கள்' (**இலவசம்**) செய்து தரப்படும்

தொடர்புகளுக்கு
சுரேஸ் - **06 17 51 17 58 / 01 53 26 06 89**
T.M.S Video 33, Bd De La Chapelle - 75010 Paris

நித்தி வாகன சேவை

உங்களின் வீட்டுத் தளபாடங்களை பெரிய (20M³) வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் லூர்த், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

நித்தி: 0148050214 / 0613342518
0607348051 / 0148385825 Pub Fr

EUROCONSULT SARL TRADUCTIONS

மொழி பெயர்ப்பு நிலையம்

அனைத்துவித மொழி பெயர்ப்பு, இலவச சட்ட ஆலோசனை, வர்த்தக - கணக்காய்வு - தொழிலாளர் பிரச்சனைகள், நிர்வாக கடிதம் போன்ற உங்கள் தேவைகளுக்கு

24, Rue Perdonnet ,
75010 Paris
Tel: 0153267010
Fax: 0153267502

Errances Travels

55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39

தொடர்பு: நாதன்

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

à partir de

Bombay	-	560 Eu
Delhi	-	560 Eu
Bangkok	-	550 Eu
Colombo	-	660 Eu
Singapour	-	660 Eu
Madras	-	658 Eu
New york	-	550 Eu
Montreal	-	540 Eu
Oslo	-	315 Eu
Toronto	-	540 Eu

மட்டு. நிலவரம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறை விடுத்த அறிக்கை

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் அமைப்பிலி ருந்து நீக்கப்பட்டுள்ள கருணா வுக்கும், அவருடைய சகாக்களுக் கும் எதிரான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது தொடர் பாக தமிழீழ விடுதலைப் புலிக ளின் அரசியல்துறை அறிக்கை யொன்றை கடந்த 10 ம் திகதி வெளியிட்டது.

அந்த அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ள விபரங்களை முழு மையாக கீழே தருகிறோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்தினால் இயக்கத் திலிருந்து நீக்கப்பட்ட கருணா, தொடர்ந்தும் தலைமைப்பீடத் திற்கு எதிரான செயற்பாடுகளிலும், மக்கள் விரோத நடவடிக்கைகளி லும் ஈடுபட்டு வருகின்றார். இதற்கு உந்துதலாகத் தமிழ்த் தேசியத் துக்கு விரோதமான சக்திகளும் பின்புலத்தில் செயற்படுகின்றன.

கருணாவினால் இயக்க நடை முறைக்கு எதிராக தோற்றுவிக்கப் பட்ட குழப்பத்தை எமது தலை மைப்பீடம் இரத்தக்களரி, உயிரி ழப்புக்கள் இன்றி சுமூகமான நிலைக்குக் கொண்டுவருவதற்கு தொடர்ச்சியான நடவடிக்கைக ளில் ஈடுபட்டுவந்துள்ளது.

ஆயினும் போராளிகள் தமது சொந்த விருப்பத்தின் பேரில் வெளியேறி, இயக்கத்துடனோ அன்றி பெற்றோருடனோ இணை -ந்து கொள்வதற்குத் தடையாக இருப்பது மட்டுமல்ல, போராளி களை அழிப்பதற்கான செயற்பா டுகளிலும் கருணா இறங்கியுள் ளார்.

இந்நிலையில் பொதுமக்களை யும், போராளிகளையும் பாது காக்க வேண்டிய நிலைக்குத் தலை மைப்பீடம் தள்ளப்பட்டுள்ளது. எனவே கருணாவைத் தமிழர் தாயகத்திலிருந்து வெளியேற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன.

இச்சந்தர்ப்பத்திலும், அநேக போராளிகள் எம்மிடம் திரும்பி வந்து கொண்டிருக்கிறார்கள். எனவே வீணான உயிரழப்புக்க ளைத் தவிர்ப்பற்கு, எஞ்சியுள்ள போராளிகளையும் இயக்கத்துடன் இணைந்துகொள்ளுமாறு கோரு கிறோம்.

இதேவேளை, தமிழ்த் தேசி யத்துக்கான போராட்டத்தில் தமது பிள்ளைகளை மனமுவந்து இணைத்துவைத்த பெற்றோர்கள் கருணாவின் துரோகச் செயல்க ளுக்கு தமது பிள்ளைகளை பலி யாக்கிவிடாது அவர்களை மீட்டு எடுத்துச் செல்லுமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறையின ரால் இன்று வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

சமாதான முயற்சிகளில் இந்தியா நேரடி பங்கேற்பு

இலங்கையின் சமாதான முயற் சிகளில் இந்தியா இனிமேல் நேர டியாகப் பங்கேற்குமெனச் சிறி லங்காவின் புதிய வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர். தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன் ணி அரசால் முன்னெடுக்கப்ப டவுள்ள சமாதான முயற்சிகளில் இந்தியா நேரடியாகச் செயலாற்ற வுள்ளதாகவும், இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்ற நிலையில் அதுகுறித்த கருத்துக்களைத் தம்மால் கூற முடியாதெனவும் அவர் தெரிவித் துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் புதிய அரசாங்கத்துடன் பேசுவதற் கான சமிக்ஞைகளை ஏற்கனவே வெளிப்படுத்தியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ள அவர், விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த் தையைத் தமது அரசாங்கம் மிக விரைவில் ஆரம்பிக்கும் எனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணுவது குறி த்து ஜே.வி.பி.யும் மிகுந்த விருப் புடன் இருப்பதாகவும், பிராந்திய நாடு என்ற வகையில் இலங்கை யின் நலன்களில் பங்கு கொள் கின்ற உரிமை இந்தியாவுக்கு அதி கமாக உண்டெனவும் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி யால் முன்வைக்கப்பட்ட இந்தியா வுடனான பாதுகாப்பு மற்றும் வர்த் தக ஒப்பந்தங்களை தமது அரசு தொடர்ந்து முன்னெடுக்கவுள்ள தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பு க்குள் ஏற்பட்டிருக்கும் பிரச்சி னையை அவர்களின் உள்வீட்டுப் பிரச்சினையாகவே தமது அரசு கருதுவதாகவும் லக்ஷ்மன் கதிர் காமர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், விடுதலைப் புலிக ளுடனான சமாதானச் செயற்பாடு களில் நோர்வே தொடர்ந்தும் சமா தானத் தூதுவர்களாகச் செயற் படுவர் எனவும் லக்ஷ்மன் கதிர் காமர் கூறியுள்ளார்.

இதேவேளை புதிய வெளிவிவ கார அமைச்சராக பதவியேற்றுக் கொண்ட லக்ஷ்மன் கதிர்காமரை இலங்கைக்கான இந்தியத் தூது வர் நிருபம் சென் கடந்த 8ம் திகதி சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் கருத்துக் கூறிய இந்தியத் தூது வர் நிருபம் சென், இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் நேரடியாகப் பங்கேற்பதற்கான சில திட்டங்களை இந்தியா வைத்தி ருப்பதாகவும், அத் திட்டங்கள் தொடர்பான விபரங்களை இப் போதைக்கு வெளியிட முடியாதெ னவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சமாதானச் செயற்பாடு என்பது தனியே புரிந் துணர்வையும், பேச்சுவார்த்தைக ளையும் மட்டும் கொண்டதல்ல எனவும் குறிப்பிட்டுள்ள நிருபம் சென், அது மக்களின் விருப்புக்க ளையும், தீர்மானங்களையும் உள்ளடக்கிய ஒன்றெனவும் கூறி யுள்ளார்.

அத்துடன், இலங்கையின் சமாதானச் செயற்பாடுகளில் நேர டியாகப் பங்கேற்கும் வகையில் இலங்கை மக்களுக்கான புனர் வாழ்வு மற்றும் புனரமைப்பு நடவ டிக்கைகளில் இந்தியா பங்களிப் புச் செய்யவுள்ளதாகவும் நிருபம் சென் கூறியுள்ளார்.

அத்துடன், புனர்வாழ்வு மற் றும் புனரமைப்பின் மூலம் மக்க ளின் வாழ்வில் மாற்றத்தைக் கொண்டு வருவதன் மூலமே சமா தானச் செயற்பாடுகளைப் பலப்ப டுத்த முடியுமெனத் தாம் நம்புவ தாகவும் நிருபம் சென் கூறியுள் ளார்.

தேசியப் பட்டியல் எம்.பி.க்களாக ஜோசப், ஈழவேந்தன்

தமிழ்த் தேசிய கூட்டமைப் பின் தேசியப் பட்டியல் நியமன உறுப்பினர்களாக தமிழர் விடுத லைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவரும் முன்னாள் மட்டக்க ளப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராஜ சிங்கம், ஈழவேந்தன் ஆகிய இரு வரும் நியமிக்கப்பட்டுள்ளதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரி வித்தன.

இவர்கள் இருவரினதும் நியம னம் தொடர்பாக தமிழரசுக் கட்சி யின் தலைவர் மாவை சேனாதி ராஜா தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்கவிடம் கடந்த வியாழக்கிழமை அறிவித் துள்ளதாகவும் கூட்டமைப்பு வட் டாரங்கள் தெரிவித்தன.

அதேநேரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நியமனம் தொடர்பாக கடந்த 8ம் திகதி நண்பகல் வரை இடம் பெற்ற விசேட சந்திப்பின் போது அகில இலங்கை தமிழ்க் காங்கி ரஸ் தலைவரும் முன்னாள் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பி னருமான அப்பாத்துரை விநாயக மூர்த்தி, தமிழீழ விடுதலை இயக்க (ரெலோ) முதல்வர் என்.சிறீ காந்தா, அம்பாறை மாவட்ட முன் னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு ஆகி யோரின் பெயர்களும் பரிசீலிக் கப்பட்டன.

எனினும், இறுதியில் வடக் கிற்கு ஒருவர், கிழக்கிற்கு ஒருவர் என்ற அடிப்படையில் ஜோசப் பரராஜசிங்கம், ஈழவேந்தன் ஆகிய இருவரும் நியமிக்கப்பட்டுள்ள தாக கூட்டமைப்பின் முக்கியஸ் தர் ஒருவர் தெரிவித்தார்.

சங்கரிக்கு எம்.பி.பதவி – ஹெல உறுமய

யாழ். மாவட்டத்தில் போட்டி யிட்டுத் தோல்வியுற்ற தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரிக்கு ஜாதிக ஹெல உறுமய கட்சி தேசியப்பட் டியல் எம்.பி.பதவி வழங்கி உதவ முன்வந்திருக்கிறது.

எனினும், ஆனந்தசங்கரி ஹெல உறுமய நேசக்கரம் நீட்டியதற்கு நன்றி தெரிவித்துப் பதவியை ஏற்க மறுத்து விட்டார் என்று அறிய வருகிறது.

இப்போது இல்லாவிட்டாலும் எந்த நேரத்திலாவது ஆனந்தசங் கரி விரும்பினால் அவரைத் தனது கட்சியின் தேசியப்பட்டியல் எம். பி.யாக்குவதற்கு ஹெல உறுமய தயாராக இருக்கிறது என்று அக் கட்சியின் செயலாளர் வண.தம்ம லோக தேரர் தெரிவித்துள்ளார்.

இம்முறை தேர்தலில் வடக் கில் ஆனந்தசங்கரி ஜனநாயக ரீதியாகத் தோற்கடிக்கப்பட வில்லை. இதனால் தமிழ்ச் சமூ கத்தின் உண்மையான மக்களின் குரல் ஒலிக்கவில்லை.

இந்த நிலைமை காரணமாக ஆனந்தசங்கரியின் கொள்கைக ளும், அபிலாசைகளும் ஏதுவாக இருப்பினும் அவருக்கு ஜனநா யக ரீதியாக குரல் எழுப்புவதற் கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பது எமது கடமையாக இருக்கின்றது.

அதற்காக அவருக்கு தேசியப் படியல் அங்கத்துவத்துக்காக அழைப்பு விடுக்கலாம் என்ற நிலைப்பாட்டில் நாம் கலந்துரை யாடி வருகின்றோம் - என்று ஹெல உறுமயவின் ஊடகப் பேச் சாளர் கூறினார்.

ஜாதிக ஹெல உறுமயகட் சிக்கு கிடைக்கும் நாடாளுமன்ற ஆசனங்களுக்குப் பௌத்த பிக்கு களைத்தவிர எந்தவொரு சாதா ரண பிரஜையும் நியமிக்கப்பட மாட்டார்கள் என்று அந்தக் கட்சி தேர்தலுக்கு முன்னர் உறுதி மொழி வழங்கியிருந்தமை குறிப் பிடத் தக்கது.

கொழும்பில் மீண்டும் படையினர் சோதனை

கொழும்பில் பல பகுதிகளில் மீண்டும் படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட் டுள்ளன. சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு படையினர் மீண் டும் வாகனங்களை மறித்து சோத னையிடும் நடவடிக்கையும் ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

மீன்கடை கட்டடத் தொகுதிக் கருகில் உள்ள சோதனைச்சா வடி, புறக்கோட்டை மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகில் உள்ள சோதனைச்சாவடி, தெஹிவளை பாலத்துக்கு அருகில் உள்ள சோதனைச் சாவடி உட்பட பல இடங்களில் வாகனங்கள் மறிக்கப் பட்டுப் படையினரால் சோதனை செய்யப்பட்டு வருகின்றது.

இதேவேளை, இலங்கை ரூபவா ஹினி கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்துக்கு முன்பாகவும் முக்கிய பகுதிகளி லும் படையினர் பாதுகாப்பு கட மையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

"SHELVA" "ZUG"
Credit and Insurance
குறைந்த வட்டியில் அதிகூடிய
வங்கிக்கடன்
30% வீதத்தில் வாகனக் காப்புறுதி
சாரதிப் பத்திரம் இல்லாவிட்டாலும் 30 மட்டுமே...
வீட்டுக்காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
இலங்கையிலிருந்து சுவிஸ் வருபவர்களுக்கான மருத்துவக் காப்புறுதி
(Visa கிடைக்காவிட்டால் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்)
"SHELVA" "ZUG"
T.Thangarajah
Buonaserstr. 2
6343 Rotkreuz
Switzerland
Telefon
041 790 64 63
041 790 64 66
Fax
041 790 64 68
Natel
079 514 64 28

சந்திரிகாவின் அமைச்சரவை பதவியேற்றது

31 அமைச்சாகள், 21 பிரதி அமைச்சர்கள்

ஜே.வி.பி. கலந்துகொள்ளவில்லை

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் 31 அமைச்சர்களையும் 31 பிரதி அமைச்சர்களையும் கொண்ட அமைச்சரவை கடந்த 10ம் திகதி பதவியேற்றது. இந்தப் பதவியேற்பு நிகழ்வை ஜே.வி.பி. புறக்கணித்தது.



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பெருந்தெருக்கள் அமைச்சராக ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டார். தொடர்ந்து ஏனைய அமைச்சர்கள் பதவியேற்றனர்.

கடந்த 2ஆம் திகதி நடந்த தேர்தலில் கூடுதல் ஆசனங்களைப் பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அரசு கடந்த ஆறாம் திகதி உருவாக்கப்பட்டது. பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றார்.

அதன்பின் அமைச்சரவைக்கு ஆட்களைத் தெரிவுசெய்வதில் ஏற்பட்ட இழுபறிகள் காரணமாக அமைச்சர்கள் பதவியேற்பது தாமதமாகியது.

கடந்த 10 ம் திகதி காலை 10 மணிக்கு அமைச்சர் பதவியேற்பு இடம்பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டது. ஆனால், மாலையே பதவியேற்பு வைபவம் இடம்பெற்றது.

புதிய அமைச்சரவையில் பல புதிய முகங்களுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. புதிய அமைச்சுக்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் அமைச்சரவையில் இடம் வழங்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பிக்கு நான்கு அமைச்சுக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆனால், அவர்கள் பதவிப்பிரமாணம் செய்யவில்லை.

தமது அமைப்பின் உயிரிழந்தவர்கள் நினைவு தினம் இடம் பெற்றதால் தமது உறுப்பினர்கள் பதவியேற்கவில்லை என்றும் -

பிறிதொரு தினத்தில் அமைச்சர்களாக அவர்கள் பதவியேற்கவிருக்கின்றனர் என்றும்-அக்கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.



அமைச்சர்கள் விவரம்

கடந்த 10ம் திகதி பதவியேற்றுக் கொண்ட அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள அமைச்சர்களின் விவரம் வருமாறு:-

புதிய அமைச்சர்கள்

மஹிந்த ராஜபக்ச	- பெருந் தெருக்கள்.
அனுரா பண்டாரநாயக்க	- கைத் தொழில், சுற்றுலாத்துறை, முதலீட்டு ஊக்குவிப்பு.
டி.எம்.ஜயரத்ன	- தபால் மற்றும் தொலைத் தொடர்பு, உடரட்டை அபிவிருத்தி.
அமரசிறி தொடங்கொட	- பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள்.
நிமால் சிறிபால டி சில்வா	- சுகாதார நலன் மற்றும் போசாக்கு.
மங்கள சமரவீர	- துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து.
ஏ.ஏச்.எம்.பௌசி	- சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளங்கள்.
லக்ஸ்மன் கதிர்காமர்	- வெளி விவகாரம்.
ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே	- வர்த்தக, வாணிப, நுகர்வோர் விவகாரம்.
மைத்திரிபால சிறிசேன	- ஆற்றுவளம், ரஜரட்டை அபிவிருத்தி.
ஜோன் செனவிரத்ன	- நீதி, நீதி மறுசீரமைப்பு.
சுமேத ஜெயசேன	- மகளிர் அபிவிருத்தி மற்றும் சமூகநலன்.
கலாநிதி சரத் அமுனுகம	- நிதி.
மில்ரோய் பெர்னாண்டோ	- கிறிஸ்தவ மற்றும் நாடாளுமன்ற விவகாரம்.
ஜீவன் குமாரதுங்க	- விளையாட்டு, இளைஞர் விவகாரங்கள்.
பவித்ரா வன்னியாராட்சி	- சமூர்த்தி, வறுமை ஒழிப்பு.
அநுர பிரியதர்சன யாப்பா	- பெருந்தோட்டத்துறை.
திஸ்ஸ கரலியத்த	- சுதேச வைத்தியம்.
தினேஸ் குணவர்த்தன	- நகர அபிவிருத்தி நீர் விநியோகம்.
டக்ளஸ் தேவானந்தா	- விவசாய சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, இந்து விவகாரங்கள், தமிழ்மொழி மூலப் பாடசாலைகள் மற்றும் வடக்கு தொழில் பயிற்சி.
பேரியல் அஸ்ரப்	- வீடமைப்பு மற்றும் நிர்மாணத்தொழில், கிழக்கு மாகாண கல்வி மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி.
சுசில் பிரேமஜயந்த	- மின் மற்றும் எரிசக்தி.
அதாவுட செனவிரத்ன	- தொழில் உறவு, வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள்.
எஸ்.பி.நாவின்ன	- பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி.
பியசேன கமகே	- திறமை அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் தொழில்நுட்பக் கல்வி.
ஜானக பண்டார தென்னக் கோன்	- மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைப்புகள்.
பீலிக்ஸ் பெரேரா	- போக்குவரத்து.
சி.பி.ரத்நாயக்க	- மலையக உட்கட்டமைப்பு அபிவிருத்தி.
அதாவுல்லா	- கிழக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி.
றெஜினோல்ட் கூரே	- தகவல் மற்றும் ஊடகம்.
திஸ்ஸ விதாரண	- விஞ்ஞானம், தொழில்நுட்பம்.

பிரதி அமைச்சர்கள்

மங்கள சமரவீர	- கல்வி.
தினேஸ் குணவர்த்தன	- கல்வி.
சாலிந்த திஸாநாயக்க	- ஆற்றுவள அபிவிருத்தி ரஜரட்ட அபிவிருத்தி.
மகிபால ஹேரத்	- போக்குவரத்து.
ஜெகத் புஸ்பகுமார	- சமூர்த்தி, வறுமை ஒழிப்பு.
சமல் ராஜபக்ஷ	- பெருந்தோட்டக் கைத்தொழில்.
டிலான் பெரேரா	- விமான மற்றும் துறைமுகங்கள்.
டி.எம்.திஸநாயக்க	- கால்நடை அபிவிருத்தி.
குமார வெலிகம	- மின் மற்றும் எரிசக்தி.
ரி.பி.ஏக்கநாயக்க	- பெருந் தெருக்கள்.
பண்டு பண்டாரநாயக்க	- பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள்.
மகிந்தானந்த அலிக் கமகே	- மின் மற்றும் எரிசக்தி.
மஹிந்த யாப்ப அபயவர்தனா	- சுகாதார நலன், போசாக்கு.
மகிந்த அமரவீர	- நகர அபிவிருத்தி, நீர் விநியோகம்.
ஜெயரத்ன ஹேரத்	- பொதுப் பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு.
சேகு இஸகுதீன்	- தகவல் மற்றும் ஊடகம்.
டி.திஸேரா	- விமானத்துறை, துறைமுகங்கள்.
டி.திஸநாயக்க	- திறமை அபிவிருத்தி, தொழில்பயிற்சி, தொழில்நுட்பக் கல்வி.
ரஞ்சித் சிஸாம்பலப்பிட்டிய	- நிதி.
ரோகித அபயகுணவர்த்தனா	- தபால், தொலைத் தொடர்பு உடரட்ட அபிவிருத்தி.
அன்வர் இஸ்மயில்	- கிழக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி.
எஸ்.எம்.சந்திரசேன	- மலை யக சமூக உட்கட்டமைப்பு.
பிரேமலால் ஜெயசேகர	- ஆற்றுவள அபிவிருத்தி, ரஜரட்டை அபிவிருத்தி.
சந்திரசிறி கஜேந்திரா	- வீடமைப்பு மற்றம் நிர்மாணத் தொழில், கிழக்கு மாகாண கல்வி மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி.
ஜயதிஸ்ஸ ரணவிர	- மாகாண சபைகள் உள்ளூராட்சி சபைகள்.
பந்துலு பஸநாயக்க	- சூழல், இயற்கை வளங்கள்.
குணரத்ன வீரக்கோன்	- பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி.
வசந்த அரிக்ஜயவன்ன	- போக்குவரத்து.
சிறிபதி சூரியராட்சி	- விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம்.
சிறிபால கமலத்	- விவசாய சந்தைப்படுத்தல் அபிவிருத்தி.
றோகண திஸநாயக்க	- சமூர்த்தி, வறுமை ஒழிப்பு.

தமிழர்கள் புறக்கணிக்கப்படுவது இப்போது கதிர்காமருக்குப் புரிந்திருக்கும்

– மனோ கணேசன்

பிறப்பால் ஒரு தமிழர் என்பதை மறந்து கடந்த காலங்களில் செயற்பட்ட ஜனாதிபதியின் ஆலோசகரும், முன்னாள் வெளியுறவு அமைச்சருமான கதிர்காமருக்கு இப்பொழுதுதான் தான் ஒரு தமிழர் என்பது புரிந்திருக்கும் என, மேல்மாகாண மக்கள் முன்னணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குப் பெரும்பான்மையான வாக்குகளை அளித்ததன் மூலம், சிங்கள தேசிய இனத்தின் அரசியல் தலைமை இதய சுத்தியுடன் செயற்படாததைச் சிங்கள இனம் உலகிற்கு உணர்த்தியுள்ளது எனத் தெரிவித்தார்.

பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்பும் தேர்தல் பிரச்சாரங்களின் போதும் லக்ஷ்மன் கதிர்காமரே பிரதமர் என தெரிவித்துவந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர், இப்பொழுது அவரை நியமிக்கப் பின்னடிப்பது அவர் ஒரு தமிழர் என்பதற்காகவே என்பது நிரூபணமாகியுள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் 113 ஆவது ஆசனங்களை பாராளுமன்றத்தில் பெரும்பான்மையாகக் காட்ட வேண்டிய முன்னணி, ஹெல உறுமயவின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளுமேயானால், அது நாட்டின் சமாதானத்திற்கு முரணான தன்மையினை ஏற்படுத்தும் என வும் தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க. தேசிய பட்டியலில் தமிழர்கள்

ஐக்கிய தேசியக் கட்சி தனது 11 பேர் கொண்ட தேசியப் பட்டியலை கடந்த 10 ம் திகதி தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்கவிடம் கையளித்துள்ளது.

இந்தத் தேசியப் பட்டியலில் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த எட்டுப் பேர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

கே.என்.சொக்ஸி, டேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், நவீன் திஸாநாயக்க, எம்.எஸ்.செல்லச்சாமி, வீ.புத்திரசிகாமணி, பீ.ராதாகிருஷ்ணன், அலிசாஹிர் மௌலானா, அப்துல் பாயிஸ் கமர்தீன், ஹுசைன் அகமட் பைலா, ஸ்மாயில் முகமட் குத்துஸ், டபிள்யூ. பீ.எஸ்.புஸ்பகுமார இந்த 11 பேரில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு வழங்கப்பட்ட இரண்டு இடங்களுக்கும் எம்.எஸ். செல்லச்சாமியும், வீ.புத்திரசிகாமணியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்கப்பட்ட நான்கு இடங்களுக்கும் அப்துல் பாயிஸ், கமர்தீன், ஹுசைன் அகமட் பைலா, ஸ்மாயில் முஹமட் குத்துஸ், டபிள்யூ. பீ.எஸ்.புஸ்பகுமார ஆகியோர் நியமனம் பெற்றிருக்கின்றனர்.

மலையக மக்கள் முன்னணி சார்பில் பீ.இராதாகிருஷ்ணன் நியமிக்கப்பட்டிருக்கின்றார். ஐக்கிய தேசியக் கட்சியின் மூலம் முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்த அலிசாஹ்ர் மௌலானா நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தேசியப் பட்டியல் மூலம் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட முன்னாள் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் நியமிக்கப்படாமை பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

பாராளுமன்றத்தில் ஐ.தே.க. வுக்காக எப்போதுமே குரல் கொடுத்து வந்தவர். இதேவேளை சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் நியமிக்கப்பட்டிருக்கும் நால்வரில் கே.ஏ.பாயிஸைத் தவிர ஏனைய மூவரும் ஏப்ரல் 22 ஆம் திகதி பாராளுமன்றம் கூடும்போது பதவிப் பிரமாணம் செய்துகொண்ட தன் பின்னர் கட்சியின் தலைமைத்துவத்துக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிப்படி பதவிகளை இராஜினாமாச் செய்வர் என முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஹஸன் அலி தெரிவித்தார்.

கூட்டமைப்பின் அத்தனை உறுப்பினரும் ஒரே சக்தியாக செயற்பட உறுதி

தமிழ்த் தேசிய கூட்டமைப் பின் முதலாவது விசேட அமர் வில், மட்டக்களப்பு-அம்பாறை வேட்பாளர்கள் உட்பட அனைத்து உறுப்பினர்களும் கலந்துகொண் டார்கள்.

கூட்ட அமர்வில், தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் தலைவரைத் தெரிவு செய்யும் நிகழ்வு இடம் பெற்றது. அதிலே, திரு.ராஜவரோ தயம் சம்பந்தன் அவர்கள் கூட்ட மைப்பின் புதிய தலைவராக ஏக மனதாகத் தெரிவானார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் செய லாளர் நாயகமாக நீண்ட காலம் செயலாற்றி வந்ததுடன், திருகோ ணமலை தேர்தல் மாவட்டத்தின் முதன்மை வேட்பாளராகவும் திரு.சம்பந்தன் அவர்கள் போட்டி யிட்டு, மிகப்பெரிய வெற்றியீட்டி னார்.

மட்டக்களப்பு-அம்பாறை மாவ -ட்ட பாராளுமன்ற உறுப்பினர்க ளாகத் தெரிவானவர்கள், தொடர் -ந்தும், தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு என்ற ஒரு குடையின் கீழ், தமிழ்த் தேசியத்திற்காகவும் வடக்கு கிழக்கு இணைந்த ஒரு பிரதேசமே தமிழர்களின் பூர்வீக தாயகம் என்ற கோட்பாட்டிற்கு இணங்கவும், விடுதலைப் புலி களே தமிழர்களின் ஏகப் பிரதி நிதிகள் என்ற கொள்கையை ஏற் றுக்கொண்டும் நடப்பதென இக் கூட்டத்தில் இணக்கப்பாடு காணப் பட்டுள்ளதுடன், அதற்கான உறு தியும் வழங்கப்பட்டுள்ளது.

பின்னர் நடைபெற்ற இரண்டா வது அமர்வில், தேசியப் பட்டிய லில் பாராளுமன்றம் செல்லும் இருவர் யார் என்பது குறித்த உரை யாடல்கள் இடம்பெற்றது. மட்டக் களப்பில் போட்டியிட்டு, போதிய வாக்குகளைப் பெறமுடியாமற் போன, நீண்டகால உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உபதலைவருமான திரு.ஜோசப் பரராஜசிங்கம் அவர்களும், திரு. எம்.கே.ஈழவேந்தன் அவர்களும் இந்த இரு தேசிய ஆசனங்க ளுக்கு தெரிவு செய்யப்பட்டார் கள்.

இராணுவத்தால் பலவந்தமாக அழைத்துச் செல்லப்பட்ட கிழக்கு கூட்டமைப்பினர்

கூட்டமைப்பின் பாராளுமன் றக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுவதற்காக கொழும்பிற் குச் சென்றிருந்த மட்டக்களப்பு அம்பாறை பாராளுமன்ற உறுப்பி னர்கள், பலவந்தமாக, கடந்த 7ம் திகதி மட்டக்களப்பு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் எனச் செய் திகள் தெரிவிக்கின்றன.

சிறீலங்கா இராணுவம் இவர் களை மட்டக்களப்பிற்கு அழைத் துச் சென்றதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு சென்றிருந்த இப்பாரா ளுமன்ற உறுப்பினர்களுடன், கருணா குழுவைச் சேர்ந்த சிலர், இவர்களின் நடமாட்டத்தைக் கண் காணிக்கும் நோக்கில், இவர்களு டன் கூடவே சென்றிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள், கிளிநொச்சி செல்ல திட்டமிட்டி ருந்த நிலையில், இவர்கள் வன்னி செல்வதைத் தடுக்கும் நோக்கி லேயே, கருணா குழு, இவர்க ளைப் பலவந்தமாக மட்டக்களப்பு கொண்டு சென்றுள்ளதாகத் தெரி விக்கப்படுகின்றது.

மட்டக்களப்பைச் சேர்ந்த பொதுமக்கள், முக்கியஸ்தர்கள், அரசியல்வாதிகள், வன்னி சென் றால், தன்னைப் பற்றிய குற்றங் களை, துரோகச் செயற்பாடுகளை அறிந்துகொண்டுவிடுவார்கள் என அஞ்சுவதாலேயே, இவர்களின் வன்னிப்பயணத்திற்கு கருணா தடைவிதித்துவருவதாகத் தெரி விக்கப்படுகின்றது. ஏற்கெனவே இதுபோன்ற பயணத்திற்கு மட் டக்களப்பைச் சேர்ந்த முக்கியஸ் தர்கள் திட்டமிட்டபோதும், அவை தடுக்கப்பட்டமை இங்கு குறிப் பிடத்தக்கது.

வெளியேற்றப்பட்ட யாழ். வைத்தியர்கள் மீண்டும் கடமையில்

மட்டக்களப்பு வைத்தியசாலை யிலிருந்து கருணா குழுவினரால் வெளியேற்றப்பட்ட வட பகுதி வைத்தியர்களில் 7 பேர் மீண்டும் தமது கடமைகளை பொறுப்பேற் றுக்கொண்டுள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக் கின்றன.

கடந்த 30ம் திகதி மட்டக்க ளப்பு வைத்தியசாலையில் கட மையாற்றிய 7 வைத்திய நிபுணர் கள் உட்பட 20 வடபகுதி வைத்தி யர்கள் கருணா குழுவினரால் பல வந்தமாக வெளியேற்றப்பட்டனர்.

இந்த நிலையில் வைத்திய சாலை நிர்வாகத்தினர் வெளியே றிய வைத்தியர்களை மீண்டும் தமது கடமைகளுக்கு திரும்புமாறு விடுத்த வேண்டுகோளையடுத்தே வைத்தியர்கள் கடமைகளுக்கு மீண்டும் திரும்பிக் கொண்டிருக் கிறார்கள்.

இதேவேளை மட்டக்களப்பி லிருந்து வெளியேற்றப்பட்ட வட பகுதியைச் சேர்ந்த வர்த்தகர்க ளும் படிப்படியாக மீண்டும் மட்டக் களப்பிற்குத் திரும்பிக் கொண்டி ருக்கிறார்கள்.

அத்துடன் நகரிலுள்ள வடபகு தியைச் சேர்ந்த சில வர்த்தகர்க ளுடைய வர்த்தக நிலையங்கள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

இது இவ்வாறிருக்க புலிகளின் கட்டுப்பாட்டினுள் மட்டக்களப்பு வந்ததையடுத்து கிழக்குப் பல்க லைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களுக்குமான இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை ஏப்ரல் மாதம் 20ம் திகதி முதல் நடை பெறுமென பல்கலைக்கழக பதி வாளர் அறிவித்துள்ளார். விடுதி வசதி வழங்கப்பட்ட மாணவர்க ளையும் இதுவரை கடமைக்கு சமூகமளிக்காத உத்தியோகத்தர் களையும் எதிர்வரும் 15ம் திகதி பல்கலைக்கழகம் திரும்புமாறும் பதிவாளர் கேட்டுள்ளார்.

பரீட்சைகளுக்கான நேர அட்ட வணை www.esn.ac.lk என்ற பல் கலைக்கழக இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி வசம் 5 அமைச்சுக்கள்

ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க 5 அமைச் சுப் பொறுப்புகளை தொடர்ந்தும் தன்வசம் வைத்திருப்பாரென ஜனா திபதி செயலகம் நேற்று ஞாயிற் றுக்கிழமை தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சு, கல்வி மற்றும் உயர் கல்வி, புத்த சாச னம், அரசியலமைப்பு விவகாரம் மற்றும் வடக்கு புனர்வாழ்வு அமை ச்சு ஆகிய 5 அமைச்சுக்களுமே தொடர்ந்தும் ஜனாதிபதியின் பொறுப்பில் இருக்கும் என ஜனாதி பதி செயலகம் தெரிவித்துள்ளது.

இடம்பெயர்ந்த மக்களை தொண்டர் அமைப்புகளுடன் சேர்ந்து மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகள்

மட்டக்களப்பில் கருணா குழு வினருக்கு எதிராகத் தாக்குதலை ஆரம்பித்த விடுதலைப் புலிகள், சனிக்கிழமை காலை வாகரைப் பகுதியை முற்றுமுழுதாக தங்கள் கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்த அதேநேரம், வெள்ளிக்கிழமை நடைபெற்ற மோதலால் இடம் பெயர்ந்த பொதுமக்களை அவர் களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தும் நடவடி க்கையில் விடுதலைப்புலிகள் தீவிரமாக ஈடு பட்டு வருகின்றனர்.

வெருகல், கதிரவெளி, வாகரை, கண்டலடி, பனிச்சங்கேணி, பம்மி வெட்டுவான் பகுதிகளிலிருந்து வெளியேறிய 1 500 இற்கும் மேற் பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர் கள் பல்வேறு பகுதிகளிலும் தஞ் சமடைந்திருந்தனர்.

இவர்களைச் சொந்த இடங்க ளில் மீளக் குடியமர்த்தும் நடவ டிக்கைகளை உடனடியாக ஆரம் பிக்குமாறு உள்நாட்டு, வெளி நாட்டு அரச சார்பற்ற நிறுவனங் களுக்கும், மனிதாபிமான அமைப் புகளுக்கும் விடுதலைப்புலிகள் கோரிக்கை விடுத்ததையடுத்து, வெருகலுக்குத் தெற்கே வாக ரைப் பகுதி வரையிலான பிரதே சத்தில் அகதிகளை மீளக்குடிய மர்த்தும் நடவடிக்கைகள் துரித மாக நடைபெற்றது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங் கம் மற்றும் அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலய அதிகாரிக ளும், உள்ளூர் தொண்டர் நிறுவ னங்களும் இடம்பெயர்ந்த மக் களை மீளக்குடியமர்த்தும் நடவ டிக்கைகளில் கடந்த சனிக்கிழமை முழுநாளும் ஈடுபட்டிருந்தனர்.

மேற்படி பகுதிகளிலிருந்து வெளியேறிச் சென்றவர்களில் பெருமளவானோர் வாகரை, கதிர வெளி, பால்ச்சேனை, கண்டலடி, பகுதிகளில் மீளக் குடியேறியுள்ள தாகவும், குறைந்தளவானோரே தற்போது கோயில்கள், பாடசா லைகள் மற்றும் பொது இடங்க ளில் தஞ்சமடைந்திருப்பதாகவும் அடுத்த சில நாட்களுக்குள் இவர் களும் சொந்த இடங்களில் மீளக் குடி யமர்த்தப்பட்டு விடுவார்கள் எனவும் தொண்டர் அமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள் தெரிவித்த னர்.

இதற்கிடையில் மட்டக்களப் பில் இராணுவக் கட்டுப்பாடற்ற கொக்கட்டிச்சோலைப் பகுதிக்குச் செல்லும் பொதுமக்கள் கருணா குழுவினரின் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

உடற்சோதனை உட்பட அவர் கள் கொண்டுசெல்லும் பொருட்க ளும் நேற்று முதல் கடும்சோத னைக்கு உட்படுத்தப்படுவதாக வும் கைத்தொலைபேசிகள் பயன் படுத்துவதற்கும், மோட்டார் சைக் கிள் ஓட்டிகள் தலைக்கவசங்க ளைப் பயன்படுத்துவதற்கும் கடு மையான தடை விதிக்கப்பட்டிருப் பதுடன், பலர் அடையாள அட்டை பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டு வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கொக்கட்டிச்சோலைப் பகு திக்குள் விடுதலைப்புலிகள் ஊடு ருவி திடீர் தாக்குதல்களை நடத் திவிடலாம் என்ற அச்சத்திலேயே கருணா குழுவினர் தங்கள் மீது இவ்வாறான கெடுபிடிகளை மேற் கொண்டு வருவதாக மட்டக்க ளப்பு நகருக்கு வந்த மக்கள் தெரிவித்தனர்.

அனைத்து பதவிகளிலிருந்தும் அர்ஜுன ரணதுங்க விலகல்

விளையாட்டுத்துறை அமைச்சு வழங்கப்படாததால் அதிருப்தி அடைந்துள்ள கொழும்பு மாவட்ட சுதந்திர முன்னணியில் பாராளு மன்ற உறுப்பினரும் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவருமான அர்ஜுன ரண துங்க சுதந்திரக் கட்சியில் வகித்து வந்த பதவிகள் அனைத்திலிருந் தும் ராஜிநாமாச் செய்துள்ளார்.

நடந்து முடிந்த பொதுத்தேர்த லில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட அர்ஜுன ரணதுங்க பெற்ற விருப்பு வாக்குகளை விட, குறைந்தளவு விருப்பு வாக்குக ளைப் பெற்ற ஜீவன் குமாரதுங்க விற்கு விளையாட்டுத்துறை மற் றும் இளைஞர் விவகார அமைச்சு வழங்கப்பட்டுள்ள அதேவேளை அர்ஜுன ரணதுங்கவிற்கு விளை யாட்டுத் துறைப் பிரதியமைச்சர் பதவி கூட வழங்கப்படவில்லை.

பதிலாக அவருக்கு அனுர பண் டாரநாயக்கவின் கீழ் செயற்படும் உல்லாச மற்றும் முதலீட்டு அபி விருத்தித்துறை அமைச்சின் பிரதி யமைச்சர் பதவியே வழங்கப்பட்டி ருந்தது.

இதனால் அதிருப்தியடைந்த அர்ஜுன ரணதுங்க சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் வகித்த கோட் டைப்பகுதி அமைப்பாளர் பதவி யையும் சுந்திரக்கட்சி இளைஞர் அணியின் இணையமைப்பாளர் பதவியையும் ராஜிநாமா செய் துள்ளார்.

விளையாட்டுத்துறைக்கு சேவை செய்ய வேண்டும் என்ற நோக் கிற்காகவே தாம் அரசியலுக்குள் பிரவேசித்ததாகவும் இந்நிலையில் தனக்கு விளையாட்டுத்துறை அமைச்சுப் பதவி வழங்கப்படாத தாலேயே தனக்கு வழங்கப்பட்ட பிரதியமைச்சர் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளவில்லை எனவும் ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஈழமுரசு

சந்தா தொடர்புகளுக்கு:

Poobalam
22, Rue Perdonnet,
75010 Paris, France.
Tel: 01 40 05 95 15
E.Mail- poobalam_murasu@hotmail.com

தபாற் செலவுடன்

நாடுகள்	ஆறு மாதம்	ஓர் ஆண்டு
பிரான்ஸ்	40 Euro	75 Euro
சுவிஸ்	65 SFR	130 SFR
ஜேர்மனி	45 Euro	90 Euro
பிரித்தானியா	38 £	70 £
ஏனையநாடுகள்	45 Euro	90 Euro

காசுக்கட்டளை, காசோலையை `பூபாளம்' என்ற பெயருக்கு அனுப்பவும்.

பெயர்:.....
முகவரி: .....
.....
தொலைபேசிஎண்: .....
கையொப்பம்: .....
நாள்: .....

சந்தா (தபாற் செலவுடன்)
12 மாதம் ☐
6 மாதம் ☐

சுதந்திரக் கட்சி-ஜே.வி.பி. முரண்பாடு! எங்கே போகும் இந்தப் பயணம்?

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் முரண்பாடுகள் தலைதூக்கியுள்ளன. எதிர்வரும் 22 வியாழக்கிழமை பாராளுமன்றம் கூடுவதற்கு முன்பாகவே முன்னணியில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையே கருத்து மோதல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இதனால் பதின்மூன்றாவது பாராளுமன்றத்தின் ஆயுள்? நீண்டகாலம் கொண்டதாக அமையாது போல் தோன்றுகின்றது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற கூட்டமைப்பை அமைத்தாலும் ஜே.வி.பி பாராளுமன்றத்தில் தனித்துவமாகவே செயற்படும் என அதன் தலைவர் சோமவன்ச தெரிவித்துள்ளார். அதேவேளை அமைச்சர்கள் தெரிவின் போது ஜனாதிபதி ஜே.வி.பியுடன் கலந்தாலோசிக்கவில்லையென விமல் வீரவன்ச குற்றம் சாட்டியிருக்கின்றார். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்து 62 உறுப்பினர்களில் 60 பேருக்கு அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் பதவி வழங்கப்பட்டிருப்பதாகவும் அது தமது கொள்கைக்கு முரணானது எனவும் விமல் வீரவன்ச சுட்டிக்காட்டியிருக்கின்றார். தமது 39 உறுப்பினர்களில் எட்டுப்பேர் மாத்திரமே அமைச்சர்கள் பிரதியமைச்சர்கள் பொறுப்பை எடுத்திருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

அதேவேளை ஜே.வி.பியோடு கலந்தாலோசித்த பின்னர் தான் அமைச்சுப் பொறுப்புக்கள் குறித்து தான் தீர்மானித்ததாகவும் தேவையற்ற குற்றச்சாட்டுக்களை ஜே.வி.பி. சுமத்துவதாகவும் ஜனாதிபதி கண்டித்திருக்கின்றார். ஜனாதிபதியின் ஆலோசகரும் அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமர் முன்னணியின் செயலாளர் சுசில் பிரேம்ஜயந்த ஆகியோர் (இன்று)




ஒரு புறத்தில் ஜே.வி.பியும் மறுபுறத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் தத்தமது கட்சிகளின் தனித்துவத்தை பாதுகாப்பதற்காக விடுக்கும் கோரிக்கைகள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் எதிர்காலத்தையே கேள்விக் குறியாக்கியிருக்கின்றன.

திங்கட்கிழமை ஜே.வி.பி. உறுப்பினர்களை சந்தித்து முறுகல் நிலை தொடர்பாக கலந்துரையாடியிருக்கின்றனர். அப்போது ஜனாதிபதி தெரிவித்த மேற்படி கண்டனத்தை அமைச்சர் கதிர்காமர் விமல் வீரவன்சவிடம் கூறியபோது அது தொடர்பாக பலத்த வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டன. சுதந்திர முன்னணியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தை கூட்டி ஆராயவேண்டும் என்றும் விமல் வீரவன்ச தெரிவித்திருக்கின்றார். ஜனாதிபதியை நேரடியாகச் சந்திப்பதற்கும் ஜே.வி.பி மறுப்புத் தெரிவித்திருக்கின்றது. தமக்குரிய நான்கு அமைச்சு மற்றும் பிரதியமைச்சுப் பொறுப்புக்களை தற்போதைக்கு ஏற்றுக்கொள்வதில்லையெனவும் ஜே.வி.பி. முடிவு செய்திருக்கின்றது.

இந்த முறுகல் நிலையை தீர்த்துவைப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் உள்ள சில சிரேஷ்ட உறுப்பினர்கள் கடுமையான முயற்சி எடுத்த போதும் ஜே.வி.பி. அதற்கு இணங்கி வருவதாக தெரிவில்லை. சித்திரைப்புத்தாண்டுக்கான நீண்ட விடுமுறையையும் பொருட்படுத்தாது சுதந்திர முன்னணியின் சில உறுப்பினர்கள் கொழும்பில் தங்கியிருந்து சமரச முயற்சிகளில் இரவு பகலாக அதுமட்டுமல்ல ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற கூட்டமைப்பை உருவாக்குவதற்கு ஜே.வி.பி. ஏன் முற்பட்டது என்ற காரணங்களை பலரும் பலவாறு ஏற்கனவே கூறியிருந்தனர். (இப்பந்தியிலும் அது பற்றி எழுதப்பட்டது.)

இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் முரண்பாடுகள் அதிகரித்துள்ளன. ஜே.வி.பியுடன் பலவிடயங்களில் ஜனாதிபதி விட்டுக்கொடுத்து செயற்படுவதனால் தமது கட்சியின் செல்வாக்கு குறைவடைந்து போவதாக சிரேஷ்ட உறுப்பினர்களான றிச்சாட் பத்திரான, சந்தன கத்திரியாராச்சி, றெஜி ரணதுங்கா ஆகியோர் ஜனாதிபதியின் நடவடிக்கைகளை கண்டித்துள்ளனர். சுதந்திரக்கட்சியின் மத்திய குழுக்கூட்டம் நடைபெற்ற போது பல உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்திருந்தனர். காலி மாவட்டத்தில் ஜே.வி.பியினரே அதிக ஆசனங்களைப் பெற்றதாகவும் அதனாலேயே அந்த மாவட்டத்தில் போட்டியிட்ட றிச்சாட் பத்திரான தோல்வியடைந்ததாகவும் ஜனாதிபதிக்கு எடுத்துக்கூறப்பட்டுள்ளது. அது மாத்திரமல்ல ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கோட்டை என வர்ணிக்கப்பட்ட அத்தனகல தொகுதி குருநாகல், ஹம்பாந்தோட்டை வயம்ப ஆகியவற்றில் ஜே.வி.பி உறுப்பினர்களே அதிக ஆசனங்களைப் பெற்றிருக்கின்றனர். சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் தோல்வியடைந்திருக்கின்றனர். ஆகவேதான் ஜனாதிபதி நாட்டின் இரண்டாவது தேசியக்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் செல்வாக்கை தொடர்ந்து தக்கவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். .இல்லையேல் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து விலகி மீண்டும் பாராளுமன்றத்தில் தனித்துச் செயற்படப் போவதாக 20 உறுப்பினர்கள் தெரிவித்திருக்கின்றனர்.



பொதுத்தேர்தல் முடிவடைந்து ஒருவாரம் கழிந்த நிலையில் ஜனாதிபதிக்கு தலையிடிகள் அதிகரித்திருக்கின்றன. ஒரு புறத்தில் ஜே.வி.பியும் மறுபுறத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் தத்தமது கட்சிகளின் தனித்துவத்தை பாதுகாப்பதற்காக விடுக்கும் கோரிக்கைகள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் எதிர்காலத்தையே கேள்விக் குறியாக்கியிருக்கின்றன. தொடர்ந்து பதவியிலிருக்க வேண்டும் என்பதற்காகவே ஜனாதிபதி ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைக் கலைத்து பொதுத்தேர்தலையும் நடத்தியிருந்தார் என்பது வெளிப்படையானது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் அதற்காகவே தோற்றுவிக்கப்பட்டிருந்தது. அதனால் லாபம் அடையப்போவது ஜே.வி.பி. தான் என்றும் அரசியல் ஆய்வுகள் கூறியிருந்தன. (இது பற்றி ஏற்கனவே இப்பந்தியில் எழுதப்பட்டது) தற்போது அதனை நிரூபிக்கும் வகையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் எழுந்திருக்கின்ற முரண்பாடுகள் அவர்களின் உள்நோக்கங்களை படம்பிடித்துக்காட்டுகின்றன.

ஜே.வி.பியின் செல்வாக்கை தென்மாகாணத்தில் குறைக்கவேண்டும் என்பதற்காகவே மகிந்த ராஜபக்ஷவிற்கு பிரதமர் பதவி வழங்கப்படவேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஜனாதிபதியோடு இறுக்கமாக நின்றனர். இதுவும் ஜே.வி.பிக்கு சங்கடத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. மகிந்த ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் பாராளுமன்றத்தில் குறிப்பாக அமைச்சரவை அந்தஸ்த்துப் பெற்ற நிர்வாகத்துறையில் செயற்படுவதற்கு ஜே.வி.பி உறுப்பினர்கள் மறுத்துவருகின்றனர். கடந்த 12 ஆவது பாராளுமன்றத்தில் கூட எதிர்க்கட்சித் தலைவர் பதவியை மகிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்ற போது அவரின் தலைமையின் கீழ் ஜே.வி.பி. செயற்படவில்லை. பாராளுமன்ற சம்பிரதாயங்களையும் மீறி எதிர்க்கட்சி தலைவருக்கு கட்டுப்படாத தம்மிஷ்டப்படியே செயற்பட்டு வந்தனர். எதிர்க்கட்சி வரிசையில் எத்தனை கட்சிகள் இருந்தாலும் யார் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்றாரோ அவரின் கட்டளைகள்படியே அனைத்து உறுப்பினர்களும் நடந்து கொள்ள வேண்டும் என்பது பாராளுமன்ற சம்பிரதாயம் ஆகும். தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக் கூட எதிர்க்கட்சித் தலைவரின் சம்பிரதாய நடவடிக்கைகளை ஏற்று நடந்துகொண்டது. ஆனால் ஜே.வி.பி அவை அனைத்தையும் புறக்கணித்தது. இந்நிலையில் தற்போது ஆளும் கட்சியாக இவர்கள் மாறியிருக்கின்றார்கள். பிரதமர் பதவியை ஏற்றிருக்கும் மகிந்த ராஜபக்ஷவை பாராளுமன்ற சம்பிரதாயங்களின்படி ஜே.வி.பி. எவ்வாறு மதிக்கப் போகின்றது என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது.

ஓட்டுமொத்தமாக கூறுவதாக இருந்தால் விடுதலைப்புலிகளையும் அவர்களது போராட்ட வல்லமையையும் அவர்களுக்குரிய சர்வதேச செல்வாக்கையும் எப்படியாவது குறைத்துவிட வேண்டும் என்ற நோக்கில் செயற்பட்ட ஜனாதிபதிக்கு தற்போது எழுந்துள்ள உள்வீட்டு பிரச்சினை அவரின் எதிர்கால அரசியலுக்கே ஆப்பு வைத்துவிடும் போல் தெரிகின்றது. சர்வதேச அரங்கில் புலிகளைப் பற்றிய தவறான பிரசாரத்திற்கு அப்போது கதிர்காமரை பயன்படுத்திய ஜனாதிபதி தற்போது ஜே.வி.பியுடனான முறுகல் நிலையைத் தீர்ப்பதற்கு கதிர்காமரை பயன்படுத்துவது வேடிக்கையானது. ஸ்ரீலங்காவின் தற்போதைய அரசியல் நிலை புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும். இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்ற நிலைப்பாட்டிற்கு அப்பால் உட்கட்சி முரண்பாடுகளைத் தீர்ப்பதிலேயே கவனம் செலுத்தப்படுகின்றது. இதில் வேடிக்கை என்னவென்றால் விடுதலைப்புலிகளை ஓரங்கட்டுவதற்காக இந்தியா முன்நின்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை தோற்றுவித்தது. ஆனால் அந்த முன்னணிக்குள் ஏற்பட்டிருக்கின்ற முரண்பாடு இந்தியாவிற்கும் தலையிடியாகவே இருக்கின்றது.

– கொழும்பிலிருந்து
ஊரோடி


ஈழமுரசு
பூபாலம்
POOBALAM WEEKLY

சமாதான வண்டி நேர்தீசை நகருமா?

மிகுந்த இழுபறிக்கு மத்தியில் ஜனாதிபதி சந்திரிகாவின் அமைச்சரவை கடந்த 10ம் திகதி சனிக்கிழமை பதவியேற்றுள்ளது. இந்த பதவி ஏற்பு நிகழ்வு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் எதிர்காலம் குறித்தான பல கேள்விகளை எழுப்பியுள்ளது. முக்கியமாக இக்கட்சியின் முக்கிய பங்காளிகளான ஜே.வி.பியினர் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளாததுடன் தங்கள் பல்வேறு அதிருப்திகளையும் வெளிப்படுத்தி சந்திரிகாவுக்கு கடிதமூல எச்சரிக்கை விடுத்துள்ளதுடன் மத்திய குழுக்கூட்டத்தை உடன் கூட்டுமாறும் கோரிக்கைவிடுத்துள்ளனர். அத்துடன் முன்னாள் இலங்கைக் கிரிக்கட் நட்சத்திரம் தனக்கு விளையாட்டு அமைச்சு தரவில்லை என்பதற்காக இந்த நிகழ்ச்சியிலிருந்து வெளிநடப்பு செய்துள்ளதுடன், தற்போதுதான் கட்சியிலிருந்தே விலகுவதாகவும் அறிவித்துள்ளார். இதே வேளை நாட்டின் பிரதமராக தெரிவு செய்யப்பட்ட மகிந்த ராஜபட்ஷவிடம் ஜனாதிபதி சந்திரிகா வெற்றுத்தாளில் பதவிவிலகல் கையொப்பத்தையும் பெற்றுக்கொண்டிருக்கிறார். இது சந்திரிகாவின் தூரநோக்கு தேவை கருதியதாகவோ அல்லது ஜே.வி.பியின் அழுத்தத்திற்கு அடிபணிந்து ராஜபக்ஷவின் பதவியை எந்த நேரத்திலும் பறிக்கவேண்டிவரும் என்பதாலோ இருக்கலாம். இந்நிலையிலே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் அரசு அமைப்பதற்கு முன்பாகவே முரண்பாடுகளும் குழப்பங்களும் முற்றிப் பெருத்துவிட்டது. முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தேர்தல் முடிவுக்குப் பின் குறிப்பிட்டது போல இந்த அரசாங்கத்தின் ஆயுள் மிகவும் சொற்பமே என்பது தற்பொழுதே நிதர்சனமாகிவருகிறது.

இலங்கையின் வரலாற்றிலேயே என்றுமில்லாதவாறு பௌத்த தீவிரவாதிகளின் கையாலே தற்போதைய அரசு சிக்குண்டுள்ள நிலையிலே சமாதான முன்னெடுப்புகள் குறித்தான சந்தேகங்களும் எழுந்துள்ளது. கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக சமாதான வண்டியை ஒருவாறாக இழுத்துவந்த ரணில் அரசு சந்திரிகா அரசிடம் கயிறைக் கொடுத்துவிட்டு பார்வையாளராக மாறிவிட்ட நிலையில் சமாதான வண்டியை எப்படியாவது இழுத்துச் செல்ல வேண்டிய கட்டாய நிலையில் சந்திரிகா இருக்கின்றார். தனது அரசாங்கத்தையே ஒரு கட்டமைப்புக்குள், சீர் நிலைக்குள் கொண்டுவர முடியாமல் தத்தளித்துக்கொண்டிருக்கும் சந்திரிகா எப்படி சமாதான வண்டியை இழுத்துச் செல்லப்போகிறார் என்பதே தற்போதைய கேள்வியாக எழுந்துள்ளது. இதற்கிடையே இந்திய அரசு சமாதான முயற்சிகளில் தீவிர அக்கறை செலுத்தப் போவதாக அறிவித்திருப்பதும் சமாதான முன்னெடுப்புகளின் எதிர்காலம் குறித்ததான பல சந்தேகங்களை எழுப்புகின்றது.

கிழக்கில் அண்மைக்காலமாக தொடர்ந்து கொண்டிருந்த கருணாவின் பூச்சாண்டி விளையாட்டுக்களும் முடிவு நிலைக்கு வந்துவிட்ட நிலையில் சமாதான வண்டி சரியான திசைவழி நகர்த்திச் செல்லப்படுமா அல்லது வடக்கு கிழக்கு மக்களின் ஒருமித்த குரலாய் இறுதிக் குரலாய் ஒலித்த உரிமைக்குரலின் போராட்டம் மக்கள் போராட்டமாய் வெடிக்கப்போகின்றதா?



நன்றி: டெய்லி மிரர்

மத இனவாதிகளின் வலைக்குள் சீங்கள மக்கள் மீண்டும் சீக்கிக்கொண்டனரா?

சிறீலங்காவில் உறுதியான அரசாங்கமொன்றை அமைக்க தெளிவான வாக்குகளை அளிப்பதில் சிங்கள மக்கள் மீண்டும் தவறிழைத்துள்ளனர் மீண்டும் ஒரு தேர்தல் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டு விடுமோவென எண்ண வேண்டிய நிலமை உள்ளது. இலங்கையில் ஒரு தேர்தலை நடாத்துவதற்கு சுமார் அறுபது கோடிரூபா செலவாகிறதென கணிப்பிடப்பட்ட போதிலும் இம்முறை நடந்த தேர்தலுக்கு எண்பத்தைந்து கோடி ரூபா செலவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அவ்வளவும் மக்களது வரிப்பணம்! இப்படி வருடத்திற்கொரு தேர்தல் வந்தால் நாடு அபிவிருத்தியில் பாதாளத்தை நோக்கித்தான் செல்லவேண்டி வரும்.

இது இவ்வாறிருந்த போதிலும், சிங்கள மக்கள் இத்தடவை மத இனவாதிகளுக்கு அதிகளவு வாக்குகளை அளித்திருப்பதானது, சிங்கள மக்கள் மீது சிறுபான்மை மக்கள் சந்தேகம் கொள்ள வழி அமைத்துள்ளது. சிறீலங்கா சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி கூட்டணிக்கு அதிகப்படியான வாக்குகள் கிடைத்துள்ளமைக்கு அப்பால் மத வாதக் கடும்போக்குடைய ஜாதிக ஹெல உறுமய கட்சிக்கு கணிசமான அளவு வாக்குகள் சிங்கள மக்களால் வழங்கப்பட்டமை மதவாத, இனவாத கட்சிகளின் கருத்துக்களுக்கு சிங்கள மக்கள் எடுபட்டுப்போய் விட்டனரா? என்கிற கேள்வியினை தோற்றுவித்துள்ளது. பௌத்த பிக்குகளால் வழிநடத்தப்படும். தலைமை தாங்கப்படும் ஜாதிக ஹெல உறுமய கட்சி தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் தோற்றம் பெற்ற ஒரு கட்சி என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இக்கட்சி நாடாளுமன்றத்தில் ஒன்பது ஆசனங்களைப் பெற்றுள்ளமை இலங்கை அரசியலில் சிறுபான்மை மக்கள் எதிர்நோக்கப் போகும் ஆபத்துக்களை வெளிச்சமிட்டுக்காட்டுகிறது.

ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமும், போர்நிறுத்தமும் கடந்த இரண்டாண்டுகளாக இருதரப்பினரிடையிலுமான சாவுகளை தவிர்த்து வந்துள்ளது. அதற்கும் அப்பால் இந்த சமாதான காலத்தின் நன்மைகளை தமிழ்மக்கள் சரியான முறையில் அனுபவிக்கவில்லை. ஆனால் சமாதானத்தின் தன்மைகளை சிங்கள மக்கள்தான் முறையாக அனுபவித்தனர் எனலாம். ரணில் விக்கிரம சிங்க இந்த சமாதான காலத்தை எவ்வாறெல்லாம் கையாண்டார். அவரின் நகர்வுகளெல்லாம் எதை நோக்கியதாக இருந்தது என்பது பற்றியெல்லாம் அரசியல் தெரிந்தவர்களுக்கு நன்கு புலப்படும். ஆயினும் நடைபெற்ற தேர்தலின் போது, புலிகளுடன் பேச்சுவார்த்தையை தொடர்வது, இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அமைப்பிலான தீர்வொன்றை காண்பது என்ற வகையிலேயே சிங்கள மக்கள் மத்தியில் தனது பரப்புரையினை மேற்கொண்டிருந்தார். சமாதானமும் அபிவிருத்தியும் என்பதே அவர் முன்வைத்த கருத்துக்களாக அமைந்தது.

சந்திரிகா தலைமையிலான கூட்டமைப்பு இருவேறு கருத்துக்களை சிங்கள மக்கள் மத்தியில் பரப்புரை செய்து வந்தது. சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் குரலில் ஒன்றும், ஜே.வி.பியின் குரலில் ஒன்றுமாக அவை வெளிவந்தன. கூட்டணியின் ஒருமித்த குரலாக அது ஒலிக்கவில்லை இப்பரப்புரைகள் தொடக்கத்தில் சிங்கள மக்களை ஒரு குழப்பத்திலாழ்த்தின. விடுதலைப் புலிகளோடு பேசுவது, அதிகாரப் பரவலாக்கம் மூலம் தீர்வொன்றை முன்வைப்பது என சுதந்திரக்கட்சி கூறி வருகிறது. ஜே.வி.பி. அதிகாரப் பரவலாக்கம் என்பதை எதிர்த்து வருகிறது. பிரதேச சபை மட்டத்திலான அதிகாரப்பகிர்வே இனப்பிரச்சினைக்கான தீர்வு என ஜே.வி.பி. கூறி வருகிறது. இரண்டுக்குமிடையில் பெரிய வித்தியாசமுள்ளன.

இறுதிக்கட்டத்தில் சிங்கள மக்களுக்கு இவ்விரு அணிகளும் கூறிய கருத்துக்களில் ஒன்றுமட்டும் ஒரு அதிர்வினை ஏற்படுத்தியிருக்கிறது. அது - ரணில் சமாதான காலத்தில் அதிகமான நன்மைகளை புலிகளுக்கு வழங்கிவிட்டார் என்பதும் காலப்போக்கில் நாட்டைப்பிரித்து புலிகளுக்கு வழங்கப்போகிறார் என்பதும் தான் சாதாரண சிங்கள மக்கள் யுத்தத்தை விரும்பவில்லை, சமாதானத்தையே விரும்புகிறார்கள் என்பது உண்மையே ஆனால், சமாதானம் தமிழ் மக்களுக்கு அதிகம் எதையும் வழங்கிவிடக்கூடாது என்கிற மனநிலையும் அவர்களுக்கு உள்ளது. சமாதான காலத்தில் சிங்கள மக்களுடன் நெருக்கமாகப் பழகியவர்களுக்கு இவ்வுண்மை விளங்கும். தமிழ்மக்கள் எதிர்பார்க்கும் அவர்களது உரிமைகள் வழங்கப்படாமல் கிடைக்கும். `வெற்றுச் சமாதானத்`தையே சிங்களவர்கள் விரும்புகிறார்கள். அவர்கள் விரும்பும் இந்த 'வெற்றுச் சமாதான'த்திற்குள் கரைந்து போக தமிழ்மக்கள் இனித்தயாராக இல்லை. இரத்தமும் கண்ணீருமாகத் தமிழர்கள் இருபது வருடகாலம் போராடியது இந்த வெற்றுச் சமாதானத்திற்காக அல்ல என்பதை சிங்களவர்கள் எப்போது புரிந்து கொள்ளப்போகிறார்கள்?

> இரத்தமும் கண்ணீருமாகத் தமிழர்கள் இருபது வருடகாலம் போராடியது இந்த வெற்றுச் சமாதானத்திற்காக அல்ல என்பதை சிங்களவர்கள் எப்போது புரிந்து கொள்ளப்போகிறார்கள்?

புது வருடதினத்தையடுத்து புலிகளோடு பேச்சுக்களை ஆரம்பிக்கப் போவதாக சனாதிபதி சந்திரிகா அறிவித்துள்ளார். எதிர்வரும் பாராளுமன்றத்தில் தனது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டிய நிலை ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி அரசிற்கு உள்ளது. இதற்கு ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவையே அரசு எதிர்பார்திருக்கிறது. ஜாதிக ஹெல உறுமய கடும் நிபந்தனையின் பேரிலேயே தனது ஆதரவினை வழங்க முன்வரும். புலிகளோடு மட்டும் பேசுவது என்பதை இந்த ஜாதிக ஹெல உறுமய கடுமையாக எதிர்க்கிறது. வெளிப்படையாகக் கூறாவிடினும், யுத்தம் செய்து புலிகளை அழிக்கவேண்டும் என்பதே ஜாதிக ஹெல உறுமயவின் உள்ளார்ந்த நிலைப்பாடு.

யுத்தத்தை விரும்பவில்லை சமாதானத்தையே விரும்புகிறோம். புலிகளோடு பேச்சுவார்த்தை நடத்துவோம் என வெறுமனே கூறும் இந்த புதிய கூட்டணி அரசு எவ்வாறு அதனைமேற்கொள்ளப் போகிறதென்பது தான் மிகப்பெரிய கேள்வியாகவுள்ளது. பேச்சுவார்த்தை தொடர்பான சந்திரிகாவின் கருத்து நிலை, ஜே.வி.பி யின் கருத்து நிலை, ஹெல உறுமயவின் கருத்து நிலை என்பன ஒரே நேர்கோட்டில் நிற்கப்போவதில்லை. இவற்றிற்கப்பால் இந்தியாவின் மதியுரைகளையும் சந்திரிகா வேண்டிநிற்கிறார்.


சில ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள் ஜே.வி.பி, ஹெல உறுமய போன்ற கட்சிகள் எதிர்கட்சியாக இருக்கும் போது இனவாதம் பேசலாம், பல விடயங்களுக்கு முட்டுக்கட்டை போடலாம் அவை ஆட்சியதிகாரத்திற்கு வந்தால் பொறுப்புடன் நடந்து கொண்டால் அது வரவேற்கக்கூடியது தான். ஆனால், அவ்விதம் நடக்கும் என்பதற்கான சாத்தியக்கூறுகள் மிகக்குறைவாகும்.

இலங்கை அரசியலின் அடுத்தடுத்த கட்டங்கள் எவ்வாறு நகரப்போகின்ற தென்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

வன்னியிலிருந்து விவேக்.

ஜெயலலிதா, அத்வானி பதவி விலக நெடுமாறன் வேண்டுகோள்

மதிமுக பொதுச் செயலர் வைகோ மற்றும் அவரது ஆதர வாளர்கள் கைது செய்யப்பட்டது தவறு என்று பொடா மறு ஆய் வுக்குழு தீர்ப்பு அளித்துள்ளதால்



தமிழக முதல்வர் ஜெயலலிதாவும், மத்திய உள்துறை அமைச்சரும் துணைப் பிரதமருமான அத்வானி யும் ராஜிநாமா செய்ய வேண்டும் என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் கூறி னார்.

புதுவையில் நிருபர்களிடம் அவர் வெள்ளிக்கிழமை கூறியது:

'வைகோவும் அவரது அதர வாளர்களும் நானும் என்னுடைய் நண்பர்களும் பொடா வழக்கில் ஒன்றரை ஆண்டுகளாகச் சிறை யில் அடைக்கப்பட்டோம். இத னால் உடல், உள்ளம் பாதிக்கப் பட்டன.

தற்போது சகாரியா தலைமை யிலான பொடா மறு ஆய்வுக்குழு தெளிவான தீர்ப்பை அளித்துள் ளது. இதை வரவேற்கின்றோம். இத் தீர்ப்பு எங்கள் மீது உள்ள வழக்குகளுக்கும் பொருந்தும் என்று எதிர்பார்க்கிறோம்.

இத் தீர்ப்பின் காரணமாகத் தமி ழக முதல்வர் ஜெயலலிதாவும், பொடா சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தாமல் கண்காணிப்ப தாக உறுதி அளித்த உள்துறை அமைச்சர் பதவி வகிக்கும் துணைப் பிரதமர் அத்வானியும் ராஜிநாமா செய்யவேண்டும்.

இத் தீர்ப்பைத் தமிழக அரசு ஏற்க மறுத்தால் நடவடிக்கை எடு -க்கப் பொடா மறு ஆய்வுக்குழு வுக்கு அதிகாரம் உண்டு. மத்திய அரசுக்கும் அதிகாரம் இருக்கிறது. நடவடிக்கை எடுக்கத் தவறினால் நாங்கள் நீதிமன்றத்தை அணுகு வோம்.

தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட் டம் நடத்த தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்காகப் பொலிசார் முன்னுரிமை கொடுக்கின்றனர். எங்கள் இயக்கம் உட்பட எதிர்க் கட்சியினருக்கு வாய்ப்பு மறுக்கப் படுகிறது. இவ் விடயத்தில் தேர் தல் கமிசன் தலையிடவேண்டும். உண்மையான பிரச்சினையைத் திசைதிருப்பத்தான் 'காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி வெளி நாட்டைச் சேர்ந்தவர்' என்ற பிரச் சினை எழுப்பப்படுகிறது. வரும் தேர்தலில் மதச்சார்பற்ற அரசு வேண்டுமா மதச்சார்புள்ள அரசு வேண்டுமா என்பதுதான் மக்கள் பிரச்சினை.

மதச்சார்பற்ற அரசு வேண்டும் என்றுதான் எங்களைப் போன்ற வர்கள் வலியுறுத்துகிறோம்' என் றார் நெடுமாறன்.

கருத்துக் கணிப்பிற்குத் தடைவிதிக்க முடியாது -சொராப்ஜி!

தேர்தல் முடிவுகள் குறித்து வெளியிடப்படும் கருத்துக் கணிப் புக்கள், வாக்காளர் கணிப்புக்கள் ஆகியவற்றிற்குத் தடை விதிக்க முடியாது என்று மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் சோலி சொராப்ஜி கூறியுள்ளார். கருத்துக் கணிப்புகளுக்குத் தடை விதிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணை யத்திடம் அனைத்துக் கட்சிகளும் ஒருமித்து விடுத்த வேண்டுகோளை அடுத்து, கருத்துக் கணிப்புக்க ளுக்குத் தடை விதிக்கும் சட்டப் பிரகடனத்தை வெளியிடுமாறு மத் திய அரசிற்குத் தேர்தல் ஆணை யம் பரிந்துரை செய்திருந்தது.

கருத்துக் கணிப்பைத் தடை செய்து சட்டப் பிரகடனம் வெளி யிடலாமா என்பது குறித்து சட்ட ஆலோசனை வழங்குமாறு தலைமை வழக்கறிஞர் சோலி சொராப்ஜியைச் சட்ட அமைச்ச கம் கேட்டுக்கொண்டது.

அதற்குப் பதிலளித்துக் கடிதம் எழுதியுள்ள சோலி சொராப்ஜி, கருத்துக் கணிப்புகளுக்குத் தடை விதிப்பது, இந்திய அரசியல் சட்டம் வழங்கியுள்ள கருத்துச் சுதந்திரத்திற் குத் தடை விதிப்பதாகும் என்று கூறி, அப்படிப்பட்ட சட்டப் பிரகடனம் அரசியல் சட்ட விரோதமானதாக ஆகும் என்று விளக்கியுள்ளார்.

எனவே, கருத்துக் கணிப்புக ளுக்கோ, வாக்களித்துவிட்டு வரும் வாக்காளர்களிடம் கருத்தறிந்து வெளியிடப்படும் வாக்கு கணிப் பிற்கோ தடை விதித்துச் சட்டம் வராது.

பொடாவிலிருந்து வைகோ விடுவிப்பு: புலிகளுக்கு ஆதரவாக பேசியது வன்முறையாகாது!

மதிமுக பொதுச் செயலர் வைகோ மற்றும் 8 மதிமுக நிர் வாகிகளைப் பொடா சட்டத்தின் கீழ் கைது செய்தது தவறான நட வடிக்கை என்று மத்திய பொடா மறு ஆய்வுக் குழு தீர்ப்பளித்துள் ளது.

பொடா சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் வழக்கிலிருந்து அவர்களை விடுவிக்குமாறும் அரசு வழக்கறிஞரை அறிவுறுத்த வேண்டும் என்று தமிழக அர சுக்கு ஆய்வுக்குழு உத்தரவிட் டுள்ளது.

2002ம் ஆண்டு யூலை 11ம் திகதி வைகோ பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுச் சிறை யில் அடைக்கப்பட்டார். சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்குப் பின் னர் அவர் ஜாமீனில் விடுதலை யானார்.

இதனைத் தொடர்ந்து 2003ம் ஆண்டு பெப்ரவரி மாதம் பொடாச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட கைது நடவடிக்கைகள் குறித்து விசாரிக்கப் பொடா மறு ஆய்வுக் குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவினர் ஓராண்டாக வழக்கினை விசாரித்து வைகோ தொடர்பான வழக்கின் தீர்ப்பை நேற்று அளித் தனர்.

அந்தத் தீர்ப்பில், 'இலங்கைத் தமிழர்களுக்கு வாய்மொழியா கவோ, தார்மீக ரீதியாகவோ ஆதர வளிப்பது எந்த வகையிலும் விடு தலைப் புலிகள் இயக்கத்திற்கு ஆதரவளிப்பதாக ஆகாது. மேலும் இலங்கைத் தமிழர்களுக்கு ஆத ரவாகப் பேசுவது பொடா சட்டத் தின் 21வது பிரிவன் கீழ் குற்றம் அல்ல. வைகோவின் பேச்சு தீவி ரவாதத்தைத் தூண்டுவதற்கான எந்த ஆதாரமும் இல்லை. அதே போல் மேலும் 8 மதிமுக தலை வர்கள் பேச்சும் பொடா சட்டப் பிரி வின் கீழ் வராது. இதன் அடிப்ப டையில் வைகோ மற்றும் 8 பேர் மீது பொடா சட்டத்தின் கீழ் வழக் குத் தொடர்ந்ததற்குப் பூர்வாங்க ஆதாரம் இல்லை என்று இந்த ஆய்வுக் குழு முடிவு செய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொடா மறு ஆய்வுக் குழுவின் தீர்ப்பு குறித்து மதுரையில் பிரச் சாரத்தில் ஈடுபட்டிருந்த வைகோ அளித்த பேட்டியில், தமக்கு இது மகிழ்ச்சி அளிப்பதாகக் கூறினார். நீதி இறுதியில் வெல்லும் என்று தான் கைதுசெய்யப்பட்டது முதல் கூறிவந்ததாகவும், ஈழத் தமிழர்க ளுக்காகத் தமிழ்நாட்டில் குரல் எழுப்பலாம் என்ற உரிமையைப் பெற்றுத் தந்த மன நிறைவோடு இருப்பதாகவும் கூறினார். இதே வேளை இந்தியாவில் பொடா சட் டத்தின் கீழ் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு விதிக்கப்பட்டுள்ள தடையைப் பொடா மறு ஆய்வுக் குழுவின் தலைவர் நீதிபதி சகா ரியா தலைமையிலான குழு தொடர்ந்தும் மீள் பரிசீலனை செய்து வருகிறது.

இந்தியாவில் புலிகள் இ[illegible]ம் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு கோரித் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமா றன் இந்திய அரசிடம் செய்திருந்த மனுத்தாக்கலின் அடிப்படையில் இந்த மீள்பரிசீலனை இடம்பெற் றுவருவது குறிப்பிடத்தக்கது.

"பொய்களையே ஆயுதமாகக்கொண்டு நடத்தப்படும் சிங்களத்தின் விசமத்தனமான கருத்துப்போரை முறியடிப்பதே இன்று நாம் எதிர்கொண்டு நிற்கும் முக்கிய சவாலாகும். எமது இயக்கத்தின் வெகுசன ஊடகங்களே இந்தப் பெரும்பணியைச் செய்யவேண்டும்" – தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள்

தமிழ்த் தேசிய ஊடகங்களிற்கான வளர்ச்சி நிதி

தேசிய ஊடகங்களுக்கு வலுச்சேர்க்க சிறப்பு நல்வாய்ப்புச் சீட்டிழுப்புத்திட்டம் 2004

உலக விடுதலைப் போராட்டங்களின் முனைப்பான வளர்ச்சிப் போக்கில் தொடர்பூடகங்கள் பெரும் பங்காற்றி வருவது நாமறிந்ததே. இந்த வகையில் எமது தேசியத்தின் உண்மை நிலையை எமது மக்களின் உரிமைக் குமுறலை வெளிப்படுத்தவும், பேரினவாதம் எமது விடுதலைப் போராட்டத்தின் மீது அள்ளித் தெளித்துவரும் அவதூறுப் பரப்புகளை முறியடிக்கவும் ஊடகங்கள் அவசியமானவை.
சிறீலங்கா அதிகாரபீடத்தின் திட்டமிட்ட பரப்புரை நடவடிக்கைகளை உடனுக்குடன் ஆதாரங்களுடன் இனங்காட்டுகின்ற தேவை எமக்கு என்றும் உள்ளது. மாறிமாறி வரும் சிறீலங்கா அரசுகள் திட்டமிட்ட பொய்ப்பரப்புரைகளை மேற்கொள்வதற்கு எண்ணிறைந்த நிதியினை வாரியிறைத்து வருவது நீங்கள் அறிந்ததே. இவ்வாறு சிங்கள அரசுகள் மேற்கொள்ளும் பொய்பரப்புரையினை நம்பி மேற்குலகு கடந்த காலங்களில் எமது விடுதலைப் போராட்டத்திற்கு பங்கம் விளைவிக்கும் சில நடவடிக்கைகளை எடுத்திருந்தது.
அடக்கப்பட்ட மக்களின் உரிமைப் போராட்டமாய் இடம்பெற்றுவரும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத் தன்மையை, சிறீலங்கா அரசுகளின் கபட நரித்தனத்தை வெளிப்படுத்துவதற்கு எமது தேசிய ஊடகங்களினை வலுப்படுத்த வேண்டியது உலகெங்கிலும் பரந்து வாழுகின்ற தமிழ் மக்களின் கடமையாகும்.
தேசிய ஊடகங்களின் வளர்ச்சிக்காக சிறப்பு நல்வாய்ப்புச் சீட்டிழுப்பு ஒன்றை நடாத்தவுள்ளோம். இச் சீட்டிழுப்பை தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நாளான சனவரி பதினைந்தாம் நாள் தொடக்கம் மே முதலாம் நாள் வரைநடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
எல்லா நாடுகளிலும் விசேடமாக நியமிக்கப்பட்ட தொண்டர்கள் ஊடாக இச்சீட்டுக்கள் வழங்கப்படவுள்ளன. உங்கள் இல்லங்கள் தோறும் நாடி வருகின்ற தொண்டர்ரகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.



தாயக மண்மீட்புப் போரில்
எம்மோடு தோளோடு தோள் நின்று
கைகொடுத்த தமிழ் உறவுகளே!
கருத்துப்போரிலும் வெற்றியை
எமதாக்க கைகொடுத்திடுவீர்!!!

இந்நல்வாய்ப்பு சீட்டிழுப்பிற்கான பரிசுகள்:

முதலாவது பரிசு: 5 நபர்களுக்கான ஒரு வாரகால தமிழீழச் சுற்றுலா
(விமானச் சீட்டுக்கள், தங்குமிட வசதி, போக்குவரத்து, உணவு என்பன உள்ளடங்கலாக)

இரண்டாவது பரிசு: 3 நபர்களுக்கான ஒரு வாரகால தமிழீழச் சுற்றுலா.
(விமானச் சீட்டுக்கள், தங்குமிட வசதி, போக்குவரத்து, உணவு என்பன உள்ளடங்கலாக)

மூன்றாவது பரிசு: 2 நபர்களுக்கான 5 நாள் தமிழீழச் சுற்றுலா
(விமானச் சீட்டுக்கள், தங்குமிட வசதி, போக்குவரத்து, உணவு என்பன உள்ளடங்கலாக)

இது தவிர கவர்ச்சிகரமானதும் பயன்நிறைந்ததுமான 20 ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும்.

ஊடகங்களின் வளர்ச்சி தாயக விடுதலைக்கு வலுச்சேர்க்கும்

இந்தியத் தூதுவர் நிருபம் சென்னைக்கு பகிரங்க கடிதம்

ஐயா!

ஸ்ரீலங்காவின் அரசியல் யாப்பின்படி நிறைவேற்று அதிகாரம் கொண்டவர் ஜனாதிபதி. பெயர் அளவில் அதிகாரம் உடையவர் பிரதமர். அதன்படி சந்திரிக்கா நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருக்கின்றார். ஆனால் தமிழ் மக்களுக்கு ஒரு சந்தேகம் எழுந்துள்ளது. சமீபகால அரசியல் நடவடிக்கைகளை அவதானிக்கும் போது இந்த சந்தேகம் வலுத்தது. சந்திரிக்கா பெயரளவு அதிகாரியாகவும் தூதுவர் பொறுப்பை வகிக்க வந்த நீங்கள் ஸ்ரீலங்காவின் நிறைவேற்று ஜனாதிபதியாகவும் கடமையாற்றுகின்றீர்கள் போல் தெரிகின்றது. இராஜதந்திரிக்கு உரிய மரபுகள் பொறுப்புக்கள் என்பவற்றுக்கு அப்பால் ஸ்ரீலங்காவில் உங்கள் செயற்பாடு அவ்வாறு அமைந்திருக்கின்றது. விடுதலைப் புலிகளை ஏகபிரதிநிதிகளாக ஏற்று தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வலுங்குவதில் ஸ்ரீலங்கா அரசாங்கம் விரும்புவதில்லை. அதற்குத் தூண்டுதலாக இந்தியாதான் இருக்கின்றது என்பது உண்மை. ஸ்ரீலங்கா தொடர்பான இந்தியாவின் அரசியல் பொருளாதார கொள்கைகளை நீங்கள் சிறந்த முறையில் முன்னெடுக்கின்றீர்கள்.

கடந்த இரண்டு ஆண்டுகாலமாக ஜக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை உருவாக்குவதில் நீங்கள் கணிசமான பங்கு அளப்பரியது. அதன்படி பொதுத் தேர்தலிலும் முன்னணி வெற்றிபெற்று தற்போது ஆட்சியை அமைக்கப் போகின்றது. ஆனால் நீங்கள் எந்த நோக்கத்திற்காக எதனை அடிப்படையாகக் கொண்டு சுதந்திர முன்னணியை உருவாக்கினீர்களோ அதற்கு நேர்மாறாக அவர்கள் தற்போது முரண்பட்டு நிற்கின்றார்கள். புலிகளை ஒதுக்க வேண்டும் தமிழர்களின் சுயநிர்ண உரிமையை நசுக்க வேண்டும் என்பதற்கு அப்பால் அவர்கள் தம்மிடையே பதவிப் போட்டியில் இழுபறிப்படுகின்றார்கள். அதற்கும் அப்பால் நீங்கள் முன்னணிக்குப் பெரும்பான்மை ஆசனங்களை அமைத்துக் கொடுப்பதற்காக ஏனைய அரசியல் கட்சிகளோடு பேரம்பேசுகின்றீர்கள். கேவலம் தூதுவர் என்ற அந்தஸ்த்தில் இருந்து விலகி ஸ்ரீலங்காவின் அடிமட்ட அரசியல்வாதிகளுடனும் பாதாள உலகக் கோஷ்டிகளுடனும் நீங்கள் உங்கள் இல்லத்தில் கலந்துரையாடி வருகின்றீர்கள். எதற்காக? தமிழ் மக்களுக்குள்ளேயே இருக்கக் கூடிய தமிழ்த்தேசிய எதிரிகளுடன் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் விருந்துபசாரம் வைக்கின்றீர்கள். எதற்காக?

ஸ்ரீலங்காவின் நலனுக்காகவா? அல்லது இந்திய நலனுக்காகவா? அல்லது நீங்கள் எதிர்பார்க்கின்ற தீர்வு வடக்கு கிழக்கில் அமையவேண்டும் என்பதற்காகவா? இதில் எது என்பதை சில சமயங்களில் உங்களுக்கு கூட புரியாமல் இருக்கலாம். ஏனெனில் அந்தளவிற்கு ஸ்ரீலங்காவின் தென்பகுதி அரசியல்வாதிகளின் மன நிலைகளை உங்களால் புரிந்துகொள்ள முடியாது. விடுதலைப் புலிகளின் வளர்ச்சி உங்கள் இந்தியாவிற்கு அச்சுறுத்தலாக இருக்கலாம் எனக் கருதி நீங்கள் ஸ்ரீலங்காவில் உள்ள எந்தப் பிசாசுகளுடனும் கூட்டுச்சேர முற்படலாம். ஆனால் உங்கள் உள்ளக்கிடக்கைகளை உணர்ந்து அந்தப் பிசாசுகள் செயற்படாது என்பதை நீங்கள் உணரவில்லையா? இந்தியப் பருப்பு வேண்டாம். இந்திய வெங்காயம் வேண்டாம் என்று கோஷமிட்டு இந்தியத் தூதரகத்திற்கு முன்னால் நின்று ஆர்ப்பாட்டம் செய்தவர்கள்தான் ஜே.வி.பி. ஏன்? பௌத்த பிக்குகளும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆனால் இன்றோ அவர்களுடன் நீங்கள் உறவாடுகின்றீர்கள்.

உங்கள் ஆதரவையும் உங்கள் பணத்தையும் பயன்படுத்தி அந்தப் பிசாசுகள் ஸ்ரீலங்காவில் அரசியல் வளர்க்கின்றன. பாராளுமன்ற ஆசனங்களை எட்டிப் பிடிப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். அவர்களின் எதிர்பார்ப்பு நிறைவேறியும் விட்டது. ஆனால் உங்கள் கொள்கை நிறைவேறியதா? இல்லை. தமிழ்த்தேசியக் கட்டமைப்பை சீர்குலைக்கும் உங்களின் எத்தகைய திட்டங்களும் விடுதலைப் புலிகள் முன்னால் தவிடு பொடியாகிவிடும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். கருணா விவகாரம் அதற்கு ஓர் உதாரணம். உங்கள் நாட்டில் வறுமையும் வரட்சியும் இருக்கும்போது ஸ்ரீலங்காவில் பெருந்தொகைப் பணத்தை செலவழித்து சண்டித்தன அரசியலுக்கு இடமளிக்காதீர்கள்.

சந்திரிக்கா பெயரளவு அதிகாரியாகவும் தூதுவர் பொறுப்பை வகிக்க வந்த நீங்கள் ஸ்ரீலங்காவின் நிறைவேற்று ஜனாதிபதியாகவும் கடமை யாற்றுகின்றீர்கள் போல் தெரிகின்றது.

தென்பகுதியில் உள்ள அந்த பிசாசுகளை விட தமிழ்மக்கள் உங்களை நேசிக்கின்றார்கள். உங்களுக்கு எதிராக கொழும்பில் நின்றோ அல்லது யாழ்ப்பாணத்தில் நின்றோ அவர்கள் ஒருபோதும் ஆர்ப்பாட்டம் செய்ததில்லை. இந்தியா நீதியான முறையில் செயற்பட வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றார்கள். இந்திய அமைதிப் படையின் அட்டகாசங்களைக் கூட யுத்தகால சம்பவங்களாகக் கருதி அவர்கள் மறந்து விட்டார்கள். ஆனால் நீங்களோ இன்னமும் அடிமனதில் வஞ்சம் சாதிக்கின்றீர்கள். சில சமயங்களில் இந்திய அரசாங்கத்தின் புலிகள் மீதான கொள்கைக்கு மாறாக நிருபம் சென்னின் தனிப்பட்ட ஆசாபாசங்கள்தான் ஸ்ரீலங்கா அரசியலில் குழப்பநிலைக்குக் காரணமோ என்றும் எண்ணத் தோன்றுகின்றது. எவ்வாறாயினும் ஸ்ரீலங்கா அரசியலை ஸ்திரமற்றதாக்கி இந்தியாவின் அரசியல் பொருளாதார நலன்களுக்கு நீங்கள் வலுச்சேர்த்து விட்டீர்கள். இது உங்களுக்கு வெற்றியாக இருக்கலாம். ஆனால் அது வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கு ஒரு வழிப்புணர்ச்சியையும் தமிழ்த்தேசிய உணர்வையும் மேலும் ஊட்டியிருக்கின்றது.

– கொழும்பிலிருந்து **தமிழ்நேசன்**

மரண அறிவித்தல்



Brighe Murgenthaler
சுப்பிரமணியம்

Biel மாநிலத்தில் வசித்து வந்த Brighe Murgenthaler சுப்பிரமணியம் 09.04.2004 வியாழக்கிழமை அன்று அகால மரணமானார்.

இவர் Robert Verena தம்பதிகளின் அன்பு புதல்வியும், தமிழீழத்தைச் சேர்ந்தவரும் சுவிற்சர்லாந்தில் வசித்து வந்தவருமான ரவிராஜ் சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், ராஜு, மிகா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

திருமதி Brighe Murgenthaler சுப்பிரமணியம் புரட்டஸ்தாந்து Fachstelle Migration நிறுவனத்தில் பணிபுரிந்தவரும், சுவிஸ் அரச உயர்நிலை அதிகாரி களோடு கடமையாற்றியவரும், குறிப்பாக ஈழத்தமிழ் மக்கள் மீது அளப்பரிய பற்றும் பாசமும் கொண்டு அயராது பணிபுரிந்தவர். தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் அதிக நம்பிக்கை கொண்டு அரும்பணி ஆற்றிய தோடு மட்டுமல்லாமல் சுவிஸ் அரச மட்டத்துடனும் தமிழ் மக்களுக்குமான உறவுப்பாலத் தொடர்பாளராகவும் இருந்து பணியாற்றியவர். அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் சுவிஸ் கிளை, தமிழர் புனர்வாழ்வுக் கழகம், பேர்ண் சிறீ கல்யாண சுப்பிரமணியர் ஆலயம், ஊடகப் பணிமனை சுவிஸ் ஆகியவற்றுடன் நெருங்கிய உறவுகளை வைத்திருந்ததோடு மட்டுமல்லாமல் அந்நிறுவனங்களின் வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றியவர் என்பதும் குறிப் பிடத்தக்கதாகும்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு சுவிஸ் வாழ் தமிழீழ மக்கள் ஆழ்ந்த கவலை கொண்டிருப்பதோடு தமது அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள் கின்றனர். அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் வியாழக்கிழமை 15.04.2004 காலை 10 மணிமுதல் மதியம் 1 மணிவரை Biel Friedhof தகன சாலையில் அரச, அரச சார்பற்ற மற்றும் ஆன்மீக தொண்டர் ஸ்தாபனங்கள், பொது அமைப்புக்கள், மக்கள் பிரதிநிதிகள் ஆகியோரின் அஞ்சலி நிகழ்வின் பின் தகனம் செய்யப்படும்.

மேலும் அன்னாரின் துயரச் செய்தி கேட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் சுவிஸ் கிளை, தமிழர் புனர்வாழ்வுக் கழக சுவிஸ் கிளை என்பன ஆழ்ந்த கவலை கொண்டிருப்பதோடு தமது அனுதாபச் செய்திகளையும் அன்னாரது குடும்பத்துக்குத் தெரிவிக்க விரும்புபவர்கள் 032 365 8113 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

தகவல்– ஊடகப் பணிமனை சுவிஸ்.

Pub.Sw.

மாற்றுக்குறையாத அசல் 22 கரட் முத்திரை பொறிக்கப்பட்ட
உத்தரவாதத்துடன் கூடிய தங்க நகைகளின் உற்பத்தியாளர்கள்

சுஜி ஜுவல்லரி
SUJI JEWELLERY



சுஜி ஜுவல்லரியின்
தங்கநகை சேமிப்புத் திட்டம் 2004

தங்கநகை உற்பத்தியில் அனைவர் மனங்களிலும் இடம்பிடித்த சுஜி ஜுவல்லரி 2004ம் ஆண்டில் தங்கநகை சேமிப்புத் திட்டம் ஒன்றினையும் உங்களுக்கு அறிமுகப் படுத்துகிறது.
ஜனவரி முதலாம் திகதி முதல் எம்முடன் தொடர்புகொண்டு அங்கத்தவர்களாக சேர்ந்து கொள்ளலாம். இந்த தங்கநகை சேமிப்புத் திட்டத்திற்கு ஒவ்வொரு மாதமும் நீங்கள் செலுத்த வேண்டியது 150Sfr மட்டுமே. அதேபோல் ஒவ்வொரு மாதமும் குலுக்கல் முறையில் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுபவர் 1800Sfr பெறுமதியான நகைகளைப் பெற்றுக்கொள்வதோடு அவர் தொடர்ந்து பணம் செலுத்தத் தேவையில்லை. மாதமொருவர் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படும் அதேவேளை தொடர்ந்து சந்தாதாரராக இருப்போர் விசேட சலுகைகளோடு வருட இறுதியில் 1800Sfr பெறுமதியான தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம். அதிஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படுவோரின் விபரம் IBC தமிழிலும் மற்றும் ஈழமுரசு பத்திரிகையிலும் வெளியிடப்படும்.

Suji Jewellery
Neuengass - Passage 3,
3011 Bern

Telefon 031 311 20 49
Mobile 079 241 52 02

ஜீவ்வரை இசைக்குழு



உங்கள் மங்களகரமான வைபவங்களுக்கு
இசைமழை பொழிந்து
சிறப்பித்திட என்றென்றும்

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்:
அருமை – 0664866681
மாறன் – 0664447207
குகானந்தன் – 0664819995

Pub-Fr-506



S.K. Rajan Jewellers

24, Rue Perdonnet, 75010 Paris.

தொடர்புகளுக்கு: Tel: 0142096821 / Port: 0614831536
உரிமையாளர்: S.RAJAN - M°: La Chapelle / Gard du Nord.

உங்கள் மங்களகரமான வைபவங்களுக்குத் தேவையான நகைகளை குறித்த தவணையில், அசல் 22K இல் நியாயமான விலையில் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கை ஸ்தாபனம்

எஸ்.கே.ராஜன் ஜுவலர்ஸ்

ஓம் சாந்தா வங்கி கடன்

....நம்பிக்கை....நாணயம்....உத்தரவாதம்....

சுவிஸில் உங்கள் அவசரப் பணத்தேவையைப் பூர்த்திசெய்ய
இலவசமாக நீங்கள் இருக்கும் மாநிலத்திலேயே
குறைந்த வட்டி Insurans வசதிகளுடன் வங்கிக்கடன்
ஒழுங்கு செய்துதரப்படும்



Ohm Santha
Sonnhaldenstr. 8
CH 6122 Menznau
Luzern, Switzerland


கடந்தபல ஆண்டுகளாக இயங்கிவரும் Ohmsantha வங்கிக்கடன் மூலம் நீங்களும் கடன்வசதி பெற்று உங்கள் பணத்தேவையைப் பூர்த்தி செய்ய விரும்புகிறீர்களா? எங்களுடன் தொடர்புகொள்ளுங்கள். உங்களுக்குத் தேவையான அனைத்து ஆலோசனைகளும் அறியத்தரப்படும்.

Ohmsantha@freesurf.ch

Telefon: 041 493 03 83
Natel: 079 283 51 82
Fax: 041 493 03 84








வாடிக்கையாளர்களுக்கு அன்பான ஓர் அறிவித்தல்

தர்ஷனாஸ் உணவகத்திலும்
பிரஷா உணவகத்திலும்


உங்களுடைய விசேஷ தினங்களுக்கோ, வேறு தினங்களுக்கோ சரி,
வேறு கொண்டாட்டங்களாக இருப்பினும் சரி
உடனடியாக நாடவும் இவ்விரண்டு உணவகத்திற்கும்.
தங்களுக்கான அரிய சந்தர்ப்பம் காத்திருக்கின்றது.

குறிப்பு:

200 சாப்பாடுகளுக்கு மேல் எடுத்தால் 3.00 ஈரோப்படி பெற்றுக்கொள்ளலாம்
(5 மரக்கறி+ வடை+பாயாசம்+பப்படம் +இரசம் மட்டுமே)
200 சாப்பாடுகளுக்கு மேல் எடுத்தால் 3.50 ஈரோப்படி பெற்றுக்கொள்ளலாம்.
(இறைச்சிக்கறி+ 2 மரக்கறி+கோழிப் பொரியல் மட்டுமே)
200 நோல்ஸ்களுக்கு மேல் எடுத்தால் 60 சென்ரீம் ஈரோப்படி பெற்றுக்கொள்ளலாம்.
100 தண்ரூரிக் கால் எடுத்தால் 2.00 ஈரோப்படி பெற்றுக்கொள்ளலாம்.
100 தோசைக்கு மேல் எடுத்தால் 50 சென்ரீம் ஈரோப்படி பெற்றுக்கொள்ளலாம்.
100 இடியப்ப சாப்பாட்டிற்கு மேல் எடுத்தால் 5.00 ஈரோப்படி பெற்றுக்கொள்ளலாம்.
(இறைச்சிக்கறி+ 2 மரக்கறி+ முட்டை+ சம்பல்+ சொதி+ சலாத்து பிரி)

உடனடியாக நாடவும் தர்ஷனாஸ், பிரஷா உணவகங்களிற்கு








தர்ஷனாஸ் உணவகம்
23, Rue Perdonnet, 75010 Paris
Tél: 01 40 05 08 36- 06 80 02 93 41
M°: La Chapelle *ou* Stalingrad

பிரஷா உணவகம்
54 Rue Louis Blanc, 75010 Paris
Mo: La Chapelle *ou* Louis Blanc
Tel: 01 53 26 39 41

14 - 20 ஏப்ரல் 2004

முரசு.இதழ்

வாழ்வு - இலக்கியம் - பண்பாடு

புத்தக மதிப்புரை

அ.இரவியின் காலமாகி வந்த கதை

◆ பரணி




ஒரு படைப்பு மீதான மதிப்பீட்டை நிகழ்த்தும் பொழுது ஒரு விமர்சகர் படைப்பாளியிடமிருந்து விமர்சனத்தை ஆரம்பிக்காமல் தன்னிலிருந்து விமர்சனத்தை ஆரம்பித்தல் அகவய விமர்சனம் எனச் சுட்டப்படுகிறது. அதாவது: படைப்பாளி என்ன கூறியிருக்கிறான் என்று சிருஷ்டியிலிருந்து தன் விமர்சனத்தை / மதிப்பீட்டை ஆரம்பிக்காமல் தன்னிலை சார்ந்து விமர்சித்தல். இது விமர்சனவியலில் அவ்வளவாக ஏற்கப்படாத நடைமுறை. ஆனால் இரவியின் `காலமாகிவந்த கதை` மீதான எனது வாசிப்பு ஓர் அகவய விமர்சனத்திற்குரிய தன்மைகளைக் கொண்டிருப்பது தவிர்க்க முடியாததாகிறது.

காலமாகிவந்த கதைக்குள் புகுவதற்கு முன் என்னிலை சார்ந்த தன்னிலை விளக்கமொன்றும் ஈழத்து இலக்கியத்தில் இன்றைய நிலை குறித்த பதிவு ஒன்றும் அவசியம் என உணர்கிறேன்.

I

நான் எழுதுவதை நிறுத்தி நீண்ட நாட்களாகிவிட்டது. எழுத்தென்பது அவ்வளவு சுலபமான விசயமல்ல என்பதை யும் மொழி என்பது நான் நினைத்துக் கொண்டிருப்பது போல் நினைத்தவுடன் கைக்குள் அடங்கும் கச்சா பொருள் இல்லை என்பதையும் நான் எழுதத்தொடங்கிய கொஞ்ச நாட்களிலேயே புரிந்துகொண்டேன். எழுத்து என்னிடம் நிறைந்த அறிவையும், கடின உழைப்பையும் கோரிநின்றது. பன்முகப்பட்ட வாசிப்பும் பல்துறை பயிற்சியும், ஆழமான தேடலையும் மேலதிகமாக எதிர்பார்த்தது. வாசித்தேன் - தேடினேன். தேடலும் வாசிப்பும் தொடர்ந்தது.... ஆனால் மொழி என் கைக்குள் அகப்படுவதாக இல்லை. அது பாத ரசத்தின் பண்புகளை எனக்கு உணர்த்தியது. பாதரசத் திவலை போல் நழுவி உருண் டோடி எனக்கு விளை யாட்டுக் காட்டுகிறது.



இன்னொரு கிளைக் காரணமும் உள்ளது. அது புலம்பெயர் வாழ் வில் ஒரு சாதாரண வுகதி எதிர்கொள்ளும் அரசியல், பொருளா தார நடைமுறைப் பிரச் சினைகள் / இடர்பாடு கள். அது அதன் விளி -ம்புவரை என்னைத் துரத்திக்கொண்டுவந்து விட்டிருக்கிறது. அதிலி ருந்து மீள்வதற்கும் எழுத்தை ஒத்திப்போட வேண்டியிருந் தது.

தற்போது மொழி கொஞ்சம் கைக்குள் அகப்பட்டது போல் தெரிகிறது. நிஜமா... பிரமையா தெரியவில்லை.

இந்த இடைவெளியில் உலக இலக்கியங்கள் தொடங்கி உள்ளூர் இலக்கியங்கள்வரை பல அறிமுகங்கள் அவர்க ளின் படைப்பு நேர்த்தியை மொழியோடு அவர்கள் நடத்தும் சித்து விளையாட்டிலிருந்தும் இன்னும் மீளாதவனாகவே இருக்கிறேன்.

எதார்த்தவாதம் - அமைப்பியல்வாதம் - நவீனத்துவம் - பின் நவீனத்துவம் என்று பல கதையாடல்கள் படைப்புக்கள் எங்கும் விரவிநின்று பரவசமூட்டுகின்றன. சற்றுப் பயத்தை யும்தான். இது நிற்க.

II

இனிவரும் காலங்களில் தமிழிலக்கியத்தின் போக்கை ஈழத்துப் படைப்பாளிகள்தான் முன்னெடுத்துப் செல்லப் போகின்றார்கள் என்ற கருத்தொன்று பொதுவாக நிலவியது - நிலவுகிறது. அதற்குத் சான்றாக எமது நீண்ட விடுதலைப் போராட்டமும் அதன் தொடர்ச்சியான இடப்பெயர்வும் புலம் பெயர் வாழ்வும் சுட்டிக்காட்டப்படுகிறது. போரிலக்கியம், புலம்பெயர் இலக்கியம் என்ற இரு பெரும் இலக்கியத் தளங்களை தமிழுக்கு அறிமுகம் செய்து புதிய கதையாடல் களை ஈழத்துப் படைப்பாளிகள் நிகழ்த்தப் போகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் ஆரம்பத்தில் ஈழத்தின் கவிதைப் பரப்பில் இதற்கான நம்பிக்கைகள் துளிர்விட்டா லும் பின்பு அதற்கான சாத்தியங்கள் தென்படவேயில்லை. எழுதுகோலைத் தொடுவதற்குக்கூட யாரும் தயாராகாத நிலையே காணப்பட்டது. முயன்றவர்கள் கூட ஒற்றைப் படையாக தட்டைத் தன்மையாக எதைஎதையோ எழுதினார் கள். இதனால் தமிழிலக்கியத்தின் அடுத்த பாய்ச்சலை நிகழ்த்தப் போகிறவர்கள் ஈழப் படைப்பாளிகள்தான் என்ற கருத்து அநாதரவாகவே கிடந்தது. இதை மீண்டும் மீண்டும் அழுத்திக் கூறிய எஸ்.பொ போன்ற ஈழத்துப் படைப்பாளிக ளின் கூற்று சில தமிழக விமர்சகர்களின் கேலிக்கும் உள் ளாகியது. ஆனால் அது பழங்கையாகிவிட்டது.

அண்மைக்காலமாக ஈழத்து இலக்கியப் பரப்பில் நம் பிக்கை தரும் அறிகுறிகள் தென்பட ஆரம்பித்திருக்கிறது. அது ஒருவித உக்கிரத்துடன் புறப்பட்டுவிட்டதுபோல் தெரிகி றது. உலகின் உன்னத படைப்புக்களாகப் போற்றப்படுப வையெல்லாம் போராட்டத்தையும், இடப்பெயர்வையும் சந் தித்த படைப்பாளிகளிடமிருந்துதான் உருக்கொண்டிருக்கி றது. அது ஈழப் படைப்பாளிகள் விடயத்தில் பொய்த்துவி டுமோ என்ற ஐயம் களையப்பட்டு விட்டது.

அண்மையில் வெளிவந்த சில ஈழத்துப் படைப்புக்கள் உலகத் தரத்திற்கு இணையான அழகியலை அடையாளப் படுத்துகின்றன. சோபா சக்தியின் கொரில்லா, நிலாந்தனின் வன்னி மான்பியம், கி.பி. அரவிந்தனின் கனவின் நீதி என் றொரு தரப்பட்டியல் எமக்குக் கிடைக்கிறது. இந்த மூன்று படைப்புக்களும் என்னை நிறையவே சிந்திக்கத்தூண்டியது - ஏதோ ஒரு விதத்தில் எமது ஈழப் போராட்டத்தையும் அதன் அதிர்வுகளையும் அடையாளப்படுத்த முயல்கின்றன. இதுவே என்னை இவைபால் ஈர்க்கச் செய்தது. ஆவணப்ப டுத்தல் உத்தியுள்ள படைப்புக்கள்தான் நமது தேவையாக வும் இருக்கின்றன. ஒரு ஈழப் படைப்பாளியிடம் காலம் இதைத்தான் எதிர்பார்க்கிறது. இந்த நிலையிலிருந்துதான் காலமாகிவந்த கதை மீதான வாசிப்பை நிகழ்த்த முடியும்.

III

காலமாகிவந்த கதை எந்த விதமான இலக்கிய வடிவத் திற்குள்ளும் அடக்கமுடியாத / வரையறுக்கப்பட முடியாத வித்தியாசமான / சுவாரசியமான இலக்கியப் பிரதியொன்று. ஈழத்தின் இலக்கியப்

போராட்ட ஆவணப்படுத்தல் வரலாற்றில் மிக முக்கியமா னதும்கூட.

இக்கதைகள் ஈழமுரசில் தொடராக வந்தபோது பெரிதாக என்னை ஈர்த்ததென்று சொல்வதற்கில்லை. இரண்டு, மூன்று கதைகளுக்குப் பிறகு எனது பத்திரிகைப் பணியின் நிமிர்த்தமாக எனது ஆர்வமின்மைக்கும் அப்பால் இவை மீது எனது தொடர் வாசிப்பை நிகழ்த்த வேண்டிய சூழ் நிலை உருவாகியது. அப்போதுதான் எதையும் மேலோட்ட மாகப் பார்த்து முடிவெடுக்கும் எனது குணாம்சத்திற்கு குழிதோண்டப்பட்டது.

இவருடைய காலமாகிவந்த கதையின் 20 கதைகளையும் ஒருசேரப் படித்து முடித்த பின்னர் அவருடைய எழுத்துல கின் மையத்தை உருவகப்படுத்த முனையும்போது மனம் ஒரு வித அமைதியில் ஆழ்ந்துவிடுகிறது. எஞ்சுவது ஏக்கம். முடிவில் மௌனம். இவ்வாறான உருவகம் தமிழில் ஒருசில படைப்பாளிகளுக்கே கைகூடியிருக்கிறது. அதில் குறிப்பிட்டு கூறக்கூடியவர் எஸ். இராமகிருஷ்ணன். ஆனால் இவர்கூட வாசகனை அந்த அனுபவத்திற்குள் அமிழ்த்துவதற்கு கையாளும் மொழி Fable of Text வகை சார்ந்தது. ஆனால் காலமாகிவந்த கதையினூடாக எளிய பேச்சுமொழியில் இவ்வாறான வாசகனுபவம் கிடைத்துவிடுகிறது.

ஈழத்துக் கிராமமொன்றில் சிறுபருவத்துக்கேயுரிய சுட்டித் தனங்களும் / குறும்புத்தனங்களும் நிறைந்த வாழ்க்கையை - போருக்கு முந்திய ஈழத்து வாழ்வியலை துல்லியமாக படம்பிடித்துக்காட்டுகிறார் இரவி. இக் கதைகளை வாசிக் கும்பொழுது நாம் ஒவ்வொருவரும் அவரிடத்தில் நம்மைப் பொருத்திப் பார்ப்பது இயல்பாகவே நடந்துவிடுகிறது. அவ ருக்கு ஒரு தமிழ் வாத்தியார்.... எனக்கு ஒரு கணக்கு வாத் தியார்.... வேறு ஒருவருக்கு அது தங்கம்மா ரீச்சரோ தங்கராசா மாஸ்ரரோ.... அவ்வளவுதான்.

எத்தகைய அற்புதமான வாழ்வியல் அது. இன்று அந்த வாழ்வும் கற்பனைகளும், கனவுகளும் சிதைக்கப்பட்டு பூமி பந்தின் ஒவ்வொரு மூலையாகத் தூக்கி வீசப்பட்டிருக்கி றோம். எஞ்சியிருப்பது அந்த வாழ்வு குறித்த ஏக்கமும், பெருமூச்சும் மட்டுமே.


தாயகத்தில் இன்று ஒரு குழந்தையின் சிறுபிராயம் எப் படி இருக்கிறது.... நினைத்தால் நெஞ்சுக்குள் வலி பந்தாய் அடைத்துக்கொள்கிறது. பள்ளிக்கூடம் என்பது அக் குழந் தைக்கு ஓர் அரசமர நிழலோ / ஆலமர நிழலாகத்தான் இருக்க முடியும். அந்த மரநிழல்கள்கூட ஊர்விட்டு ஊர் நகர்ந்தபடியே இருக்கிறது. அக்குழந்தைக்குப் பாடசாலை பற்றிய படிமம் எத்தகையது. எவ்வளவு குரூரமான ஜதார்த் தம். ஓர் இனத்தின் சிதைக்கப்பட்ட வாழ்வியல் வரலாறு தனிமனிதனூடாக நகைச்சுவையாய் சொல்லப்படுகிறது.

இரவிக்கு இயல்பாகவே ஈழத்து வட்டார வழக்குப் பேச்சு மொழி எழுத்தில் கைகூடிவருகிறது. இது எல்லாப் படைப்பா ளிகளுக்கும் கைவரப் பெற்றதல்ல. தமிழகத்தில் கிரா, பூமணி, இமையம் போன்றவர்கள் தொடக்கிவைத்த இந்த இலக்கிய வடிவம் இன்று கருக்கு பாமா, கண்மணி குண சேகரன் வரை தொடர்கிறது. இவர்கள் வட்டார வழக்குமொ ழியைத் தமது படைப்பு மொழியாக்கி வெற்றிகண்டவர்கள். இரவியும் தனது படைப்புலகைத் துணிந்து பேச்சு மொழியி லேயே முயற்சிக்கலாம். அதுவே ஈழத்து இலக்கியப் பரப் பில் அவருக்கான தனித்த அடையாளமாகவும் இருக்கும்.

நவீன கவிதைகளுக்கே உரித்தான குறியீடுகளும் படி மங்களும் அண்மைக் காலமாகப் பலரது பத்தி எழுத்துக்கள் தொடங்கி புனைவுகள் வரை பரவிக் கிடந்து சாதாரண வாசகனை மிரட்சி அடையச் செய்கிறது. ஆனால் இரவி வாசகனுக்கு அந்தச் சந்தர்ப்பத்தைத் தோற்றுவிக்கவில்லை. சிக்கலில்லாத சரளமான பேச்சுமொழியை அதன் இயல் பான போக்கில் தவழவிடுகிறார். அது தன்வழியே பரவி வாசகனை ஒருவித அனுபவத்திற்குள் அமிழ்த்திவிடுகிறது. அது வாசகனை அந்நிலையில் இருந்து இலகுவில் வெளியே வர அனுமதிக்காது. அதிலிருந்து மீள வாசகனும் விரும்ப வில்லை. இதுதான் ஒரு படைப்பு முழுமையடையும் தரு ணம். இரவி குறிப்பிட்டுக் கூறக்கூடிய இலக்கிய ஆழுமை யாக வருவதற்கான கட்டியங்கள், காலமாக வந்த கதை எங்கும் விரவிக் கிடக்கிறது.

எழுதுவதைவிட பேசுவதைவிட உணர்வுபூர்வமான விசயங் கள் நிறைய இருக்கின்றன காலமாகிவந்த கதையில்....

இந்த இடைப்பட்ட காலத்தில் எனது வாசிப்பும், தேடலும் பல தளங்களில் விரிந்தது. எனது எழுத்து மையம் பல தருணங்களில் பல்வேறான நிலைகளைச் சென்றடைந்தது. உலகில் அனைத்துத் துறைகளையும் பின்நவீனத்துவ சிந்த னைகள் பீடித்துவருகின்றன. நானும் அதற்கு விதிவிலக் கல்ல. அதனால் காலமாகிவந்த கதைமீது ஒரு மறுவா சிப்பை - நுண்வாசிப்பை - பின் நவீனத்துவ வாசிப்பை வரும் காலங்களில் நிகழ்த்தலாம். அப்போது காலமாகிவந்த கதைமீதான வேறொரு வாசிப்பு கிடைக்கும். எது எதுவாயி னும் அது அவர் படைப்புலகம் மீது என் தன்மையிலான குறுக்கீடு அவ்வளவே....



விடிவு மட்டும்

அந்தக் கிராமத்து மடையன் பெயர் ப்ளாஸ்; ப்ளாஸ் ஹெர்ரெரோ மார்டினஸ். இவனுக்கு முந்தின கிராமத்து மடையன் பெரிஜிலோண்டோ, தன் உண்மையான பெயர் ஹெர்மினெஜில்டோ என்பதையே சாமர்த்தியமாக மறந்துவிட்டிருந்தான். அவனுடைய இறப்பிற்கு முன்னர் ப்ளாஸ் மந்தமான பையனாக, பியர் பழங்களைத் திருடுபவனாக எல்லோரது உதவாக்கரை உதைகளுக்கும் எரிச்சலுக்கும் இலக்கானவனாக இருந்தான். அவன் வெளிறிய நிறத்துடன், நீளமான கால்களுடன் தனிமையானவனாக, எதற்கெடுத்தாலும் நடுங்குபவனாக இருந்தான்.

ஒரு மடையனுக்கு மேல் இடமளிக்க முடியாத அளவிற்கு அந்தக் கிராமம் சிறியது. பாரம்பரியத்தைப் பற்றிய அதிக மதிப்பு வைத்திருந்த ப்ளாஸ் ஹெர்ரெரோ மார்டினஸ் இதை அறிந்திருந்தான். அவன் பைன் மரத்தோப்புகளிலும் புல்வெளிகளிலும் அலைந்து திரிந்து எதையெல்லாம் சாத்தியமோ அவற்றைத் திருடுவதில் திருப்தியுற்று கிராமத்திற்கு எக்காலத்திலும் வெகு அருகாமையில் வராமல் பார்த்துக் கொண்டான்.

முப்பதைந்த பெரிஜிலோண்டோ தன் பாதங்கள் தனக்கு முன்புறமிருக்க பின்புறத்தில் பாதிரியார்கள் பின்தொடர மரப் பெட்டியில் எடுத்துச் செல்லப் படுவதற்காக பிளாஸ் பொறுமையாக காத்திருந்தான்.

சடங்குகள் மரியாதைக்குரியன. அவை அரசனைவிட முக்கியத்துவம் வாய்ந்தன என்றும் சட்டத்தைக் காட்டிலும் எவ்விதத்திலும் முக்கியத்துவத்தில் குறைந்தவை யில்லை என்றும் ஊரில் ஒரு பழமொழி உண்டு. ப்ளாஸ் ஹெர்ரேரோ மார்டினஸ் வாழ்வை உள்ளுணர்வினால் புரிந்து கொண்டான். மோப்பத்தைப் பின்தொடரும் நன்கு பயிற்சியளிக்கப்பட்ட வேட்டை நாயின் துல்லியமான திட்டத்துடன், தன்னுடைய காலம் இன்னும் கைகூடவில்லை என அறிந்து, தன்னைக் காத்திருத்தலுக்கு துணிச்சலுடன் ஒப்புவித்தான். எதிரிடை உண்மையன தோற்றமளிக்கும் போதிலும், இல்வாழ்க்கையில் எல்லாவற்றிற்குமே எப்பொழுதும் நேரம் உண்டு.

ப்ளாஸ் ஹெர்ரெரோ மார்டினஸ் சிறிய வழுக்கையான கூரிய தலையையும், குறுகலான மார்பையும், மெலிதான கால்களையும், தேமல்களையும், எடுப்பான பற்களையும் பெற்றிருந்தான். மேலும் அவன் மாற்றுக் கண்களையும் உமிழ் நீரொழுகும் வாயையும் கொண்டிருந்தான்.

அவன் ஒரு வெளிப்படையான விதத்தில் மடையனாக, தேவையான அனைத்து குணாதிசயங்களையும் பரிபூரணமாகப் பூர்த்தி செய்யும் வகையில் அமைந்திருந்தான். அவனை கருத்துடன் கவனத்திற்கொள்ளும் பட்சத்தில் கிராமத்து மடையன் எனும் பாத்திரத்தை அவன் மிக்க தேர்ச்சியுடன் சித்தரிப்பது விளங்கும். ஒரு மருத்துவரின் ஆய்வின் உதவியின்றி முட்டாள்தனத்தை நிரூபிக்க முடியாத சில அறிவிலிகளைப் போன்றல்லாமல் அவன் எவ்வித சந்தேகத்திற்கிடமு மின்றி ஒரு மடையனாக இருந்தான்.

அவன் சாந்தமாக, சாதுவான குணத்துடன், ஒரு கன்றுக்குட்டியைப் போன்று எப்பொழுதும் புன்முறுவலுடன் காணப்படுவான். மென்மையானவர்கள் என அழைக்கத் தகுதியற்ற கிராமத்து மக்கள் அவன் மீது கல்லெறிந்து தாக்குவது அடிக்கடி நிகழ்கிற சம்பவமாயிருந்த போதிலும் அவன் புன்னகை மறையவில்லை, ப்ளாஸ் ஹெர்ரெரோ மார்டினஸ் தன் கீரியையொத்த சிறுமுகத்து முன் தன்னுடைய சாமர்த்தியங்களுள் ஒன்றான காதுகளை பக்கவாட்டில் அசைக்கும் செயலை செய்து கொண்டிருப்பான். விபரிக்க முடியாத ஒருவித புன்னகையுடன் வெளிர் சிவப்பு இரத்தமொழுகும் சமீபத்திய காயமொன்றை பேணிக் கொண்டிருப்பான். ஒருவேளை முதலில் பட்ட காயத்தின் மேல் இரண்டாம் முறையும் கல்லெறிய வேண்டாமென்று புன்னகையின் வாயிலாக இம்சிப்பவர்களை மன்றாடுகிறான் போலும்.

பெரிஜிலோண்டாவின் காலத்தின் போது, தான் கிராமத்துத் தெருக்களில் நடப்பதற்குச் சிறிதேனும் உரிமையுள்ளதென்று உணரும் நாட்களான ஞாயிற்றுக்கிழமைகளில் மாத்திரம் நமது கிராமத்து மடையன் கடவுள் பிரார்த்தனைக்குப் பிறகு லூயி கபேயின் வாயிலில் உட்கார்ந்து கொள்வான். வாடிக்கையாளர்கள் தங்கள் பசியைத் தூண்டும் மதுபானத்தை குடித்து முடித்து மதிய உணவிற்கு வீடு செல்வதற்குத் தேவையான இருண்டு அல்லது மூன்று மணிநேரம், வாயிலில் காத்திருப்பான். லூயி கபே ஒருவழியாக முழுவதும் காலியான பிறகு ப்ளாஸ் புன்னகைத்துக் கொண்டே உள்ளே நுழைந்து உணவு மேசைகளின் கீழே நழுவி சிகரெட் துண்டுகளை பொறுக்குவான். சில சமயங்களில் மிகவும் நல்ல நாட்கள் அமைவதுண்டு, உதாரணமாக இரண்டு வருடத்திற்கு முன்பு மிகவும் உல்லாசமான விருந்து நடந்தது. அச்சமயத்தில் ப்ளாஸ் தன்னுடைய டப்பியை எழுநூறு சிகரெட் துண்டுகளால் நிரப்ப முடிந்தது. சில ஆங்கில வார்த்தைகளும் ஒரு சங்கு சித்திரமும் தீட்டப்பட்ட இந்த குழிவான அழகான பளபளப்பான மஞ்சள் நிற டப்பிதான் ப்ளாஸின் சந்தோசமும் பெருமையும்.

தனது பணியை முடித்தபிறகு ப்ளாஸ், மிகவும் மூப்படைந்து நகருவதற்கே பிரயாசைப்படும் பெரிஜிலோண்டாவைக் காண முச்சு விடாமல் ஓடினான். அவனிடம் கேட்டான் `பெரிஜிலோண்டோ, நான் எதைக் கொண்டு வந்திருக்கிறேன் பார். உனக்குத் திருப்திதானே?`

பெரிஜிலோண்டோ தனது சிறப்பான உச்சஸ்தாயி கள்ளக் குரலில் பதிலளித்தான். 'ஆம்...ஆம்`

பிறகு கருமியின் புன்னகையுடன் சிகரெட் துண்டுகளைப் பெருமிதத்துடன் பார்வையிட்டு. அரை டஜன் சிகரெட்டுகளைத் தாறுமாறாகப் பொறுக்கி எடுத்து அவற்றைப் ப்ளாஸிடம் அளித்தான்.

'நான் சரியான காரியத்தைத்தான் செய்தேனா?`

'ஆம்... ஆம்...'

ப்ளாஸ் ஹெர்ரெரோ மார்டினஸ் தனது துண்டுகளை எடுத்து ஏதோ ஒரு வடிவில் உருவாகும் சிகரெட்டைத் தயாரித்தான். சில சமயங்களில் இம்முயற்சி பருமனான சிகரெட்டாக பலனளிக்கும். ஆனால் வேறு சமயங்களில் புகைக்க முடியாத வகையில் மிக மெலிதானதாக அமையும். துரதிருஷ்டம். லூயி கபேயில்தான் கண்டெடுக்கும் சிகரெட் துண்டுகளை எப்போதும் பெரிஜிலோண்டாவிடம்தான் கொடுப்பதுண்டு. ஏனெனில் அந்த கிராமத்திலிருக்கும் அனைத்துத் துண்டுகளுக்கும் பெரிஜிலோண்டாதான் நியாயமான சொந்தக்காரன். மேலும் ஒன்றுமில்லாததற்காகவா அவன் கிராமத்து மடையனாக இருக்கிறான்? தன்னிஷ்டப்படி துண்டுகளைச் செலவழிக்கும் அதிகாரம் ப்ளாசுக்கு வரும்போது ஒரு புதியவன் தன்னை ஏமாற்றவதை அனுமதிக்கமாட்டான். அடிப்படையில் ப்ளாஸ் பாரம்பரியத்திற்குப் பெருமதிப்பு தரும் ஒரு பழமை விரும்பி. பெரிஜிலோண்டேதான் அதிகாரபூர்வமான கிராமத்து மடையன் என்ற உண்மையை அறிந்திருந்தான்.

இருந்தபோதிலும், பெரிஜிலோண்டோ இறந்தநாளில் இயல்பாகத் தோன்றிய சந்தோஷ உணர்வை கட்டுப்படுத்த முடியவில்லை. அவன் வழக்கமாக குடிக்கப்போகும் புல்வெளியில் செம்மறியாட்டுக் குட்டிபோல குதித்து துள்ளி விளையாடினான். அதற்குப் பின்தான் தவறுசெய்துவிட்டோமென்று உணர்ந்தான். உடனே பிராயச்சித்தம் செய்வதற்கும் பெரிஜிலோண்டாவின் பூத உடலின் மீது கண்ணீர் விடுவதற்கும் கல்லறைக்குச் சென்றான். பெரிஜிலோண்டாவின் சமாதியருகில் இதுவரையில் யாரும் பிராயச்சித்தமும் செய்யவில்லை, கண்ணீரும் விடவில்லை, இனி எப்பொழுதும் கண்ணீர் விடப்போவதுமில்லை.

சில வாரங்களுக்கு ப்ளாஸ் சிகரெட் துண்டுகளை கல்லறைக்கு கொண்டு வந்தான், தனக்குரியதான அரை டஜன் துண்டுகளை ஒதுக்கிவைத்து எஞ்சியவற்றை ஜாக்கிரதையாக அவனுடைய தலைவனின் சமாதியருகே புதைத்தான். பிறகு படிப்படியாக இவ்வாறு செய்வதை நிறுத்தி இறுதியில் எல்லாத் துண்டுகளையும் பொறுக்குவதைப் பற்றிக்கூட அக்கறை கொள்ளவில்லை. அவன் தனக்குத் தேவையான அளவு மாத்திரம் பொறுக்கி எடுத்து, எஞ்சியவற்றை தனக்குப் பின் யார் தேடுகிறார்களோ அவர்களுக்கு விட்டுவிட்டான். பெரிஜிலோண்டாவை அவன் மறந்துவிட்டபிறகு வித்தியாசமான ஒன்று நிகழ்வதை உணர்ந்தான், ஒரு துண்டை பொறுக்கி எடுக்க குனியும்போது அத்துண்டு தனக்குச் சொந்தமானதா இல்லையா என வியக்காமலிருக்கும் ஒரு பழக்கமில்லா உணர்வுதான் அது.

- தமிழில்: சத்யன்

லாச்சப்பலில் ஒரு புதிய உதயம்

தரமான கூடவே சுவையான இறைச்சித் தெரிவுகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம் லாச்சபலில் யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை

5, Rue Perdonnet, 75010 Paris.
Métro - La Chapelle / Gare du Nord
Tél: 01 40 05 92 91

எமக்கு வேறு கிளை நிறுவனங்கள் இல்லை

யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை
YALPPAANAM BOUCHERIE

அனைவருக்கும் எமது புதுவருட வாழ்த்துக்கள்

ஆட்டு இறைச்சி - மாட்டு இறைச்சி
கோழி இறைச்சி
மான் இறைச்சி - மரை இறைச்சி
காட்டுப் பன்றி - காட்டுக் கோழி
இன்னும்...! இன்னும்...! பலவகை.

Pub-Fr

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப் - பிறவுந் தமபோற் செயின்.

பாகம் - 2

வலிகாமம் இருந்து வன்னி வரை 9

- கவிஞர் நாவண்ணன்

பாலத்தின் விளிம்பில் நின்று நகர்ந்துகொண்டிருக்கும் மக்களைப் பார்த்தேன். அவர்கள் நகர்கின்றார்கள்தான். ஆனால் நகர்வது போல ஒன்றும் தோன்றவில்லை. நிமிடத்துக்கு ஓர் அங்குலம் செல்கின்றார்களோ என்று வியப்பாக இருந்தது. அந்தக் கும்பலில் அவனவன் காவிச் செல்லும் பொருட்கள் தான் அந்தக் கணத்தில் அவனுக்கு மிகப் பெறுமதியானது என்று தோன்றியது. அந்தப் பரிதாபத்தை எந்த வார்த்தையால் சொல்லுவது?

பெற்ற தாய், தந்தையரை, வயதுபோன பேரன் பேர்த்தியரை காவு கட்டித் தூக்கிச் செல்லும் பிள்ளைகள்.

சிலர் தமது சைக்கிளில் பின் இருக்கைகளில் தடிகளைக் கட்டி நீட்டி அதன்மீது நாற்காலிகளை இறுக்கமாக வரிந்துகட்டி அந்நாற்காலிகளில் நடக்க முடியாத முதியவர்களை இருத்தி சைக்கிளை உருட்டிக்கொண்டு சென்றனர்.

இன்னும் சிலர் தமது மோட்டார் சைக்கிள்களில் முன் பெற்றோல் தாங்கி தொடக்கம், பின் இருக்கை வரையிலும் முதியவர்களைத் தவளை போன்று குப்புறப் படுக்க வைத்து உருட்டிச் சென்றனர்.

அப்படியெல்லாம் செய்ய முடியாத சிலர் குழந்தைப் பிள்ளைகளைத் தூக்குவதைப் போன்று இரண்டு கைகளாலும் அவர்களை ஏந்தி நெஞ்சோடு அணைத்துக்கொண்டு சென்றனர்.

இந்த முதியவர்களை இப்படியெல்லாம் சுமந்து செல்லும் அவர்களைக் கண்ணுற்றபோது முன்பு ஒருமுறை பப்பா சொன்ன கதை ஒன்று நினைவுக்கு வந்தது. அது கற்பனைக் கதையோ என்னவோ எனக்குப் பிடித்த கதை, நல்ல கதை, கருத்துள்ள கதை.

ஒரு விதவைத் தாய்க்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்களாம். அவர்கள் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். சாதாரண விவசாயிகள், அந்தத் தாயோ மிகவும் முதிர்ந்தவளாக இருந்தாள், அவளால் நடக்க முடியாது.

அந்த நாட்டின் தலைநகரத்திலே வருடாவருடம் பல போட்டிகள் நடக்கும். பல வீரர்களும், வீராங்கனைகளும் அந்தப் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசில்கள் பெறுவர். அந்தப் போட்டியில் கலந்து கொள்ளாது விட்டாலும் பார்வையாளர்களில் எவராவது தாம் நிலைநாட்டிய சாதனைகளைக் கூறுவர். அவற்றுள் மிகப் பெரிய சாதனையை நிலை நாட்டியவர் என்று அரசன் கருதும் வீரனுக்கு அந்த ஆண்டின் சாதனைவீரன் என்ற சிறப்புப் பரிசை அரசன் வழங்கிக் கௌரவிப்பார்.

> *ஊட்டச்சத்தோ குழாய் வழியாக ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தது. எமக்காகக் களத்திலே போராடிய வீரர்கள் அந்த வாகனத்துள்ளே உயிருக்காகப் போராடிக் கொண்டு கிடக்கின்றார்கள்.*

இந்தப் போட்டிகளையும், காட்சிகளையும் தான் சாவதற்குமுன் நேரடியாக ஒருமுறை கண்டுவிடவேண்டும் என்று முதியவளான அந்தப் பெண் ஆசைப்பட்டாள். தமது தாய் நடக்க வேண்டும் என்று முதியவளான அந்தப் பெண் ஆசைப்பட்டாள். தமது தாய் நடக்கமுடியாதவள் என்றாலும் அவளது ஆசையை நிறைவேற்றி வைப்பது என்று அவளது மகன்மார் இருவரும் முடிவெடுத்தனர். தமது தாயை அந்த ஆண்டில் நடைபெறவிருக்கும் போட்டிக் களத்துக்கு அழைத்துச் செல்வதெனத் தீர்மானித்து இரட்டை மாட்டு வண்டில் கட்டிக்கொண்டு தலைநகரை நோக்கிப் புறப்பட்டனர்.

அவர்கள் தலைநகருக்குச் செல்வதாயின் அடர்ந்த காட்டுப்பாதை ஒன்றால் நெடுந்தொலைவு செல்லவேண்டும். அப்படி அவர்கள் சென்று கொண்டிருக்கும்போது அவர்களின் வண்டிலில் பூட்டியிருந்த மாடு ஒன்று இறந்து விட்டது. எனவே இறந்த மாட்டை அவிழ்த்து ஒதுக்குப் புறமாகப் போட்டுவிட்டு அந்த மாடு கட்டப்பட்டிருந்த நுகத்தடியை ஒரு மகன் பிடித்து இழுத்துக்கொண்டு செல்ல அவர்களது பயணம் தொடங்கிற்று.

மேலும் சில தொலைவு சென்றபோது எஞ்சியிருந்த மற்ற மாடும் இறந்துவிட்டது. அப்பொழுதும் அந்தப் பிள்ளைகள் இருவரும் மனம் தளரவில்லை. அந்த மாட்டையும் அவிழ்த்துப் போட்டுவிட்டு அம்மாட்டின் பக்க நுகத்தடியை மற்றமகன் பிடித்துக்கொள்ள இருவருமாக வண்டிலை இழுத்துக்கொண்டு சென்றனர்.

அவர்களது கெட்டகாலம் என்னவென்றால் அந்தக் கரடுமுரடான காட்டுப் பாதைக்குள் செல்லும்போது வண்டிலின் நடு அச்சு உடைந்து போயிற்று. மேற்கொண்டு வண்டியை நகர்த்த முடியாத நிலை. ஆயினும் தமது வயோதிபத்தாயின் கடைசி ஆசையை எப்படியும் நிறைவேற்றி வைப்பது என்பதில் உறுதியாக இருந்தார்கள்.

எனவே அந்தக் காட்டில் இருந்த கொடிகளை வெட்டியெடுத்து பெரிய கூடை ஒன்று தயார் செய்தனர். பின்னர் அந்தத் தாயை அந்தக் கூடைக்குள் வசதியாக உட்கார வைத்து கூடையை ஒரு தடியில் கொழுவித் தூங்கி முன்னும், பின்னுமாக தாயைச் சுமந்தபடி விளையாட்டுத் திடலை அடைந்தார்கள்.

அந்த வயோதிபத் தாயார் தனது ஆசை தீர, கண்குளிர அங்கு நடைபெற்ற போட்டிகளையும், வீரசாகச நிகழ்வுகளையும் கண்டு களித்தாள்.

இறுதிநிகழ்வாக அந்த ஆண்டிற்குரிய அதிசிறந்த வீரச் செயலைச் செய்தவர்களுக்கான சிறப்புப் பரிசில் வழங்கும் கட்டம் வந்தது. அந்த விழாவில் கலந்துகொண்ட அனைவரும் தத்தமது வீரசாதனைகளைக் கூறினர். ஒவ்வொருவரும் தமது வீரச் செயல்களைக் கூறும் போதும் பார்வையாளர்கள் அவர்களைப் பாராட்டிக் கரவொலி எழுப்பினர்.

இறுதியாக இந்த இளைஞர்கள் தாம் படைத்த சாதனை என்னவென்று கூறவேண்டிய கட்டம் வந்தது. அந்த விழாவில் கலந்துகொண்ட அவர்களிடம் சாதனை என்று கூறுவதற்கு எதுவுமில்லை. எனினும் எதையாவது சொல்லவேண்டும் என்பதற்காக நாம் அந்த விளையாட்டுப்போட்டிக்காக தாயையழைத்து வந்த சம்பவத்தைச் சொல்லிவைத்தனர். அவர்கள் எதிர்பார்த்தது போல அங்கிருந்தவர்கள் எவரிடமும் இருந்து பாராட்டோ, கரவொலியோ கிடைக்கவில்லை. அதையிட்டு அவர்கள் கவலைப்படவுமில்லை.

இறுதியாக அரசன் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் கட்டம் வந்தது. ஒவ்வொருவரும் போட்டி முடிவுகளை எதிர்பார்த்தபடி தமக்குத்தான் பரிசு கிட்டும் எனக் காத்திருந்தனர். அந்த ஆண்டின் அதி சிறந்த சாதனையைப் புரிந்தவர்களுக்கான போட்டி முடிவு கூறப்பட்டது. ஆச்சரியமென்னவென்றால் தமது தாயைச் சுமந்து வந்த அந்த இரு இளைஞர்களுக்குமே பரிசில் வழங்கப்படுவதாகக் கூறப்பட்டது. எவருமே எதிர்பாராத இந்த முடிவால் அனைவருமே வியந்து போயினர். சிலர் மன்னரிடம் நேரடியாகக் கேட்கவும் செய்தனர்.

`மன்னவரே மற்றவர்கள் நினைத்துப் பார்க்கவும் முடியாத சாதனைகளைச் செய்தவர்கள் பலர் இருக்க தாயைக் காவி வந்த இவர்களுக்கு மட்டும் அப்பரிசை தாங்கள் சிபார்சு செய்யக் காரணமென்ன? இது என்ன மற்றவர்களால் நிகழ்த்த முடியாத சாதனையா?' என்று கேட்டனர்.

அதற்கு மன்னவனோ புன்னகை பூத்த முகத்தினனாகப் பதில் சொன்னான்.

'ஒரு வயோதிபப் பெண்ணை இரண்டு வாலிபர்கள் தூக்கி வருவது என்பது மிகச் சாதாரண செயல்தான். இதனை யாரும் செய்துவிடலாம். ஆனால் தம்மைப் பெற்று தாலாட்டி, காலமெல்லாம் சீராட்டி வளர்த்த தம் தாயின் கடைசி ஆசையை நிறைவேற்றி வைக்கவேண்டும் என்று அவர்கள் எடுத்துக்கொண்ட பெருமுயற்சி இருக்கிறதே அது சாதாரண செயல் அல்ல'

'சாகின்ற வயதில் இந்தக் கிழவிக்கு இது வேண்டாத ஆசை என்று அவர்கள் முணுமுணுக்கவில்லை. தம்மைப் பெற்றவளுக்குச் செய்யவேண்டிய பெருங்கடனாக நினைத்துச் செய்த செயல் அவர்களது அன்புக்கு ஈடாக எதுவுமில்லை. அந்தத் தாயன்புக்காகத்தான் இந்தப் பரிசு, தன் தாயை நேசிப்பவன் தன் தாய் நாட்டை நேசிக்க பின்நிற்க மாட்டான். அந்தப் பற்றினுக்காகத்தான் இந்த ஆண்டின் சாதனைக்கான சிறப்புப் பரிசில் வழங்கப்படுகின்றது' என்றான். அரசின் இந்தப் பதிலினால் அங்கிருந்த அனைவருமே மௌனிகளானார்கள்.

முதியவர்களை ஒரு சுமையாகக் கருதாமல், இவர்களால் ஒரு பயனும் இல்லை என்பதை உணர்ந்த நிலையிலும் அவர்களைக் கைவிட்டுவிடாமல் தம்மோடு காவிச் செல்லும் மக்களைக் காணும்போது பப்பா சொன்ன அந்தக் கதை என் நினைவுக்கு வந்தது ஒன்றும் வியப்பில்லைத்தான்.

முதியவர்களைச் சுமந்து செல்பவர்கள் ஒரு புறம் இருக்க குழந்தைகள், சிறுவர்களைச் சுமந்து சென்றவர்கள்!

நோயாளிகள், குழந்தை பிரசவித்து ஒரு நாள்கூட கடவாதவர்கள் - பூப்படைந்தும் தலை முழுகாத நிலையில் உள்ளவர்கள்.

இவர்கள் எல்லாம் ஒருவரோடு ஒருவர் முட்டிமோதி, நெருங்குண்டு, நசுங்குண்டு சென்று கொண்டிருந்தனர்.


நான் பார்த்துக்கொண்டிருந்த வேளையில் சக்கர நாற்காலி ஒன்றில் ஒரு சிறுமியை இருத்தித் தள்ளிக்கொண்டு வரப்பட்டாள். அவளுக்கு அருகருகே அவள் தாய, தகப்பன், உறவினர்கள் என்று வந்துகொண்டிருந்தனர். முதிய வரான தன் தந்தையை அப் பெண் தனது சைக்கிளின் முன் சட்டத்தில் இருத்தித் தள்ளிக்கொண்டு வந்தார்.

இந்த வேளையில் பலத்த ஒலி எழுப்பிய வண்ணம் வாகனம் ஒன்று வழிவிலகி இடம்தரவேண்டி எச்சரிக்கை செய்துகொண்டு உள் நுழைந்தது. மக்களே ஒருவரை ஒருவர் விலத்திச் செல்ல முடியாத நிலையில் ஒரு வாகனத்துக்கு இடம்விட்டுக்கொடுப்பது எவ்விதம்?

இதனோடு மக்களோடு மாடுகள், ஆடுகள், வளர்ப்புப் பிராணிகளான நாய், பூனைகள், இன்னும் கிளிகளோடு கூண்டுகள், மாடுகள் பூட்டிய வண்டில்கள், இன்னும் லொறிகள் என்று அனைத்து அம்சங்களும் அந்தப் பாலத்தின்மீது நகர்ந்து கொண்டிருந்தன.

குறிப்பிட்ட அந்த வாகனம் மக்களுடே நிதானமாக முன்னேறிக்கொண்டிருந்தபோது அதன் கண்ணாடி ஜன்னல்களுக்கூடாக உள்ளே இருப்பவர்களைப் பார்க்க முடிந்தது. உள்ளே காயப்பட்ட போராளிகள் கிடந்தார்கள். இரத்தமோ, ஊட்டச்சத்தோ குழாய் வழியாக ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தது. எமக்காகக் களத்திலே போராடிய வீரர்கள் அந்த வாகனத்துள்ளே உயிருக்காகப் போராடிக் கொண்டு கிடக்கின்றார்கள். அவர்கள் சீக்கிரமே மறுகரைக்குக்கொண்டு செல்லப்பட வேண்டியவர்கள், தவறினால் அவர்கள் இறந்துவிடவும் கூடும் எப்படியோ நெருங்கி முண்டியடித்துக்கொண்டு மக்கள் இடம்விட்டுக் கொடுக்கவும் செய்தனர்.

(தொடரும்)



வீடுகள், நிலம் மற்றும் Appartements வாங்க
மிகக் குறைந்த வட்டி வீதத்தில் கடனுதவி பெற்றுத்தரப்படும்.

சம்யுக்தா

Finance & Investements
La Chapelle - Tél. Port.: 06 68 24 61 61



கவிதை... புதுக்கவிதை...!

காசி ஆனந்தன் நறுக்குகள்

பெண்மை

தெரிவது
உனக்கு
அவள்
கண்களில்

வண்டும்
மீனும்
பூவும்.


தெரிவதில்லை
கண்ணீர்.



கண்ணாமூச்சு

சின்னவனாய்
அன்று...

என்
கண்களைக்
கட்டிவிட்டு
`ஆட்களைக்
கண்டுபிடி`
என்றார்கள்.



முயன்றேன்...
முடியவில்லை.

பெரியவனாய்
இன்று....

கண்களைத்
திறந்துகொண்டே
ஆட்களைக்
கண்டுபிடிக்கும்
விளையாட்டு...

முயல்கிறேன்...
முடியவில்லை.

முரண்

இறைவனின்
வாகனம்
என்றான்
நாயை.

அவதாரம்
என்றான்
பன்றியை.

இறைவனே
என்றான்
குரங்கை.

இவனே
திட்டினான்
என்னை...

`நாயே!`
`பன்றியே!`
`குரங்கே!`



அடக்கம்

அடக்கம்
செய்யப்படுகிறோம்:...

இரண்டு
பெட்டிகளில்.

சவப்
பெட்டியிலும்

தொலைக்காட்சிப்
பெட்டியிலும்.



புகலிடத் தமிழ் குறும்படங்கள் முற்றத்து மல்லிகையும் மணத்தது!

நீண்டகாலமாக முழு நீள திரைவடிவில் கதை நகள் சொல்லப் புறப்பட்ட ஈழத்தமிழ் படைப்பா ளிகள் தாமே பணம் விட்டு தாமே தயாரித்து நொந்து கொண்டமைதான் இதுவரை உண்மை.

எம்மவர் திரை படைப்புகளை பார்க்கவேண்டும் அதனை வளர்க்கவேண்டிய கடமை எம்மிடம் உள் ளது என்ற தொலைநோக்குச் சிந்தனை எங்களுக்கு வராதது வருத்தத்திற்குரியதே.

புகலிடத்தில் பதிவுகளை பதிய வைக்க வேண்டும் என்ற எண்ணம் படைப்பாளிகளிடம் இருந்தாலும் தென்னகத்து சினிமா மாயையில் எம்மவர்கள் மாட் டிக் கொண்டதால் தென்னகத்துச் சினிமா வடிவில் திரைவடிவம் அமைப்போம் பின் எமக்கென்று தனித் துவ வடிவம் எடுப்போம் என்று முனைந்த படைப் பாளிகள் தோல்வியைத் தான் கண்டனர்.

எமக்கென்று வடிவத்தை தேடிக் கொள்ளாததால்..

அதேவேளை தென்னகத்துச் சினிமாவே தரமானது என அதுவே பழக்கப்பட்டதாலோ என்னவோ அதிலி ருந்து படைப்பாளிகள் சிலரையும் பார்வையாளர்கள் பலரையும் மீட்டெடுப்பதென்பதும் கடினமாகவுள்ளது.

நாம் தென்னகத்துச் சினிமா பார்த்து வளர்ந்த தால் இன்று எங்கள் குழந்தைகள் வரை அதை இட் டுச் செல்கின்றோம்.

எமக்கென்று திரைவடிவம் இல்லையே என்று வருத்தப்பட்ட இயக்குனர்கள் கலைஞர்கள் பல ஆண் டுகளாக தாம் பாடுபட்டுச் சேர்த்த பணத்தை திரைக் காக செலவு செய்து நீண்ட காலங்கள் தலையெடுக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

காரணம் எம்படைப்பை நாம் பலரும் பார்த்து ஆக் கபூர்வமான விமர்சனங்களை முன்வைக்காமையே.

முழுமுழுநீளத் திரைவடிவத்திற்கு இடைவெளி ஏற் பட்டது என்பது உண்மை படைப்பாளிகள் ஒதுங்க வில்லை தம்மால் முடியும் என்று பலபக்க முயற்சி களை எடுத்தனர்.

தேடல்களும் தொடர்ந்தன.

ஈழவர் திரைக்கலைமன்றமென ஆரம்பித்து அண் மையிலும் நான்கு குறும்படங்களை திரையிட்டு ஈழத் தமிழர்களுக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

பிரித்தானியா, ஜேர்மனி, ஒல்லாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் திரையிட்டது மட்டுமல்ல வேறு நாடுகளிலும் திரையிடவுள்ளனர்.

அண்மையில் பிரான்சில் 28.3.2004ல் ஓபேர்வில் லியே என்ற இடத்தில் அந்த நான்கு குறும்படங்களை வெளியிட்டனர்.

இதற்கான அரங்க ஒழுங்குகளை திருமறைக் கலா மன்றம் மேற்கொண்டது.

இதுபோலவே வேறு நாடுகளிலும் எம்படைப்பில் அதீத விருப்பு கொண்டவர்கள் அரங்க ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர்.

இதுவரை காலமும் எம்மவர்கள் அரங்கத்தை நிறைப்பார்கள் என்ற விருப்புக் கொண்ட படைப்பாளி கள் பெருந்தொகை கொடுத்து நிறைந்த ஆசனங்கள் கொண்ட அரங்கத்தை ஏற்பாடு செய்வதும் பின் நொந்து கொள்வதும் தான் வழக்கம்.

வழக்கத்துக்கு மாறாக எம்மவர் படைப்பென வரு வோரின் அளவு தெரிந்து சிறிய அரங்கத்தை ஏற்பாடு செய்து அமைதியான முறையில் பார்வையாளர்களை பார்க்க வைத்த பெருமையம் இந்த கலை வல்லுன்க ளையே சாரும்.

எந்த படைப்பானாலும் அதற்கான விமர்சனம் உண்டு.

அந்த வகையில் முதல் குறும்படம் அழியாத கவி தைகள்.

இதன் கதை பிரித்தானியா மண்ணிற்கு வந்த வயோதிபருக்கு புகலிட வாழ்க்கையில் அவருக்கு ஏற்படும் வேதனைகள்.

ஒளிப்பதிவு படத்தொகுப்பு இயக்கம் - அஜீபன்

கதை நேர்த்தியாக செல்கின்றது. அனுபவமுள்ள ஒளிப்பதிவு என பலஇடங்களில் தெரிகிறது.

மூத்த கலைஞர் ரகுநாதனின் நடிப்பு பலராலும் பாராட்டு பெற்றது.

மூத்த கலைஞரின் பிராமாண்டத் தோற்றத்தில் மாற்றம் தேவைப்படுவதும் உணர முடிந்தது.

சிலகாட்சிகள் மீண்டும் மீண்டும் வருவதை தவிர் த்திருக்கலாம்.

மூத்த கலைஞருக்காக எழுதப்பட்ட வார்த்தைகள் ஆரம்பத்தில் நீண்டதால் அவரது நடிப்புக்கு வார் த்தை பெரும் தடைக் கவிதையாய் இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

வசனங்கள் குறைக்கப்பட்டு ஒளிப்பதிவால், நடிப் பால் வெளிக்கொணர்ந்திருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும்.

பாலகணேசனின் புலத்தில் பார்த்த கதை பலர் மனதையும் கவர்ந்திருக்கும் என்பதில் ஐயமேது.

இரண்டாவதாய் கனவுகள் என்ற குறும்படம் பால் ராஜின் இயக்கத்தில் ஒளிப்பதிவு, படத்தொகுப்பு - விஜயபாலா தயாரிப்பு -எஸ்.ஜே.ஜோசப் -கதை - நாச் சிமார் கோவிலடி ராஜன்.

அனுபவமிக்க நடிகர்கள் நடித்துள்ளார்கள் என்று தெரிகிறது.

புலம் வந்த பெண்ணின் கனவுகளா? புலத்தில் வாழ்ந்த ஆணின் கனவுகளா?

மாப்பிள்ளையின் பக்கத்தை கைவிட்டு விட்டது கதை.

குடும்பத்துக்காக உழைத்து திருமணம் காலங் கடந்து போன விடயத்தை உணராமல் தொட்டது போல் வேடிக்கையாக்கப்பட்டது.

நீள் திரைவடிவத்திற்கான கதையை குறும்பட மாக்க முனைந்ததாக தெரிகிறது.

ஆங்காங்கே நகைச்சுவைக்கு கரகோசம் ஒலித் தன அரங்கத்தில்.

விஜயபாலாவின் ஒளிப்பதிவில் தேர்ச்சி. படத்தொ குப்பில் இறுக்கம் தேவை. கனவுகள் பலருக்கு ஜன ரஞ்சக திரைப்படமாகவே தோன்றியது எனலாம்.

நகைச்சுவையோடு மிளிர்ந்து குறும்படமாக வந்த கனவுகளில் வரும் இறுதிக் காட்சிகளில் நாடகப்பாணி மேலோங்கியதை காணமுடிந்தது.

இரு குறும்படங்களும் முடிந்ததும் இடைவேளை என அறிவிக்கப்பட்டாலும் பலர் எழுந்து நடமாட வில்லை.

கருத்துக்கணிப்போடு சுடுகின்ற விமர்சகர்கள் பேசாமல் இருந்தமை கவலைக்குரியது.

ஆக்கபூர்வமான விமர்சனங்கள் தேடும் படைப்பா ளிகளுக்கு, படைப்பாளிகளின் விமர்சனமும் வேண்டும் என்பதை விமர்சனப்படைப்பாளிகள் எண்ணாதமை கவலைக்குரியது.

இருந்த போதிலும் அரங்கத்தில் பார்வையாளர்கள் கருத்து இரு குறும்படங்களும் நன்றாக இருந்தது.

திரைவடிவம் எட்டாத தொலைவில்லை எம் படைப் பாளிகளுக்கு என முன்வைத்த கருத்தை மனதில் கொள்வோம்.

'தாகம்'.. இடைவேளையை தொடர்ந்து வெளியி டப்பட்டது. மூத்த கலைஞர் முகத்தார் ஜேசுரட்ணம் எல்லோர் மனதிலும் நடிப்பால் இடம்பிடித்தது மட்டு மல்ல அவர் தேடும் தாகத்தை மறந்தவர்கள் கூட அவர் படும் அவஸ்தையை பார்த்து தேடியிருப்பார் கள் அந்த தாக மருந்து.

விஜயபாலாவின் ஒளிப்பதிவில் முன்னேற்றம் பல இடங்களில் தெரிகிறது.

மனோவின் இயக்கத்தில் நேர்த்தியாக செல்கிறது என்பதை அரங்கத்தில் எழுந்த கரவொலி எடுத்துக் கூறியது.

அடுத்தகட்டம் எப்படி வரப்போகின்றது என்ற எதிர் பார்ப்புக்கேனும் கொஞ்சம் படத்தொகுப்பில் நெருக் கம் செய்திருக்கலாம்.

எம்மவர்கள் திரைவடிவம் பாராட்டுப் பெறவேண் டும் என்ற தாகமும் அரங்கத்தில் பலரது முகத்திலும் தெரிந்தது.

பலதரப்பட்ட ரசிகர்களையும் கவர்ந்தது தாகம்.

நான்காவதாக வெளியானது 'ஏகலைவன்'

மரபுக்கலை நாட்டுக் கூத்து வடிவம் திரைவடிமாக மக்கள் மனதில் பதியவைப்பதில் அந்த பாரம்பரிய கலைவடிவம் அழிந்திடாமல் காப்பது தமது தலை யாய கடமை எனப் புறப்பட்ட நாட்டுக் கூத்து கலை ஞர்களிடம் நலிந்திடாத இசையோடு ஆட்டமும் நடிப் பும் எனப் பலராலும் பாராட்டுப் பெற்றது.

டேமியன் சூரி இயக்கியிருந்தார்.

இது குறும்படமல்ல. குறும்படங்களோடு பார்க்க வைத்து அடுத்த சந்ததிகள் கற்றுக் கொள்ள எடுத்த முயற்சி என்ற கருத்தும் நிலவியது.

இத்தனை கலைஞர்களையும் இணைத்து எப்படி இப்படி ஒரு படைப்பை நிகழ்த்தமுடியும் புலம்பெயர் மண்ணில் என்பது அதிசயமல்ல இந்தக் கலைஞர்க ளுக்கு.

படைப்பாளிகள் எம்மால் நல்ல படைப்புகள் தர முடியும் என வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

திரையிடப்பட்ட இடங்களெல்லாம் நன்மதிப்பைப் பெற்ற குறும்படங்களை நல்ல படைப்புகளை, படைப் பாளிகளை வாழவைப்பது ஈழத்தவரது கடமை.

பண்பாட்டு ரீதியாகவும் உரத்த சிந்தனையும் இன்றி வந்திடும் தென்னகத்துச் சினிமாக்கள் எத் தனை சீரழிவுகளை எமக்குத் தெரியாமலே எம் சந்த திகளை அழிக்க முற்படுகின்றது என்பதை நாம் உணர்ந்து கொள்வோம்.

எம்பலத்தை எம் துயரத்தை எம் பதிவுகளை வியா பார நோக்கோடு சீரழிக்கும் தென்னகத்துச் சினிமாக் களை துரத்திடும் நோக்கும் எமக்குத் தேவைப்படுகி றது.

எம்கதைகளை எம்மால் தான் சொல்லமுடியும், உணரமுடியும்.

படைப்பாளிகளை ஊக்குவிப்போம் நல்ல படைப்பு களை வரவழைப்பது ஈழப்பார்வையாளர்கள் கையி லேயே.

முற்றத்து மல்லிகையும் மணக்கும் என்றார்கள். மணக்கவும் வைத்தார்கள்.

- கணேஷ்



சிறுவர் முற்றம்

குறுங்கதை

தளிர்ப்பு



இலையுதிர் காலம்.
மரம் மொட்டையாக நின்றது.
புல்மேய்ந்த மாடுகள் மரத்தை
இரக்கத்தோடு நோக்கின.
'உன் இலைகள்
விழுந்துகொண்டிருக்கின்றன.
உன்னைப் பார்த்தால்
அழவேண்டும்போல் இருக்கிறது....' என்று
ஒரு மாடு தழுதழுத்த குரலில் கூறியது.
மரம் சொன்னது:
'நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை.
புதிய தளிர்களுக்காக அவை
விழத்தான் வேண்டும்'
நிமிர்ந்தே நின்றது மரம்.
அது சொன்னது:-
'விழுவதற் கெல்லாம்
அழுவதற் கில்லை.'

- காசி ஆனந்தன்.

கவிதை முற்றம்

பாட்டி அழுகின்றாள்



சிறிய பூச்சி பிடிக்கவே
பெரிய பல்லி ஊர்ந்தது

பெரிய பல்லி பிடிக்கவே
கரிய பூனை பதுங்கிற்று

கரிய பூனை பிடிக்கவே
வெள்ளை நாயும் பாய்ந்தது

வெள்ளை நாயைத் துரத்தவே
மெள்ளப் பாட்டி எறிந்தனள்

பாட்டி எறிந்த தடியினால்
பானை சட்டி உடைந்ததே

காட்டிக் காட்டி அழுகின்றாள்
கவலை தீர்ப்பார் இல்லையே!

இரசிகமணி கனக. செந்திநாதன்.

விடுகதை முற்றம்

1. தாய் வெளியிலே, மகள் வீட்டிலே. தாய் மாட்டுக்கு உணவானாள். மகள் மனிதனுக்கு உணவானாள். இவை என்ன?
2. ஓடுகின்ற குதிரைக்கு விலா எல்லாம் ஓட்டை. அது என்ன?
3. இவன் சேரும்போது சேர்ந்ததைப் பிரிப்பான். இவன் யார்?
4. எண்ணெய் வேண்டாத விளக்கு. எடுப் பார் கை விளக்கு கண்ணீர் விட்டுக் கலங் கிடும் விளக்கு. தன்னைத்தானே விழுங் கிடும் விளக்கு. அது என்ன?
5. காசுபோல் இலை இருக்கும். கவரி மான் பூப்பூக்கும். தின்னக் காய்காய்க் கும். தின்னாத பழம் கொடுக்கும். அது என்ன?
6. செடியில் விளையாத பஞ்சு. தறியில் நூற்காத நூல். கையில் தொடாத நூல். அது என்ன?
7. ஆடச்சொல்லி சட்டை போடுவான். ஆடும் முன்பே கழற்றிவிடுவான். அவன் யார்?
8. முகத்தைக் காட்டுவான். முதுகைக் காட்டமாட்டான். அவன் யார்?
9. காலைக்கடிக்கும்-செருப்பு அல்ல. காவலுக்கு உதவும்-நாயல்ல. அது என்ன?



விடை அடுத்தவாரம்.

கதை முற்றம்

மண்ணின் கேள்வி

'எனக்கு மட்டும் ஒரு காணி நிலம் சொந்தமாயிருந்தால கஞ்சிக்கு ஏன் காற்றாய்ப் பறக்கப் போறேன்?' என்று தன்னைப் பார்க்கும் போதெல்லாம் குடியானவர்கள் பலர் பெருமூச்சு விடுவதைக் கண்ட மண்ணுக்கு அதன் காரணம் என்னவென்று விளங்கவில்லை. ஒருநாள் அது காற்றை நோக்கி, 'காற்றே, காற்றே! நீ எல்லோருக்கும் சொந்தமாயிருக்கிறாயே, நான் ஏன் சிலருக்கு மட்டும் சொந்தமாயிருக்கிறேன்?' என்று கேட்டது.

'அது என்னவோ போ, எனக்கு வேலை தலைக்கு மேல் கிடக்கிறது!' என்று சொல்லிவிட்டுக் காற்று மேலே சென்றுவிட்டது.

அடுத்தாற்போல் நெருப்பை நோக்கி, 'நெருப்பே, நெருப்பே! நீ எல்லாருக்கும் சொந்தமாயிருக்கிறாயே, நான் ஏன் சிலருக்கு மட்டும் சொந்தமாயிருக்கிறேன்' என்று கேட்டது மண்.

'அது என்னவோ போ, உனக்குப் பதில் சொல்ல என்னால் முடியாது' என்று சொல்லிவிட்டு நெருப்பு சாம்பலாகி விட்டது.

'சரி, நீரையாவது கேட்டுப் பார்ப்போம்' என்று எண்ணி, 'நீரே! நீரே! நீ எல்லாருக்கும் சொந்தமாயிருக்கிறாயே, நான் ஏன் சிலருக்கு மட்டும் சொந்தமாயிருக்கிறேன்?' என்று கேட்டது மண்.

'போடி, பைத்தியமே! உன்னிடம் இருக்கும் பொன்னை நீ ஏன் மனிதனுக்குக் காட்டினாய்? அதனால்தான் எங்களைப்போல் உன்னால் எல்லாருக்கும் சொந்தமாயிருக்க முடியவில்லை!' என்றது வானம்.

தகவல் முற்றம்

விளையாட்டு

உலகக் கிண்ண உதைபந்தாட்டப்போட்டி முதன் முதலாக 1930ம் ஆண்டு நடைபெற்றது. இதில் உருகுவே அணி வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

உலகக் கிண்ணக் கோப்பையை மூன்றுமுறை வென்ற நாடு பிரேசிலாகும்.

முதல் உலகக் கோப்பை போட்டியில் முதல் கோல் போட்ட வீரர், லூசியன் லாரென்ட் என்ற பிரெஞ்சுக்காரர் ஆவார்.

உலகிலேயே அதிகமான கோல் போட்ட கால் பந்து வீரர், பிரேசிலைச் சேர்ந்த 'பலே' என்பவரா வார். இவர் 1216 கோல்கள் போட்டார்.

பிரபல குத்துச் சண்டை வீரராக இருந்த முக மது அலியின் இயற்பெயர் காசியஸ் கிளே என்ப தாகும்.

ராக்கி மார்சியானோ என்ற குத்துச்சண்டை வீரர் 1947 முதல் 1956 வரை

தான் கலந்துகொண்ட 49 போட்டிகளிலும் வெற்றியைப் பெற்றுக்கொண்டார்.

மூன்று முறை அதிபார குத்துச்சண்டை சாம்பி யனாகத் தெரிவு செய்யப்பட்டவர் முகமது அலி யாவார்.

மைக் டைசன் தனது 20வது வயதில் அதிபார குத்துச்சண்டை சாம்பியன் பட்டத்தை வென்றார்.

உலகிலேயே மிக அதிகமாக பிரபலமாக குத்துச்சண்டை வீரர்களைக்கொண்ட நாடு கியூபா ஆகும்.

அறிந்து கொள்ளுங்கள்

இந்திய ஜனாதிபதிகள்

1. ராஜேந்திர பிரசாத் 26.1.50 -13.5.62 வரை
2. ராதா கிருஷ்ணன் 13.5.62 -13.5.67
3. ஜாகிர் குசேன் 13.5.67 - 03.5.69
4. வி.வி.கிரி 3.5.69 - 20.7.69 மீ24.8.69 -24.8.74
5. பக்ருதீன் அலி அகமது 24.8.74-11.2.77
6. நீலம் சஞ்சீவ ரொட்டி 25.7.77 -25.7.82
7. கியானி ஜைல் சிங் 25.7.82 -25.7.87
8. ஆர். வெங்கட்ராமன் 25.7.87 -25.7.92
9. சங்கர் தயாள் சர்மா 25.7.92-25.7.97
10. கே. ஆர் நாராயணன் 25.7.97 -25.7.02
11. ஏ.பி.ஜே. அப்துல்கலாம் 25.7.02 -தொடர் கிறார்

தொகுத்தவர்: சி. மலர்விழி

பூனைகளைப் பற்றி தெரிந்து கொள்வோமா?

பூனைகள்- வீட்டு விலங்குகளாகவும், காட்டு விலங்குகளாகவும், பல ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வருபவை.

பூனைகள் வேட்டையாட உதவும் விலங்குக ளாகவும், கடவுளாகவும், ஏன் -ராட்சர்ல்களா கக்கூட கருதப்பட்டு வந்துள்ளன. அழகு, கம் பீரம், நளினம் இவற்றின் சின்னமாகக் கருதப் படும் பூனைகள் ஓவியர்களுக்கும் எழுத்தாளர்க ளுக்கும் முக்கியமான கருவாகவும் இருந்துள் ளன.


பூனைகள் மாமிசம் உண்ணும் பிரிவினைச் சேர்ந்தவை. நான்கு பெரும் பிரிவுகளும், அவற் றில் 37 உட்பிரிவுகளும் பூனைகளில் உள்ளன. இவை அண்டார்டிகா, ஆஸ்திரேலியாவைத் தவிர உலகெங்கும் பரவலாக உள்ளன.

சிங்கம், புலி போன்ற பூனைக்குடும்பத்தைச் சேர்ந்த பெரிய விலங்குகளைத் தவிர வளர்ப் புப் பிராணிகளான வீட்டுப் பூனைகள் சுமார் பன்னிரண்டு வகை உள்ளன.

பூனைகளுக்கு தலை அதன் உடலை வைத்துப் பார்க்கும்போது சற்று பெரிதுதான். இதன் மூக்கும் தாடையும் மிகச் சிறியதாக இருப்பதால் பூனையின் முகம் தட்டையாக இருப்பது போல் தோன்றும்.

பூனையின் கேட்கும் திறனும் ஒலியை பகுத் தறியும் திறனும் அதிகம். இதனால், மனிதர்க ளால் கேட்க முடியாத நுண்ணிய சத்தங்க ளைக்கூட பூனைகளால் கேட்க முடியும்.

பூனைகளின் காதுகளுள் இருக்கும் திரவம் தான் அதன் உடல் சமநிலையில் இருப்பதற்கு உதவுகிறது. இதனால்தான் பூனை உயரத்திலி ருந்து கீழே விழுந்தாலும் தன் கால்களை ஊன்றி நிற்க முடிகிறது.



பூனைகளின் பார்வைத் திறனும் மிக அதி கம். முழுமையான இருட்டில் மட்டும் இவற் றால் பார்க்க முடியாது. கொஞ்சம் வெளிச்சம் போதும்.... பூனைகளால் பார்த்து உணர்ந்து கொள்ள முடியும்.

பூனைகளுக்கு மிக முக்கியமானது அவற் றின் மீசை முடி. அவற்றின் உணர்திறனும் அதிகம். முடியில் மிக நுண்ணிய பொருள் பட் டால்கூட சட்டென அதற்குத் தெரிந்துவிடும். இருட்டில் வழி கண்டுபிடிக்கவும் பூனைக்கு அதன் மீசைமுடி உதவும். பூனைகளுக்கு கூட் டமாக வாழ்வது பிடிக்காது. இவை எல்லை அமைத்து வாழ்பவை.

பூனைகளை எந்த வேலையையும் செய்யப் பழக்குவது கடினம். ஆனால், ஒருமுறை பழக் கிவிட்டால் அந்த வழக்கத்திலிருந்து மாற்றுவது அதைவிடக் கடினம்!

பூனைகள் சுமார் இருபத்தைந்திலிருந்து முப்பத்துநான்கு அங்குல நீளம் வரை வளரும்.

எடை சுமார் நாலிலிருந்து பத்து கிலோவுக் குள் இருக்கும்.

இவற்றின் உணவு - சிறிய பறவைகள், எலி கள், மீன்கள், நத்தைகள், பால் மற்றும் மனி தர்களால் தரப்படும் எந்த உணவும்.

வருடத்துக்கு சுமார் 3 குட்டிகள் வரை போடும். இவற்றின் கர்ப்ப காலம் 63 நாட்கள். ஒரு வயதில் நன்றாக வளர்ந்துவிடும்.

பூனைகளால் இனிப்புச் சுவையை உணர முடியாது.


வர்ணஜாலம்

எதிர்த் தாக்குதலின் இன்னொரு நிறம்



என்கௌன்டர் எனப் பெயர்பெறும் பொலிஸ் எதிர்த்தாக்குதல் பற்றி வந்திருக்கும் மூன்றாவது படம் வர்ணஜாலம். தமிழ்ச் சினிமாவில் கதையே மைய இடத்தைப் பெறவேண்டும் எனும் நோக்கில் வெளி யாகியிருக்கும் இன்னொரு படம் வர்ணஜாலம்.

படத்தில் நாசர், சிறீகாந்த், சதா, குட்டிரேவதி, தலை வாசல் விஜய், அஜய்ரத்தினம் என அறிந்த நடிகர்கள் இருக் கிறார்கள். ஆனால் இவர்களில் எவரும் பெறும் முக்கியத்து வத்தை விட கதைக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டிருக் கிறது. போராளிகள் மீதான *என்கௌன்டரை* மையமாக வைத்து கமல்ஹாஸனின் குருதிப்புனல். வெளியானது. சமூகவிரோதிகள் மீதான எதிர்த் தாக்குதலை *என்கௌன்*



டர் எனத் தவறாகப் பெயர் சுமத்தி அரசியல் பிழையுடன் கௌதமின் காக்க காக்க படம் வெளியானது. தற்போது *என் கௌன்டர்* எனும் பெயரில் பொலிஸ் அதிகாரிகளின் அதிகார வேட்கையும், அதனிடையில் சின்னாபின்னமாகிப்போகும் ஒரு மத்தியதர வர்க்க குடும்பத்தின் அவலமும் பற்றியதாக வர்ணஜாலம் வெளியாகியிருக்கிறது. *காக்க காக்க*வில் பழிவாங்குதலுக்கு உள்ளாகிறவர் ஒரு சமூகவிரோதி. வர் ணஜாலத்தில் சாதாரணமான ஒரு தமிழ் மனிதனின் பழி வாங்குதலுக்கு உள்ளாகிறவர் வஞ்சகம் நிறைந்த ஒரு பொலிஸ் மேலதிகாரி. மேலதிகாரியின் பாத்திரம் மிக நுட்பமான ஒரு பாத்திரம். நாசரைத் தவிரவும் இந்தப் பாத் திரத்தை பிற எவரும் இவ்வளவு நேர்த்தியாகச் செய்திருக்க முடியும் என்றும் தோன்றவில்லை.


மகளை நேசிக்கும் தகப்பன், மகனின் விசித்திரமான உளஅமைவை இயல்பாக எடுத்துக்கொள்ளும் தகப்பன், தம்பிக்கும் தம்பி மனைவிக்கும் பொறுப்பான அண்ணன், நண்பனின் கடிதம் பெற்று நம்பி வருபவனை இயல்பாக ஏற்கும் சாதாரண மனிதன், தனது அன்றாட பொலிஸ் வாழ்வின் இயல்பான அங்கமாக சமூக விரோதிகளுக்கு நண்பனாக இருக்கும் பாத்திரம், என நாசர், பாத்திரத்தின் தன்மையை உணர்ந்து பொருத்தமாக நடித்திருக்கிறார். இசை கற்பிக்கும் ஆசிரியராக நிழல்கள் ரவி, அவரது மனைவியாக அகண்ட கறுத்த விழிகள் கொண்ட சரண்யா, மகளாக சதா, சரண்யாவின் தம்பியாக சதாவின் முறை மாமனாக சிறீகாந்த் ஆகியோர் நடித்திருக்கிறார்கள்.

நிழல்கள் ரவிக்குத் திடீரென உடல் சுகமில்லாது போக, சினிமா போஸ்ட்டர் தீட்டும் சிறீகாந்த் குடும்பப் பொறுப்பை ஏற்கிறார். சதாவை மருத்துவப் படிப்புப் படிக்க வைக்கிறார். சிறீகாந்த்தை நேசிக்கும் சதா, பேருந்துக்காகக் காத்திருக் கும் இடத்தில் பொலிஸ் துப்பாக்கிச் சூடொன்றில் மரண முறுகிறார். ஒரு சமூக விரோதியைக் காப்பதற்காக பொலிஸ் கமிசனர் நாசர், மரணமுற்ற சதா, தாங்கள் எதிர்தாக்குதல் புரிய வந்த குணா எனும் சமூக விரோதியின் கள்ளக்காதலி எனச் சோடனை செய்ய, நிழல்கள் ரவியும் அவரது மனைவி சரண்யாவும் தற்கொலை செய்துகொள்கிறார்கள். சிறீகாந்த் பொலிஸ் வன்முறைக்கு ஆளாகிச் சிறைப்படுகி றார். சிறைக்கு வரும் இன்னொரு பொலிஸ் அதிகாரி யான அஜய்ரத்தினத்தின் மூலம், நாசர்தான், தான் நேசித்த தனது உறவுகளின் மரணத்துக்குக் காரணம் எனத் தெரிந்து கொள்கிறார் சிறீகாந்த். அதிலிருந்து நாசரைப் பழிவாங்கும் சிறீகாந்தின் திட்டமிடல்கள் தொடங்குகின்றது. வர்ணஜாலத்தின் கதை இதிலிருந்துதான் விரிகிறது.

நாசரின் மகன் பெரிய படிப்பாளி.. கார்ல் ஸாகனை அவனுக்குத் தெரியம். அல்வின் டப்ளரை அவன் வாசிக் கிறான். கணினியில் மேதமை படைத்தவன் அவன். வாழ்வு குறித்த எதிர்மறையான தத்துவப் பார்வை கொண்டவன் அவன். தனது கண்முன்னால் தற்கொலைச் செயலில் ஈடுபடும் காதலர்களை அவன் முட்டாள்கள் என்கிறான். அவர்களைக் காப்பாற்றவும் அவன் முயற்சிப்பதில்லை. வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் கார் பிரேக் பிடிக்கவில் லையென அவன் தனது முழுக் குடும்பத்தை- பெண்களை யும் குழந்தைகளையும் கலவரத்தில் ஆழ்த்துகிறான். எதிர்பாராத அதிர்ச்சிகளை இயல்பாக ஆக்குவது அவனது நடத்தை. ஒரு வகை உளவியல் பிரச்சினை கொண்டவ னாக அவனைக் குடும்பத்தவர் நினைக்கின்றனர்.

சிறீகாந்த் தனது முதல் பழிவாங்கலுக்கு இவனைப் பகடைக்காயாக ஆக்க நினைக்கிறார். தானே தன்னைக் காயப்படுத்திக்கொண்டு, தன்னை எந்தக் காரணமுமற்று ரத்தக் காயப்படுத்தி விட்டதாக நாசரின் மகன் மீது குற்றம் சுமத்துகிறார். அவனை உளவியல் சிகிச்சை விடுதியில் சேர்க் கச் செய்கிறார். நாசரின் பட்டயங்களும் வெகுமதிகளும் பாதுகாக்கப்படும் அறைக்குத் தானே தீ வைத்து அழித்து விட்டு நாசரின் மகன்தான் தீ வைத்தான் என நம்பவைக் கிறார். முழுக்குடும்பத்தின் நிம்மதியும் இதனால் அழிகிறது.

தனது தம்பி மனைவி உடைமாற்றுவதை நாசர் மறைந் திருந்து பார்ப்பதானதொரு நாடகத்தை ஆடுவதன் மூலம், தம்பியும் அவரது மனைவியும் நாசரைத் தூசனத்தால் ஏசி விட்டு வீட்டிலிருந்து வெளியேறுகிறார்கள். சமூகத்தில் மிகப்பெரிய மரியாதை படைத்த மனிதரான நாசரது நிம்மதி குலைந்து போகிறது. தனது மகனின் பிரிவு, தனது தம்பி யின் பிரிவு என அவமானமும் அமைதியின்மையும் நாசரை வந்து அடைகின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் நாசரது மக ளையும் சதியின் மூலம் பிரிக்க நினைக்கிறார் சிறீகாந்த். சமவேளையில் நாசரினால் தப்பிவிக்கப்பட்ட சமூக



விரோதியான குணா மறுபடியும் நாசரிடம் அடைக்கலம் கோருகிறான். அவனைச் சுட்டுக் கொல்வதற்காக பொலிஸ் அலைகிறது. நாசரின் மகளுக்கும் அவரது தகப்பனின் சுயரூபத்தைத் தெரியப்படுத்துகிறார் சிறீகாந்த். படத்தின் உச்சக் காட்சியும் வருகிறது.

குணாவைத் தப்ப வைப்பதற்காகத் தனது காரில் அவர்களைப் பின்சீட்டில் மறைத்து வைத்தபடி தப்பிச் செல்கிறார் ஓய்வு பெற்ற பொலிஸ் கமிசனரான நாசர். சிறீகாந்த் அவரையும் அவர் தப்புவிக்க உதவி செய்யும் சமூக விரோதிகளையும், பொலிஸ் துறையுடன் மோதுமா றான திட்டமிடலை மேற்கொள்கிறார். பொலிசாருக்கும் நாசரின் காரிலிருக்கும் சமூகவிரோதிகளுக்கும் நடக்கும் துப்பாக்கிச் சமரில் சமூகவிரோதிகள் கொல்லப்படுகிறார் கள். நாசர் பொலிசாரின் சூட்டுக் காயத்துக்கு உள்ளாகி றார். தலைகுப்புறக் கவிழ்ந்து காரிலிருந்து தூக்கி வீசப் படுகிறார் நாசர். அருகில் வரும் சிறீகாந்த சொல்கிறார்: அதே நாள் அதே மாதம் அதே நேரம் நடந்த தனது உறவுகளின் மரணம் ஞாபகமிருக்கிறதா எனக் கேட்கி றார். *என்கௌன்டர்* எனும் பெயரில் தனது முழுக் குடும்ப மும் அழிந்ததற்கான பழிவாங்கல் இந்த *என்கௌன்டர்* என்கிறார் அவர். திட்டமிட்ட தனது பழிவாங்கும் படலத் தின் நடவடிக்கை இது என்கிறார் சிறீகாந்த். ஓய்வு பெற்ற பழைய பொலிஸ் கமிசனரான நாசரின் உயிர் பிரிவதுடன் படம் நிறைவுறுகிறது.

படத்தின் கதையோட்டத்தில் எந்த நடிகருக்கு என்ன பாத்திரம் இருக்கிறதோ அதை மட்டுமே இயக்குநர் நடிகர்களிடமிருந்து எடுத்துக் கொண்டிருக்கிறார். நாச ரும் சிறீகாந்த்தும் மிக இயல்பாக நடித்திருக்கிறார்கள். நகுலன் பொன்னுச்சாமி மிக நேர்த்தியாக இயக்கியிருக் கிறார். குட்டிரேவதிக்கும் சிறீகாந்துக்கும் காதல் காட்சி இல் லையென்பது ஆறுதலாக இருக்கிறது. அக்கா மகளான சதாவுக்கும் சிறீகாந்துக்கும் இடையிலான காட்சிகள் கூட அதிகமில்லை. படத்துக்கு அது அவசியமுமில்லை.

படத்தில் துருத்திக் கொண்டிருக்கும் மிக முக்கிய மான அம்சம், கருணாவின் நகைச்சுவைப் பகுதி. தனது காதலியின் அவாவை நிறைவேற்றவதற்காகக் குறுக்கு வழி யில் பணக்காரனாக நினைக்கிறார் கருணா. கள்ள நோட்டு வியாபாரத்தில் அகப்பட்டு சிறைக்குப் போகிறார் அவர். அரசு அதிகாரிகளையும் சாதாரணப் பொதுமக்களையும் சகட்டுமேனிக்குச் சாடியிருக்கிறார். படத்துடன் எந்தவிதத் திலும் ஒட்டாத காட்சிகள் அவர் தொடர்பான காட்சிகள்.

மிகப்பொருத்தமான ஒளிப்பதிவும் பின்னணி இசை யும் படத்தொகுப்பும் இப்படத்திற்கு வாய்த்திருக்கிறது. ஹாலிவுட் சினிமாவைப் போலவே கோலிவுட் சினிமாவும் ஒரு தேர்ந்த தொழில்நுட்ப அமைப்பாக ஆகியிருக்கிறது என்பதற்கான உதாரணங்களாக சமீபத்திய தமிழ் சினி மாக்கள் வருகிறது. அந்த வகையில் காக்க காக்கவை அடுத்து, தொழில்நுட்ப நேர்த்தியுடன் வெளியாகியிருக் கும் படம்தான் வர்ணஜாலம்.

படத்தில் கதாநாயக அம்சங்கள் மட்டுப்படுத்தப்பட்டி ருக்கிறதேயொழிய முற்றிலும் இல்லாது போய்விடவில்லை. இருபது பேரை ஒற்றையாக அடித்துச் சாயக்கிறவராக சிறீகாந்த் சித்திரிக்கபட்டிருக்கிறார். ஐந்து டூயட்டுகளுக்குப் பதில் இரண்டு டூயட்டுகள் பாடவும் செய்கிறார். மிகமோச மான நம்பத்தகாத ஒரு காட்சி, சிறீகாந்த் சிறைக்கு வரும் பொலிஸ் அதிகாரியான அஜய்ரத்தினத்துடன் உரையாடும் காட்சி. தனது மேலதிகாரியான பொலிஸ் கமிசனர் நாசர் தான், சதாவினதும் அவளது குடும்பத்தினரதும் சாவுக்குக் காரணம் என்பதாகச் சிறீகாந்த்திடம் இன்னொரு பொலிஸ் அதிகாரியான அஜய்ரத்தினம் சொல்வது நம்ப இயலாதது. ஒரு கைதியிடம் ஒரு பொலிஸ் அதிகாரி தனது துறை சார்ந்த ரகசியங்களைப் பகிர்ந்து கொள்வது என்பது தமிழகப் பொலிஸ் துறையின் வன்முறைகளை அறிந்த வர்கள் நம்பவே இயலாததாகும்.

என்கௌன்டர் பற்றிய படங்கள், குறிப்பாக காக்க காக்க ஒரு திரிபான பார்வையைத் தமிழ் மக்கள் முன்பு வைத்துப் பெருவெற்றி பெற்றிருக்கும் சூழலில், காவல்துறை மேலதி காரிகள் எவ்வாறு சமூகவிரோதிகளிடம் ரகசிய உறவு பூண் டிருக்கிறார்கள் எனும் செய்தியைப் பட்டவர்த்தனமாக முன் வைத்திருக்கிறது வர்ணஜாலம் திரைப்படம். அதுமட்டுமல்ல அப்பாவி மக்களைக் கொன்றுவிட்டு அதற்குக் காரணம் ஜோடிக்கிற பொலிஸ்துறையின் குரூரமான அமைப்பு சார்ந்த நடவடிக்கைகளையும் தோலுரித்திருக்கிறது வர்ண ஜாலம் திரைப்படம். இந்த வகையில் வெகுஜன சினி மாவில் வர்ணஜாலத்தின் இடம் ஆக்கபூர்வமான தன்மை கொண்டதாகும். வர்ணஜாலத்தை இந்தவகையில் நாம் வரவேற்கவே வேண்டும்.

— யமுனா ராஜேந்திரன்

நகசன் Cash and Carry



இலங்கை, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள், கடலுணவு வகைகள், உடன் மரக்கறிவகைகள் தொலைபேசி அட்டைகள் மற்றும் தமிழ் மக்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் மிக மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
இலங்கை இந்திய பசுமையான மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள், பதப்படுத்தப்பட்டுள்ள உணவுகள், பழவகைகள், V.D.O C.D க்கள் விற்பனைக்கும், வாடகைக்கும் மற்றும் உங்களுக்குத் தேவையான பொருட்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.

217, The Broadway, Southall, Middiesex, UB1 1NB - Tel: 020 3574 4018 Fax: 020 8574 4035 Mobile: 07904100201

சிறுமை கண்டபோது பொங்கி எழு, சீறிச் சின.

நாம் எப்போதாவது இதனை யோசித்துப் பார்த்ததுண்டா?

ஒருபொழுதாவது உயிர்துடித்ததை உணர்ந்திருக்கின்றோமா? உயிர் துடித்த ஒலியினை நம் காது கேட்டிருக்கின்றதா? எறும்புகள் இறக்கின்றபோது எழும்பும் அவல ஒலியினை கேட்கும் அளவு எமது செவிப்பறை அதிர்வதில்லைத்தான். அதனால் அது அவல ஒலியை எழுப்பவில்லை என்று அர்த்தம் இல்லை அல்லவே!

அவல ஒலியை எழுப்பியவையும் உண்டுதானே? அவை நாம் செவிப்பறையை அதிரவைத்ததும் உண்மைதானே?

அப்போதாவது நாம் குரல் எழுப்பினோமா? ஓங்கி ஒலித்தோமா? ஒன்றும் செய்யவில்லையே! ஓடி ஒளிந்தோமல்லவா? சிறுமை கண்டபோது பொங்கி எழுந்தோமா? சீறிச் சினந்தோமா? எதுவும் இல்லையே! என்ன செய்தோம் நாம்? எங்கு மறையலாம் என்று பார்த்தோம் இல்லையா? பாரதியார் தனது பாப்பாப் பாட்டில் ஒரு கவி வடித்தார்.

பாதகம் செய்பவரைக் கண்டால் - நாம்
பயம் கொள்ளல் ஆகாது பாப்பா
மோதி மிதித்து விடு பாப்பா - அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா.

பாப்பாவுக்கே அப்படிச் சொல்லி விடுகிறார் பாரதியார். பாதகம் செய்பவரைக் கண்டால் மோதி மிதித்து விடு அது செய்ய உன் உடலில் பலம் இல்லையா? அப்படியென்றால், பாதகம் செய்பவன் முகத்தில் காறி உழிழ்ந்துவிடு. அதையாவது செய் என்கிறார் பாரதியார். அதாவது சிறுமை கண்டபோது பொங்கி எழு. சீறிச்சின என்கின்றார் பாரதியார்.

பாரதியார் சொன்னார் என்பதனால் மாத்திரம் அல்ல. நம் வாழ்வில் மனிதம் மிளிரவேண்டும். நம் பார்வையில் மானுடம் தழைக்கவேண்டும் என்பதற்காக. பாருங்கள். உலகைப் பாருங்கள். நம் வாழ்வைப் பாருங்கள். பொய்யுரைக்கின்றோமா? இல்லை. புளுகு அவிழ்த்து விடுகின்றோமா? அல்ல. எங்கள் வாழ்நாளில் எத்தனை உயிர்களை வதைத்தோம். எத்தனை உடல்களைச் சிதைத்தோம். ஒன்றா, இரண்டா? ஓர் ஆயிரம் என்று சொல்ல முடியாதா? எப்போதாவது அதற்காக நாம் அழுதோமா? அரற்றினோமா? அட. அதுதான் வேண்டாம். ஆதங்கப்பட்டோமா? இரங்கினோமா?

சில சில நேரங்களில் மனதை வந்து அருட்டியதுதான். மனதின் ஓரத்தில் துயரின் நிழல் கவிந்துவிட்டு கலைந்து போனதுதான். துயரும் கரைந்து போனதுதான். ஆயினும் அதனை எமது துன்பமாக எப்போதுமே நினைந்ததில்லை. அனுபவித்து உணர்ந்ததில்லை. சட்டையில் ஒட்டியிருந்த தூசியைப்போல அதனைத் தட்டிவிடுவோம். அப்படித்தான் இருந்தது அந்தத் துன்பம். இதனை இன்னும் சற்று எளிமையாகச் சொல்வோமே!

நாய்க்குக் கல்லெறிந்து அது கதறியழப் பார்த்திருக்கின்றோம். இல்லையா? அது நோ தாங்காது காலைத்தூக்கி கெந்திக்கெந்தி ஓட நாம் கெக்கட்டமிட்டு சிரித்திருக்கின்றோம். இல்லையா?

பல்லியின் வாலைவெட்டி, அந்த வால் தனித்துக்கிடந்து துடிப்பதைக்கண்டு இரசித்திருக்கின்றோம் அப்படித்தானே?

பிஸ்கெற்றில் பிளேட் வைத்து காகத்திற்கு எறிந்திருக்கின்றோம். காகம் பறந்தபடியே பிஸ்கெற்றை கவ்வும். பிஸ்கெற்றைக் கவ்வுகிறேன் என்று பிளேட்டைத்தான் கவ்வும். சிறிது நேரம்தான். மரத்தில் இருக்கின்ற காகத்தின் வாயில் இருந்து இரத்தம் வடியும். அதைப் பார்த்து எங்கள் கெட்டித்தனத்தை எண்ணி வியந்து மகிழ்ந்திருக்கின்றோம். அப்படிச் செய்தோமல்லவா?

ஓடுகின்ற ஓணானைப் பிடித்து, வாலில் நூல்கட்டி, மரத்தில் தலைகீழாகத் தொங்கவிட்டு அது வாலை ஆட்டமுடியாது தலையால் துடிக்க, அது துடிப்பதைக் கண்டு, பறந்து வந்த காகம் ஒரு கொத்துப்போட, இல்லையென்றா சொல்வீர்கள்?

பட்டமரத்தில் ஏறி, பனம் பொந்தில் கைவைத்து, தாய்க்கிளி கதறக் கதற, பச்சையாய், பசும்பாலனாய், கொஞ்சுமொழிபேசும், அந்தப் பிஞ்சுக்கிளியை, கொண்டுவந்து கூட்டில் அடைத்து, கொடுமை செய்தோமல்லவா? கொவ்வைப் பழம் கொடுத்தோம்தான். ஆனால் பின்னேரம் அந்தத் தாய்க்கிளி வேப்பமரத்தில் வந்து இருந்து தன் குஞ்சுக்கிளியை, செல்லமகனைப் பார்த்து கதறுகின்றதே! கண்ணீர் வடிக்கின்றதே! அது கதறும் ஓசை எங்களுக்கும் கேட்கவில்லைத்தானே! அத கண்ணீர் விடுவதை நாம் பார்க்கவில்லைத்தானே! இவையெல்லாம் நடந்ததில்லையா?

கெற்றப்போல் கொண்டு திரிந்து, பறந்து போகும் மைனாவை, குருவியை இலக்கு பார்த்து அடித்து வீழ்த்தினோமே! மரத்தில் தாவும் அணிலுக்கு இலக்கு தவறாமல், கெற்றப்போலால் அடித்தோமே! வீழ்ந்து கிடந்து அவை துடித்தனவே! வீணாய்ப் போயிற்றே உயிர்கள். எம் வீரியம் கண்டு, வெற்றி கண்டு, எத்துணைப் பெருமிதப் பட்டோம். இல்லையா? இல்லை என்று சொல்வீர்களா?

சும்மா சொல்லாதீர்கள். மாங்காயைக் கோந்தியது அணில். அதனால் அடித்தோம் என்று பொய்விடாதீர்கள். பலாக்காயை நோண்டியது குருவி. அதனால் கொன்றோம் என்று விளக்கம் கூறாதீர்கள். மாங்காயையும், பலாக்காயையும் இன்னும் எஞ்சிய எல்லாக் காய்களையும், கனிகளையும், பூவையும், பிஞ்சையும் காக்க நாம் எவ்வளவு காபந்து பண்ணியுள்ளோம். அவற்றையும் மீறியா காயும், கனியும் அழியப்போகின்றன.

கதை விடாதீர்கள். கொலை செய்வது எங்களுக்கு ருசி. உயிரை வதைப்பதில் எங்களுக்கு மகா ஆனந்தம். உடலைச் சிதைப்பதில் எங்களுக்கும் கொள்ளை ஆசை. இப்படி எவ்வளவு கொடுமைகள் செய்தோம். இவற்றை எல்லாம் நாம் கேட்கலாம் அல்லவா?

கிழிய கிழியக் கேட்கலாம்.

இன்னும் வேறு என்ன செய்தோம்? எப்படியெல்லாம் செய்தோம்? எவ்வாறெல்லாம் செய்தோம்? அண்டை அயலாருடன் நமக்கு ஏதும் சண்டை சச்சரவு மூண்டிருந்தால், அதைத்தீர்க்க நமக்குக் கிடைத்தவை வாயில்லா ஜீவன்கள்தானே?

பக்கத்து வீட்டு நாய்க்கு, இரவில் யாருமில்லா நேரம் பார்த்து, உலக்கையால் மண்டை அடி கொடுத்திருக்கிறோம். இல்லையா?

இவர்கள் என்ன, இவ்வளவு கோழி வளர்க்கவோ, என்று பொறாமைவேக, சோற்றுடன் பொலிடோல் கலந்து விசிறி இருக்கிறோம். ஒரு கோழி, இரண்டு கோழி, நாலு கோழி, ஆறுகோழி, ஒன்பது கோழி,

மாயோன் எழுவன்...

பதினொரு கோழி, பதின்மூன்று கோழி. எண்ணிப் பதின்மூன்று கோழி. அத்தனையும் பத்தைக்குள் ஒவ்வொன்றாய்ச் சுருண்டு சுருண்டு விழ, துடி துடித்து மாய்ந்து விழ, என்னமாய் அதனை இரசித்து. மனதினுள் சிரித்து, பார்த்திருக்கின்றோம். பரிதாபப்படவில்லை. பாவமே என்று இரங்கவில்லை. இதனை யார் மறுக்கப்போகின்றீர்கள்,

வேண்டாம். வேண்டாம். வேதனையை இப்படியே குத்திக் கிளறி கொடுநெருப்பில் இட்டால்போல், எடுத்துவிட வேண்டாம். நாம் சற்று மாற்றி வேறு காலத்திற்குப் போவோம்.

பாரதியார் பாப்பா பாடலில் வேறு என்ன சொன்னார்?

கொத்தித் திரியும் அந்தக்கோழி-அதைக்
கூட்டி விளையாடு பாப்பா
எத்தித் திருடும் அந்தக் காக்காய் - அதற்கு
இரக்கப்படவேணும் பாப்பா.

பாரதியார் என்னமாதிரிச் சொன்னார்! எப்பவோ சொல்லியும் விட்டார். கொத்தித் திரியட்டுமன் கோழி. எத்தித் திருடட்டுமன் காக்காய். அவற்றால் அப்படித்தான் வாழமுடியும். அதற்காக அவற்றை வெறுக்காதே, கல்லெறிந்து விட்டுக் கலைக்காதே! அவற்றிலும் இரக்கப்பட்டுக்கொண்டே இரு. சரி, பாரதியார் வேறு என்ன சொன்னார்?

பாலைப் பொழிந்துதரும் பாப்பா - அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா
வாலைக் குழைத்துவரும் நாய்தான் - அது
மனிதருக்குத் தோழனடி பாப்பா
பிறகு?
வண்டியிழுக்கும் நல்ல குதிரை - நெல்லு
வயலில் உழுது வரும் மாடு
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு - இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா.

இப்படிச் சொல்ல பாரதியாரால்தான் இயலும். உயிர்களிடத்து அன்பு வேண்டும் என்று ஓதினவர் அல்லவா அவர். அதனால்தானே, நான்கு நாளாகப் பட்டினி என்று பாரதியின் மனைவி செல்லம்மா நெல்லை இரவல் வாங்கி வர, நெல்லினை அள்ளி குருவிகளுக்கு உணவாய்ப்போட்டு, குருவிகள் நெல்லினை உண்ணும் அழகினைப் பார்த்தவரல்லவா பாரதியார்! அந்தப் பாரதியாரால்தானே காக்கை குருவி எங்கள் ஜாதி என்று பாடமுடியும்.

நாம் என்ன செய்கின்றோம்? பிஸ்கெற்றில் பிளேட் வைத்து காகத்திற்கு அதைக் கடிக்கக் கொடுக்கின்றோம். காகத்தின் கடைவாயில் இருந்து இரத்தம் வடிய அதைப் பார்த்து மகிழ்கின்றோம்.

இந்தளவு கல் நெஞ்சமாய் இருக்கின்றோம் நாம். கறள் தட்டிக் காய்ந்து போய்க்கிடக்கின்றது நம் மனது. நெஞ்சில் கொஞ்சமும் இரக்கம் இல்லை. கண்ணில் சிறிதும் கசிவு கிடையாது.

எல்லோரும் ஓடுகின்ற பக்கம் ஓடி, எல்லோரும் பார்க்கின்ற திசைகளைப் பார்த்து, எல்லோரும் செய்கின்ற செயல்களைச் செய்து

நமக்கென்றொரு வழி திறக்காது, நமக்கென்றொரு வாய்க்கால் வெட்டாது, நமக்கென்றொரு பாதை போடாது, நமக்கென்றொரு பார்வையே இல்லாது,

போட்ட வழியிலேயே போய், வெட்டிய வாய்க்காலிலேயே ஓடி, அமைத்த பாதையிலேயே நடந்து, இருந்த பார்வையிலேயே பார்த்து, வாழ்வை அப்படியே வழங்கிக்கொண்டிருக்கின்றோம்.

நாம் வேறு ஏதும் முறையில் சிந்தித்தோமா?

நாம் செய்தவைதாம் என்ன?

தாய்க்கிளி கதறக் கதறக் குஞ்சுக்கிளியைக் கொண்டு வந்து கூண்டில் அடைத்து சந்தோசம் கொண்டோம்.

நாயும் பல்லியும், காகமும் குருவியும், ஓணானும், மைனாவும் எம்மால் பட்ட துன்பங்களை எப்போதாவது நாம் எமது துன்பமாக உணர்ந்தோமா?

இப்போதுதான் அதனை அப்படியே உணர நமக்கு சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. அன்னியர் நமக்கு அத்தனை கொடுமைகள் செய்கிறார்கள். இப்போதுதான் அதனை அப்படியே அறிந்துகொள்ள, அனுபவித்துக்கொள்ள நமக்கொரு விதி வாய்த்திருக்கிறது.

இந்தச் சந்தர்ப்பம் நமக்கு உவப்பானதா? மகிழ்வைத் தரக்கூடியதா? இருகரம் நீட்டி நாம் இதனை வரவேற்கின்றோமா?

இல்லை, இல்லவே இல்லை. மிகுந்த வேதனையுடன் எதிர்கொள்கின்றோம். மிக்க விரக்தியுடன் பார்க்கின்றோம். இன்னும் சொன்னால் ஆயுதம் தூக்கி அதனை எதிர்க்கின்றோம். அழுது பார்த்தோம். ஏலாமல் போயிற்று. அகிம்சை வழியைப் பார்த்தோம். அதுவும் இயலாமல் போயிற்று. இப்போது ஆயுதம் தூக்கி அதனை நாம் எதிர்க்கின்றோம்.

கல்லெறிந்தால் நாய் எப்படிக் கதறும்? வலியில்லாமலா அது வருந்தியது? நாய்பட்ட வலி அல்லவா நாம் படுகின்றோம். வால் வெட்டப்பட்ட பல்லியின் வேதனை என்ன?

தெரிகின்றதல்லவா இப்போதெல்லாம் நமக்கு?

கடைவாயில் இரத்தம் ஒழுக காகம்பட்ட வேதனை எப்படியிருக்கும்? நாம் அறிகின்றோம் அல்லவா?

தன் குஞ்சை இழந்தகிளி தன் வயிறு பற்றி எரிய பட்ட வேதனையின் கொடுமை எவ்வளவு நாட்களுக்கு நீடித்திருக்கும் என்று புரிகின்றோம் அல்லவா?

தலைகீழாகக் கட்டித் தொங்கவிடப்பட்ட ஓணான், எப்படி வலியால் துடிதுடித்திருக்கும் என்று தெரிகின்றதல்லவா?

குருவிகளும், மைனாக்களும், அணில்களும், காயம்பட்டு, கழுத்தறுந்து. செய்த கொடுமை என்னவென்று தெரியாது உயிரிழந்து பட்ட சின்ன துயர் எப்படிநோகும் என்று புரிகின்றதல்லவா?

இவையெல்லாம் சின்ன உயிர்தானே, சிறிய ஜீவன்தானே, வலி ஒன்று பெரிதாக வராது, வதைபடாது என்று ஒற்றைச் சொல்லில் சொல்லி விட்டுப் போகமுடியாதுதானே? படைக்கப்பட்ட அனைத்து உயிர்களும் மனிதர்களுக்கானவர். ஓம் ஒப்புக்கொள்கின்றோம். ஆனால் அராஜகத்திற்கானவை அல்ல, அநியாயத்திற்கானவை அல்ல. வக்கிரமான எங்கள் உணர்வைத் திருப்தி செய்வதற்கானவை அல்ல.

படைக்கப்பட்ட உயிர்களின் இழப்பு மனித மேம்பாட்டிற்கானவை என்றால் சரிதான். நியாயம்தான். மாமிசம் புசியாதே என்று சொல்வது மானுடத்தர்மம் அல்ல. ஆனால் அக்கிரமமாய் வக்கிரமாய் உயிர்களை வாங்குதல் வேண்டாம் என்கின்றோம். இயற்கைச் சமநிலையை இயற்கை தன் பாட்டிலேயே பேணும்.

இந்த அநியாயம் கண்டு, அக்கிரம் கண்டு, வக்கிரம் கண்டு நாம் வாளாதிருப்போம் அல்ல. வாயையாவது திறப்போம். வார்த்தைகளையாவது எறிந்து விடுவோம். காறி உமிழ்ந்து விடுவோம். கையில் ஏதும் கருவி கிடைத்தால் அது கல்லாக இருந்தாலும் கூட கவனமாகப் பயன்படுத்துவோம்.

பாரதியார் சொன்னாரே ரௌத்திரம் பழகு.

ஓம் ரௌத்திரம் பழகுவோம். அநியாயம் கண்டால் அநீதி நிகழ்ந்தால் ஆத்திரம் கொள்வோம். சிறுமை கண்டபோது பொங்கியெழுவோம். சீறிச் சினப்போம்.

இரண்டில் ஒன்றைப் பார்ப்பதற்கு தோளை நிமிர்த்து இன்னும் நீதி வரவில்லையெனில் வாளை உயர்த்து.


குழந்தை வளர்ப்பு: ஒரு தீறவு கோவ்

மேலைத்தேயக் குழந்தை வளர்ப்புப் பற்றிய ஒரு பார்வை

- சில பிரச்சினைகள் -

ஜெயசக்தி பத்மநாதன்

குழந்தை வளர்ப்பு ஓர் அழகிய கலை உணர்வு சார்ந்த ஓர் ஓவிய வார்ப்பு. அது ஓர் உருவாக்க விஞ்ஞானம். அதனால்தான் குழந்தை வளர்ப்பை மேலைத்தேய நாடுகள் ஒரு விஞ்ஞானமாகப் பார்க்கின்றன. அதனை உளவியல் ரீதியாக அணுகுகின்றன. குழந்தை பராமரிப்பு நிலையங்கள் குழந்தைகளுக்குத் தேவையான வசதிகளோடும் பாதுகாப்போடும் போதிய உபகரண சாதனங்களோடும் இருக்க வேண்டியது இன்றிய மையாததாக உள்ளது. அடிப்படையில் அவுஸ்திரேலியா போன்ற வளர்ந்த நாடுகள் 'குழந்தைகள்' என்ற கருத் தோட்டத்திற்குக் கொடுக்கும் பொருள் விளக்கம். 'ஒவ் வொரு குழந்தையும் தனித்துவமான நிபுணத்துவம் கொண்டது' என்பதாகும். ஒவ்வொரு தனிப்பட்ட குழந் தைக்கும் தனித்துவமானதும், சிறப்பானதும், தனியானது மான இயல்பு உள்ளது என்பது அதன் பொருளாகும். நாட் டினதும் பெற்றோரினதும் கடமை அவர்களின் தனித்துவம் (Identity) வளர்வதற்கு உகந்த சூழலை அக்குழந்தைக்கு



வழங்க வேண்டும் என்பதே. அது ஒரு குழந்தையின் அடிப்படை உரிமை. அவுஸ்திரேலிய Shopping town களுக்கு சென்றீர்கள் என்றால் அங்கு குழந்தைகள் பிரிவில் பிள்ளைகள் தமக்குரிய உடைகளையும் விளையாட்டு உப கரணங்களையும் தாமே தெரிவு செய்வதைச் சாதாரண மாகக் காணலாம். வளர்ந்தவர்கள் எவரும் தமது தெரிவை - விருப்பத்தை - பிள்ளைகள் மேல் திணிக்கவோ, புகுத் தவோ மாட்டார்கள். குழந்தைகளுக்குரிய பொருட்களில் பிள் ளைகளின் முடிவே இறுதியானதாக இருக்கும். அதற்கான பொருள் வாங்குதல் குறித்த எந்தச் சந்தர்ப்பத்திலும்.

இங்கு குழந்தைகளை அடிப்பது சட்டப்படி குற்றமாகும். Kids help not line 24 மணிநேரக் குழந்தைகளுக்கான உத வியை வழங்கும் தொலைபேசி சேவை அநேக மேலைத் தேய நாடுகளில் உண்டு. குழந்தைகளை இங்கு நடத்திக் கொண்டு செல்ல முடியாது. அவர்களுக்கான சக்கர வண்டி களிலேயே அவர்களைக் கொண்டுசெல்ல வேண்டும். வாக னங்களிலும் குழந்தைகளுக்கான தனியான இருக்கை வச திகளை பிரத்தியேகமாக ஏற்படுத்திய பின்னரே பயணம் செய்யலாம். அவர்களுக்கான பாதுகாப்பு இருக்கை வசதிக ளைச் சரியாக இல்லாத பட்சத்தில் வீதிபாதுகாப்பு அதிகாரி களினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவ்வாகன ஓட்டு நர் பொறுப்பாளியாவார்.

குழந்தைகள் தம் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் பெற்றோரிடம் அல்லது வளர்ந்தோரிடமிருந்து எவற்றை எதிர்பார்கின்றன என்பதையும் பெற்றோர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் ஜான் இல்சிலி கிளார்க் என்பவர் தன்னுடைய குழந்தைகள் விஞ்ஞான நூல் ஒன்றில் இவ்வாறு விளக்குகிறார். பெரும்பாலான குழந்தை பராம ரிப்பு நிலையங்களிலும் பெரும்பாலான மேலைத்தேய தாய்மார்களின் குழந்தை வளர்ப்பிலும் அவை நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

பிறப்பு தொடக்கம் 6 மாதம் வரை (Being Stage)


நான் உன்னை நேசிக்கிறேன். உன்னில் அக்கறையாக உள்ளேன். இனியும் இருப்பேன் என்பதை குழந்தை உண ரும் வண்ணம் பெற்றோர் நடந்துகொள்ள வேண்டும். உன் னுடைய தேவைகள் எனக்கு மிகவும் முக்கியமானவை. நீ நீயாக இருப்பதையிட்டு நான் மகிழ்கிறேன். உனக்காக இடைவெளியை எடுத்து நீ வளர உகந்த சூழல் இங் குண்டு. நீ உன் உணர்வுகளை வெளிக்காட்ட உனக்குப் பூரண உரிமை உண்டு. (அழுகை, சிரிப்பு, இயற்கை நிகழ் வுகள், சுகம், சுகவீனம் போன்றவை) உன்னில் அன்பு செலுத்தவும் அக்கறைப்படவும் நான் எப்போதும் உனக்கரு கில் இருப்பேன் என்பதை குழந்தை உணரும் வண்ணம் பெற்றோர் நடந்துகொள்ளவேண்டும்.

6-18 மாதம் வரை (Doing Stage)


நீ சுறுசுறுப்பாக, ஆர்வமாக (active) இருக்கும்போதும் அமைதியாக இருக்கும்போதும் நான் உன்னை நேசிக்கி றேன் என்பதைக் குழந்தை உணர்ந்துகொள்ளும் வகை யில் பெற்றோர் நடந்துகொள்ள வேண்டும். இது குழந்தை உலகத்தைப் புரிந்துகொள்ள ஆரம்பிக்கின்ற பருவம். எது செய்தால் எது நடக்கும் என்பதை அறிய விரும்புகிறது. தவழ்ந்து மெல்ல நடக்க ஆரம்பிக்கிறது. அதனால் குழ ந்தை இந்தப் பருவத்தில் துருதுருவென்று இருக்கும். கைக்கு எட்டியதெல்லாம் சுவைத்துப் பார்க்க அல்லது உடைத்துப் பார்க்க விரும்பும். அவர்கள் விளைவுகள் மூலம் உண்மைகளை உணர்கின்றனர். அது குழந்தை யைப் பொறுத்தவரை ஒரு புதிய உணர்ச்சி. நடக்க ஆரம் பித்ததால் பல் முளைக்க ஆரம்பித்ததால் எழுந்த உத்வே கம். அதனால் இந்தப் பருவத்தில் பெற்றோருக்கு அதிக பொறுப்பும், பொறுமையும் தேவைப்படுகிறது.

அதனால் இந்தப் பருவத்துக் குழந்தை அந்தச் சூழலுக் குள் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளவும், பரிசோதனை முயற் சிகளில் ஈடுபடவும் அனுமதியுங்கள். அதே நேரம் என்னு டைய அக்கறையும் உற்சாகப்படுத்தலும், என் பாதுகாப்பும் உனக்கிருக்கும் என்பதை குழந்தை உணரும் வண்ணமாக நடந்து கொள்ளுங்கள். இது குழந்தை தன் சூழல், குடும் பம், உறவுகள், வீடு, சமூகம் போன்ற அம்சங்களைக் கவ னித்துக் கொள்ள ஆரம்பிக்கும் காலம். இதன் மூலம் அன்பு, நெருக்கம், பரிவு, அரவணைப்பு, குடும்பப் பிணைப்பு இவற்றைப் புரிந்துகொள்கிறது. இதனால் இந்தப் பருவத்தில் அன்பான, மகிழ்வான சூழலை குழந்தைக்கு ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

அணுகுமுறை சம்பந்தப்பட்ட சந்தர்ப்பங்களில் Positive approach நேரடியாக சொற்கள் மூலம் கோபமற்ற ஆனால்



உறுதியான வாக்கியங்கள். உதாரணமாக இதனை உடைக்காதே என்று நெறிப்படுத்துவதைத் தவிர்த்து 'இதனை இப்படிலீபீ பயன்படுத்து' என்று சொல்லிக் கொடுங்கள். 'நீ உன் ஐம்புலன்களைப் பயன்படுத்தவும் உன் உணர்வு களை வெளிப்படுத்தவும் அதன் மூலம் புதியவற்றை நீ அறிந்து கொள்ளவும் உகந்த சூழலும் வசதிகளும் இங் குண்டு' என்பதைக் குழந்தை உணரும் வண்ணமாக நடந் துகொள்ளுங்கள். 'ஒரு விடயம் பற்றி அல்லது ஒரு செயற் பாடு பற்றி உனக்கு மீண்டும் மீண்டும் செய்வதன் மூலம் தான் சரிவர விளங்கிக்கொள்ள முடியும் என்றால் - எனக்கு அப்படியான தேவை இருக்கும் பட்சத்தில் அதனை நீ செய்து பார்க்க உனக்கு பூரண உரிமை உண்டு. நீ என்ன உணர்கிறாய் என்பதுபற்றி உனக்கு மட்டுமே தெரிய முடியும். உனக்கு ஒவ்வொரு விடயமும் ஆர்வ மூட்டுபவை யாக இருக்கும் என்பதை நான் உணர்கிறேன். ஆனால் உன் வளர்ச்சியையும், பரிசோதனை முயற்சிகளையும் நான் கவனித்துக்கொள்ள விரும்புகிறேன். அது உன்னில் எனக்கிருக்கும் அன்பினாலும் அக்கறையினாலும், பாது



காப்பு உணர்வினாலும்தான். நீ சுறுசுறுப்பாய் (active) பரி சோதனை முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும்போதும் நான் உன்னை நேசிக்கிறேன்' என்பதை குழந்தை உணரும் வண்ணம் பெற்றோர் நடந்துகொள்ளவேண்டும்.

18 மாதம் தொடக்கம் 3 வயது வரை

இது, குழந்தை `ஏன்` என்ற கேள்வி கேட்கும் பருவம். இந்தப் பருவத்தில் குழந்தை தன் முதல் பருவத்தில் கண்டுகொண்டவற்றைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பிக்கின்றது. பல சந்தேகங்கள் குழந்தையை ஆக்கிரமிக்கத் தொடங்குகின் றன. தன் உலகம் தன் சூழ்நிலைகளைக் கண்டுகொண்ட

பின் ஏன் என்ற கேள்வி எழுகின்றது. எது செய்தால் எது நடக்கும்? ஏன் இவை எல்லாம் இவ்வாறு இருக்கின்

குழந்தை வளர்ப்பு ஓர் அழகிய கலை உணர்வு சார்ந்த ஓர் ஓவிய வார்ப்பு. அது ஓர் உருவாக்க விஞ்ஞானம். அதனால்தான் குழந்தை வளர்ப்பை மேலைத்தேய நாடுகள் ஒரு விஞ்ஞானமாகப் பார்க்கின்றன. அதனை உளவியல் ரீதியாக அணுகுகின்றன.

றன என்ற கேள்வி அதன் மனதில் எழுகின்றது. அதனால் குழந்தையின் ஏன் என்ற கேள்விகளுக்குப் பொறுமையாக வும் இயன்றளவு சரியாயும் பதில்களைப் பிள்ளைக்கு வழங்குங்கள். சிலவேளை பெற்றோருக்கு அது அசட்டுத்த னமான கேள்வியாகக்கூட இருக்கலாம். ஆனால் அது பிள் ளையின் மனநிலைக்கும் அறிவு வளர்ச்சிக்கும் மிகப் பொருத்தமான சரியான விடை தேவைப்படும் கேள்வியா கும். அடிப்படையில் குழந்தை இந்தப் பருவத்தில் தான் சிந்திக்க ஆரம்பிக்கின்றது. `நான் யார்` என்ற தேடலுக் கான சிந்தனைப் பருவம் இது எனலாம். இதில் சூழல் மிக ஆதிக்கம் செலுத்துகின்றது. உதாரணமாக அன்பும் ஆதர வும் உள்ள பெற்றோர் அமைந்த குழந்தை கொஞ்சம் கொஞ்சமாக தன்னை இனம் காண ஆரம்பிக்கும். பெற் றோரில் தங்கியிருப்பதிலிருந்து விலகி தானே தன் இயற் கைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள, உடைமாற்ற, உணவு உண்ண-இவ்வாறு தனித்துத் தனக்கென ஒரு தளத்தை நிலை நாட்ட ஆரம்பிக்கும்.

(மிகுதி அடுத்த வாரம்)

நன்றி: மல்லிகை

Experienced Tamil Jeweller in London
வெஸ்டன் ஜுவல்லர்ஸ்
western Jewellers
230 Upper Tooting Road
London SW 17 7EW
Tel: 020 8767 3445
Opening hours, Mon-Sat 10 a.m-6.30 p.m Sun 11 a.m-5.30 p.m
வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும்

RESTAURANT HARIHARAN

குறைந்த விலையில் சிறந்த உணவுகள்

25 அல்லது 50 சாப்பாடுகள் உடனுக்குடன் தயார் செய்து கொடுக்கப்படும்

இறைச்சிச் சாப்பாடு


பிரியாணிச் சோறு
ஆட்டிறைச்சிக் கறி
கோழிக்கறி
கத்தரிக்காய்க் கறி
பருப்பு
வெங்காயச் சம்பல்
கோழிப் பொரியல்
நண்டு வறை
Salade ஜெலி பலவகை கலர்கள்

சைவச் சாப்பாடு

1. Basumathi அரிசியில் சோறு
3. கத்தரிக்காய் கறி
4. கரணைக்கிழங்கு பிரட்டல் கறி
5. பருப்பு பால் கறி
6. கோவா அல்லது வெங்காயப்பூ சுண்டல்
7. வெங்காயச் சம்பல்
8. அச்சாறு
9. வடை
10. பாயாசம்
11. அப்பளம்
12. மிளகாய்ப் பொரியல்
13. வாழைக்காய் பொரியல்

சிற்றுண்டிகள்

வடை	00 € 50
Rol	00 € 60
Samusa	00 € 60
Samusa மரக்கறி	00 € 60
கடலைவடை	00 € 50
பகோடா	4 € 70
மிஸ்சர்	5 € 20
கேசரி	00 € 50



அன்பளிப்பு

* 200 சாப்பாடுக்கு
  20 சாப்பாடு இலவசம்
* 300 சாப்பாடுக்கு
  30 சாப்பாடு இலவசம்

அன்பளிப்பு

* 500 சாப்பாடு எடுத்தால் T.T.N தொலைக்காட்சி பார்ப்பதற்கான ஒரு அட்டை அன்பளிப்பு
* பிறந்தநாள் கொண்டாட்டமாக இருந்தால் - பிறந்தநாள் நடைபெறுபவரின் பிறந்தநாள் வாழ்த்து T.T.N இல் இலவசமாக எம் மூலம் ஒளிபரப்பப்படும்.



- 100 க்கு மேல் சாப்பாடு எடுத்தால் இல்லம் தேடி கொடுக்கப்படும்
- எம்மிடம் சாப்பாடு எடுத்தால் சாப்பாடு பரிமாறும் சில்வர் தட்டுக்களை நாங்கள் தருவோம். (500 சாப்பாட்டுக்கு 500 தட்டு)
- கறிகள் போடும் சில்வர் பாத்திரங்கள் எம்மிடம் வாடகைக்கு உண்டு

உரிமையாளரின் நேரடி கவனிப்பில் இன்றே நாடுங்கள்

வரிகரன்

20, Rue Perdonnet, 75010 Paris. M°: La Chapelle.
Telephone: 01 42 09 06 30 / Portable: 06 67 14 46 39 - Mahendran

T.M.S. SATELLITE

தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு

சிறப்பு மலிவு விற்பனை

2 காட் (Carte) போடக் கூடிய

PIXX டிஜிட்டல் டெக்கோடர்

~~280 €~~

149 €




2 காட் (Carte) போடக் கூடிய

NOKIA

NOKIA 2309 Mediamaster

~~310 €~~

225 €



Recevez tous les programmes satellite numériques.

TTN Carte ம் பெற்றுக்கொள்ளலாம்

இச் சலுகை → 30.04.2004 வரை

T.M.S.

33, Bd. de la Chapelle
75010 Paris.
Tél: 01 53 26 38 12
Portable: 06 11 15 30 00

போன மாட்டைத் தேடுவாருமில்லை வந்த மாட்டைக் கட்டுவாருமில்லை

தென்னிலங்கை அரசியல்வாதிகள் அறிவது!

நீதிமன்றில் வழக்கறிஞர்கள் இருவர் எதிரெதிரே தமது வாதத்தை ஆரம்பித்தனர்.

'நீங்கள் சரியான ஏமாற்றுப் போர்வழி, உங்கள் வழக்குகள் எல்லாம் பொய் வழக்குகள். நீங்கள் ஒரு பொய்யர்' என்றார் ஒரு வழக்கறிஞர். அதற்கு எதிர்வழக்கறிஞர் 'நீர் மட்டும் யோக்கியனா? எத்தனை தில்லுமுல்லு செய்து அரச வழக்கறிஞராக வந்தீர் என்று எனக்கா தெரியாது? உம்மை நம்பிய எந்த மனிதனும் வழக்கில் வெற்றி பெற்றதில்லையே?' என்றார்.

'கடந்த வழக்கில் உம்மை நம்பிய வாதியை நீர் எதிரியிடம் லஞ்சம் வாங்கி ஏமாற்றவில்லையா?'

'நீர் மட்டும் என்ன யோக்கியன்? காணி வழக்கில் இரு தரப்பிடம் பணம் வாங்கிக்கொண்டு கடைசியாய் அந்தக் காணியையே உமது வழக்கின் கூலியாகப் பெற்றுக்கொண்டீரே'

உடனே நீதிபதி 'சரி சரி.. இதுவரை இருவரும் ஒருவரை ஒருவர் அறிமுகப்படுத்தியது போதும், இனிமேல் நீங்கள் இருவரும் வழக்கைத் தொடங்கி நடத்தலாம்' என்றார்.

தேர்தல் பிரச்சாரம், தேர்தல் என்பது இதுவரை அரசியல்வாதிகள், இவ்வாறு ஒருவரை ஒருவர் தூற்றித் தம்மை அறிமுகப்படுத்தியதாகும். மக்கள் தங்கள் வழக்குகளுக்கு - நீங்கள் ஒருவரை ஒருவர் அறிமுகப்படுத்தியதைப் பார்த்து, தங்கள் வழக்கறிஞராகத் தெரிவு செய்திருக்கின்றனர். இனிமேல்தான் வழக்கு நடத்தப்பட வேண்டும்.

ஒரே ஒரு தடவை தமிழர்கள் 1977ல் எதிர்க்கட்சித் தலைவராக, எதிர்க்கட்சி வக்கீல்களாக, வழக்கை நடத்தியிருந்தார்கள். அப்போது கொண்டுவரப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தை அவர்கள் அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்து விவாதித்தனர். அப்போது சிங்கள தேச மந்திரிமார், அரசியல்வாதிகளின் மனைவிமார் மற்றும் புத்திஜீவிகள் தென்னிலங்கைப் பத்திரிகைகளில் - அட இவர்கள் பாராளுமன்றத்தில், தமிழீழம் என்று வெறும் கோசம் போடுவார்கள் என்று நினைத்தோம், ஆனால், ஆகா! நம்மவர்களைவிட பொறுப்போடு விவாதம் செய்கிறார்களே என்று விதந்துரைத்திருந்தனர்.

அதன் பின்னர் ஜே.ஆர். கொண்டுவந்த விகிதாசார முறையால் அந்த எதிர்த்தரப்பு வக்கீல் என்ற அந்தஸ்த்து இனிமேல் தமிழர்களுக்குக் கிடைக்கப்போவதில்லை.

ஆனால் இதுவரை காலமும் நீங்கள் நடத்திய வழக்குகள் - அரசுகள் எப்படியென்று சொல்லத் தேவையில்லை.



இதுவரை இலங்கையின் பொருளாதாரத்தைப் பார்த்தாலே புரியும். பலவிடயங்கள் இருந்தாலும் ஒரேயோர் உதாரணம் போதும்..

கடலின் நடுவே பயணம் போனால் குடிநீர் தருபவன் யாரோ?.. கடற்கரைத் தாகம், அதுதான் என்தன் தாகமடி.. என்று சில சினிமாப் பாட்டுக்கள் உள்ளன. அதாவது கடலில் நிற்பவனைச் சுற்றித் தண்ணீர் இருக்கும். ஆனால் குடிக்கத் தண்ணீர் இருக்காது. இதே நிலைதான் கடந்த பல சகாப்த்தங்களாக இலங்கையிலும்.

நாலுபக்கமும் கடல் சூழ்ந்த இலங்கைத் தீவு, தகரங்களில் அடைக்கப்பட்ட மீனை, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது. இது உங்களுக்கு வெட்கமாகவில்லை. இந்த ஓர் உதாரணம் போதும் இலங்கையின் அரசியல் வாதிகள் கடந்த பல சகாப்த்தங்களாக, எப்படி அரசாண்டார்கள் என்பதற்கு..

இந்த உதாரணத்தில் இன்னொரு அரசியல் உண்மையும் உள்ளடங்கியுள்ளது. அதாவது இலங்கைத் தீவின் கடல்வளத்தில் மூன்றில் இரண்டு பங்கு தமிழர் பக்கத்தில் உள்ளது.

அதாவது இலங்கையின் கடல் வளத்தை விருத்தி செய்தால், தமிழர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து விடும். ஆனால் இலங்கையின் கடல் வளத்தை விருத்தி செய்தால் - இலங்கை மக்களின், தென்னிலங்கை மக்களின், வாழ்க்கைத் தரமும் உயரும் என்பதை மறந்து, - அட இதனால் தமிழர்கள் உயர்ந்துவிடுவார்கள் என்று பயந்துதான் சிங்கள அரசியல் வாதிகளான நீங்கள் கடல் வளத்தைப் பற்றிக் கொஞ்சமும் அக்கறைப்படவில்லை.

சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சியில் என்.எம். பெரேராவின் தன்னிறைவுக் கொள்கைகளால் சிங்கள தேசமே பட்டினி கிடந்தது. ஆனால் தமிழர் தேசம் வளம் பெற்றது. காரணம் தமிழர் தேசம் மண்வளமான நாடு.

இன்று அந்த விளை நிலங்கள் எல்லாம் தரிசுக்காணிகளாக, பயிர்களை விதைப்பதற்குப் பதிலாக மிதிவெடிகள் விதைக்கப்பட்ட நிலையில்..

வலிகாமம் விளைபூமி உயர்பாதுகாப்பு வலயமாகப் படையினரிடம்..

வாசகன் கடிதம்

தம்பலகாமம் நெல் வயல்கள் சிங்கள ஊர்காவல் படையினரிடம்..

இந்த விளை நிலைங்களில் எவ்வாறு விமானத்தில் வந்து விதைகளைத் தூவலாம், உரத்தை விசிறலாம் என்று சிந்திக்க வேண்டிய நீங்கள் விமானத்தில் சென்று குண்டுகளைப் போட்டீர்கள்.

ஒன்று தெரியுமா? தற்போது ஜனாதிபதியாக இருக்கும் சந்திரிகாவின் தயார் சிறிமாவோ பண்டாரநாக்கா காலத்தில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் - அவரின் சுதந்திரக்கட்சி கோப்பாய் தொகுதியில் மட்டும்தான் ஐக்கிய தேசிய கட்சியை விட அதிக வாக்குப் பெற்றது. விவசாயத் தமிழன் தன் நன்றியை அன்று காட்டியிருந்தான். சிறிமாவிற்கு- இரண்டு கொத்து அரிசிக்கு வாக்குப் போட்ட சிங்கள மக்கள் அப்போது அவவின் அரசியலுக்கே வாய்க்கரிசி போட்டனர்.

தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை எதிரிக்கு சகுனப் பிழையாக இருக்க வேண்டும் என்று நினைக்கும் உங்களை நம்பித்தான் அந்த சிங்கள மக்களும் இம்முறை வாக்களித்துள்ளார்கள். பாவம் அவர்களைக் குறை சொல்ல முடியாது. பாணுக்கும் பருப்புக்கும் வாக்களிப்பவர்கள் அவர்கள். அடுத்த தேர்தல்வரை அவர்களை நீங்கள் என்னவும் செய்யலாம்.

ஏனென்றால் அடுத்த தேர்தல்வரை-போன மாட்டைத் தேடுவாருமில்லை. வந்த மாட்டைக் கட்டுவாருமில்லை. இதுதான் தென்னிலங்கை அரசியல்.

ஆனால் - தமிழர்கள் அப்படியல்ல. பிரிந்து போக வேண்டும் என்று அடம்பிடித்த தமிழர்கள் இப்போது சமஷ்டிக்கு வந்து வாக்களித்துள்ளார்கள். நொந்து போனவர்கள் - வந்து வாக்களித்ததாக நினைக்காதீர்கள். அப்படி நினைத்து - மந்தி வேலை காட்டினால், கந்தக வெடியால் - வெந்துபோவீர்கள் என்பதையும் மறவாதீர்கள். அதைப்பற்றி நான் சொல்லத்தேவையில்லை..

இலங்கை அரசியல் என்பது இதுவரைகாலமும் இருந்த ஒரு நிலைமையை விட, இப்போது மிகவும் ஒரு சிக்கலான காலகட்டத்தில் உள்ளது என்பதை உலகமே உணர்ந்துள்ளது. கடந்த காலங்களை விட இப்போது இலங்கைப் பிரச்சினை என்பது சர்வதேச மயமாக்கப்பட்டுவிட்டது.

இதைச் சிங்கள அரசியல் வாதிகள் புரிந்துகொண்டுள்ளனர். ஆனால் சிங்கள வாக்காளர்கள் அதனைப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

ஒரு காகக் கூட்டில் ஒரு குயில் வந்து முட்டையிட்டுச் செல்லும். அங்கே காகக் குஞ்சுகளும் குயில் குஞ்சுகளும் ஒன்றாக வளரும். வளர்ந்ததும், காகக் குஞ்சுகள் கத்துவதற்கும், குயில் குஞ்சுகள் கத்துவதற்கும் இடையில் வித்தியாசம் தெரியத் தொடங்கும். உடனே காகம் குயில் குஞ்சைக் கலைத்துவிட்டது. மீண்டும் காகம் இப்போது கூடுகட்டி முட்டையிட்டுள்ளது. அங்கும் குயில் வந்து முட்டையிடும். மீண்டும் காகம் கலைக்கும்.

இதுதான் இன்றைய தென்னிலங்கை வாக்காளர்களின் நிலை. கடந்த நான்கு வருடங்களில் 3 தடவைகள் காகங்களால் கலைக்கப்பட்டுவிட்டன குயில்கள்.

தலைவன் எவ்வழி, குடிகள் அவ்வழி என்பார்கள். பாவம் அவர்களைச் சொல்லிக் குற்றமில்லை.

இருந்தாலும் அந்தக் காகங்களைக் கவனிக்க வேண்டிய கடமை உங்களது. எனவே,

உங்களுக்கு வாக்களிப்பதாக வாக்களித்து வாக்களித்தவர்களுக்கும், வாக்களிப்பதாக வாக்களித்து வாக்களிக்காதவர்களுக்கும், வாக்களிப்பதாக வாக்களிக்காது வாக்களித்தவர்களுக்கும், வாக்களிப்பதாக வாக்களிக்காது வாக்களிக்காதவர்களுக்கும் நீங்கள் பணிபுரியப் போகிறீர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்.

இப்படிக்கு
வாசகன் ரட்ணதுரை

மட்டு-அம்பாறை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் கருணாவின் நம்பிக்கைக்குரியவராக இருந்த வரான தளபதி பிரபா தற்போது கருணா அணியினர் மீதான நடவடிக்கைக்கான தாக்குதலை ஒருங்கிணைத்துடன், கட்டளை அணிகளை வழிநடத்தினார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டு கருணாவின் பிரதான இயங்கு தளங்களாக இருந்த கரடியனாறு தேனகம் மாநாட்டு மண்டபம் மற்றும் தமிழ் அலை அச்சகம், பத்திரிகைக் காரியாலயம் என்பன கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகளின் தாக்குதல் அணிகளுடன் விடுதலைப் புலிகளின் அரசியற் பணியாளர்களும் இப்பிரதேசங்கள் அனைத்திற்கும் வருகை தந்துள்ளனர்.

கொக்கட்டிச்சோலையும் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டதையடுத்து வேறிடங்களில் இருந்து கருணாவின் குழுவில் இருந்து பிரிந்து வெளியேறும் போராளிகள் விடுதலைப் புலிகளின் மீட்பு அணிகளை பெருந்தொகையில் நாடிவந்தவண்ணமுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக தொப்பிக்கலையில் இருக்கும் மீனகம் முகாம் பகுதியிலிருந்து நூற்றுக்கணக்கான ஆண், பெண் போராளிகள் விடுதலைப் புலிகளுடன் வந்து மீள இணைவதைக் காணக்கூடியதாக இருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்னாயிற்று என்ற அங்கலாய்ப்புடன் காணப்பட்ட பெற்றோர் கருணா குழுவில் இருந்து விலகி வரும் போராளிகளிடம் தகவல்களைப் பெற முயற்சித்துக்கொண்டிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

வேறும் பல இடங்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் இன்று வந்துள்ளதாகத் தெரிவித்த மட்டு அம்பாறை அரசியற் துறையினர் மேலதிக விபரங்களை விரைவில் வெளியிடவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு-அம்பாறை பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் முகாம்கள் முழுமையாக தேசியத் தலைவரின் கட்டுப்பாட்டில் தற்போது உள்ளதாகவும், அங்கு எதுவித அசம்பாவிதங்கள், குழப்பங்கள் எதுவுமின்றி, நிலைமைகள் வழமைக்குத் திரும்பியுள்ளதாகவும் எமது நிருபர் தெரிவிக்கிறார்.

இதேவேளை வெளிநாடுகளிற்கான பயணத்தை மேற்கொண்டிருந்த திரு.கௌசல்யன் தற்போது தாயகம் திரும்பி, மட்டக்களப்பு மாவட்ட அரசியல் ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறார். கருணாவின் முகாமிலிருந்த போராளிகள் தலைமைப்பீடத்துடன் பாதுகாப்பாக இணையும் நடவடிக்கைகளை அவர் இப்போது ஒருங்கிணைத்து வருகிறார்.

கருணாவுக்காகப்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வுகள் எடுத்துக்காட்டுவதாக விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு.கரிகாலன் சுவிசிலிருந்து ஈழமுரசிற்குத் தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் கூறுகையில் நிர்ப்பந்திக்கப்பட்டு கருணாவுடன் இருந்த போராளிகளின் மன நிலையையும் உணர்வுகளையும் அறிந்து அவர்கள் அனைவரையும் பத்திரமாக மீட்டெடுக்கும் ஒரு நடவடிக்கைதான் தற்போது எமது அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை எனவும் குறிப்பிட்டுள்ளார். இந்த ஒழுக்காற்று நடவடிக்கை ஆரம்பித்த நேரத்திலிருந்து எவ்வித எதிர்ப்புமின்றி கருணாவுடன் நின்ற நூற்றுக்கணக்கான போராளிகள் எம்முடன் வந்து இணைந்துகொண்டார்கள். இந் நடவடிக்கையின்போது ஏராளமான ஆயுதங்களும் எம்மால் கைப்பற்றப்பட்டிருக்கின்றது.

கருணாவால் நியமிக்கப்பட்ட சில விசுவாசமான தளபதிகள்கூட மீட்புப் பணி ஆரம்பித்தவுடன் தமது போராளிகளையும் கைவிட்டு ஓட்டமெடுத்துள்ளனர். கருணாவுக்காகச் சண்டையிடத் தயாரில்லாத நிலையில் ஏராளமான போராளிகள் தமது வீடுகளுக்கும் சென்றுள்ளார்கள். அவர்கள் மீண்டும் போராட்டத்தில் இணைந்து தமது இலட்சியப் பயணத்தில் பயணிப்பார்கள் என்பதையும் அவர்களின் உணர்வலைகள் வெளிப்படுத்தியிருக்கின்றது என கரிகாலன் குறிப்பிட்டுள்ளது.



அமெரிக்கா ஆரம்பித்துள்ள ஈராக் யுத்தம் III

ஈராக்கில் அமெரிக்கா தற்போது ஈடுபட்டுள்ள மோதல்களானது ஒரு யுத்தத்தைநோக்கி நகர்வதாகத் தெரிகிறது. இதனை ஈராக்கின் மூன்றாவது அமெரிக்க யுத்தம் என்றும் கூறலாம். தந்தை புஷ் 91ம் ஆண்டில் முதலாவது ஈராக்கிய யுத்தத்தை ஆரம்பித்து அவரது இலட்சியம் நிறைவேறாமலே யுத்தம் முடிவடைந்தது. அதாவது தங்களது தயாரிப்பான சதாம் ஹுசேன் வரம்பு மீறிப் போவது பொறுக்கமுடியாது, அவரை பதவியிலிருந்து அகற்றுவதற்காக்த் தந்தை புஷ் மேற்கொண்டதுதான் அன்றைய யுத்தம். குவைத் ஆக்கிரமிப்பு இந்த யுத்தத்திற்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்த போதிலும் அதனை அன்று சரிவரப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. பின்னர் தற்போதைய ஜனாதிபதி புஷ் தந்தையாரது இலட்சியத்தை நிறைவேற்றுவதில் கடுமையாகச் செயலாற்றினார். எப்படியாயினும் தனது ஆட்சிக் காலத்திற்குள் சதாம் ஹுசேனைப் பதவியிலிருந்து அகற்றி அவரால் மறுக்கப்பட்ட எண்ணெய் ஏற்றுமதியை முழுமையாகக் கைப்பற்றிக் கொள்ள புஷ் திட்டங்களைத் தீட்டினார். இதன் அடிப்படையில் ஈராக் மீது தாக்குதல்களை

உலகக் கண்

ஆரம்பிப்பதற்கான சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார் என்பதைவிட, அதற்கான சந்தர்ப்பங்களைத் தோற்றுவித்ததன் மூலம் சர்வதேச உலகம் தனது இராணுவ நகர்வுக்கு வழங்கக்கூடிய ஆதரவை நியாயப்படுத்திக்கொண்டார். அழிவிற்கான ஆயுதங்களைச் சதாம் மீண்டும் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளார் என்றும் உலகின் பயங்கரவாத அமைப்புக்களுக்கு உதவி வருகின்றார் என்றும் அமெரிக்க உளவு அமைப்புக்கள் பொய்யான தகவல்களை வெளியுலகிற்குப் பரப்பின. இதனைப் பெரும்பான்மையான நாடுகள் ஏற்றுக் கொள்ளாத போதிலும் அமெரிக்காவின் கால்களைச் சுரண்டிக் கொண்டு நிற்கும் சில நாடுகள் அதனை 'ஆமாம்' என்று ஒப்புக்கொண்டன. பிரதானமாகப் பிரித்தானியா, ஜப்பான் மற்றும் ஸ்பெயின், அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் ஒருபடி மேலே போய்த் தாக்குதல் படைகளில் இணைந்துகொள்ளவும் தயாராகின. யுத்தமும் நடந்து முடிந்தது. ஏராளமான துரோகங்கள், பழிவாங்கல்கள் மூலம் சதாம் ஹுசேன் ஆட்சி அகற்றப்பட்டது. இறுதியாக அவரும் கைதுசெய்யப்பட்டார். ஈராக் யுத்தம் அமெரிக்காவைப் பொறுத்தவரை 2003ம் ஆண்டு மே மாதம் முடிவடைந்தது. ஆனால் இன்றும் அங்கு துப்பாக்கிச் சத்தங்கள் ஓய்ந்தபாடில்லை.


கடந்த வருடம் மே மாதம் முதல் அமெரிக்க படைகள் அடிக்கடி தாக்குதல்களுக்குள் சிக்கிக்கொண்டன. அதேவேளை முன்னாள் அதிபர் சதாம் ஹுசேனின் ஆதரவாளர்களைக் களைகிறோம். அவர்களது கட்சித் தொண்டர்களைக் கைதுசெய்து விசாரணை மேற்கொள்ளுகின்றோம் என அமெரிக்க அதிகாரிகள் தங்களது செயற்பாடுகளை மேற்கொண்டனர். இதே சமயம் பெரும்பான்மையினரான 'சியாட்' இன மக்கள் அமெரிக்கரது வருகையை ஆரம்பத்தில் எதிர்த்த போதிலும் பின்னர் அமெரிக்க நிர்வாக நகர்வுகளுக்கு ஆதரவு வழங்கினர். ஈராக்கிய விசேட படைகள் சதாம் ஹுசேன் படைகளுக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபடுவதற்காக வடபகுதியில் இருந்து நகர்த்தப் படுவதற்காக 'குர்திஷ்' அமைப்புக்களின் ஆதரவு பெருமளவில் வழங்கப்பட்டது. அன்று அவ்வமைப்புக்கள் ஈராக்கின் எண்ணெய் வளம் கொழிக்கும் மொசூல் நகரப்பகுதியை அமெரிக்கா தமது நிர்வாகத்தின்கீழ் ஒப்படைக்கும் என நம்பின. இதற்காக பல இடங்களில் ஈராக்கிய படைகளிடம் தங்களது உறுப்பினர்களையும் இழந்தன. ஆனால் ஒரு வருடத்தின் பின்பும் குர்திஷ் அமைப்புக்களது எண்ணம் நிறைவேறியபாடில்லை. ஆனால் அன்று அமெரிக்கர்களுக்கு ஈராக்கியரைக் காட்டிக்கொடுத்ததற்கான பலனாக தாக்குதல்கள் அதிகரிக்கத்தொடங்கின. அண்மையில் இரண்டு தற்கொலை குண்டுதாரிகள் சர்வ சாதாரணமாகக் குர்திஷ் கட்சி அலுவலகங்களுக்குள் நுழைந்து தங்களை வெடிக்கவைத்துக்கொண்டனர். இதில் 200 வரையிலான மக்கள் இறந்துபோயினர். அன்று முதல் தினமும் ஒரு குர்திஷ் எதிர்தாக்குதலாவது வடபகுதியில் நடந்து கொண்டுதான் இருக்கின்றது. கடந்த சனியன்று மொசூல் பகுதியில் ஐநா உதவி நிறுவனத்தின் கீழ் உயர் அதிகாரியாகச் செயற்பட்டுவரும் அவரது மனைவியும் குண்டுத் தாக்குதலால் கொலையுண்டனர். ஒரு புறம் தாக்குதல்களின் வேகம் அதிகரிக்கத் தொடங்கியது. மறுபுறம் அமெரிக்கர்களால் பயிற்றுவிக்கப்பட்ட படையினரோ பொலிசாரோ களத்திலிருந்து பின்வாங்கிக்கொள்ளத் தொடங்கினர். இவர்களில் பெரும்பான்மையானோர் ஈராக்கிய எதிர்ப்பு அணிகளில் இணைந்துகொண்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. வெளியுலகிற்கு ஈராக்கில் சகஜ நிலை ஏற்படுத்தப்பட்டுவிட்டதாகக் கூறிய போதிலும் உண்மையில் நிலைமை நாளுக்குநாள் அங்கு மோசமாகிக்கொண்டே வந்தது. சதாம் ஹுசேன் பிரதிநிதித்துவப் படுத்திய 'சுன்னித்' இன மக்கள் (இஸ்லாமிய மதப் பிரிவு) அமெரிக்க இராணுவத்திற்கெதிரான போராட்டங்களை முன்னெடுக்கத்தொடங்கினர். இவர்களுக்கு பெரும்பான்மை 'சியாத்' இன மக்களால் அடக்குமுறைகள்

ஏற்படுத்தப்படலாம் என்ற அச்சம் தோன்றியிருந்தது. இதற்கிடையே 'சியாத்' இன மக்களின் எழுச்சியை அடக்குவதும் அமெரிக்க நிர்வாகத்திற்கு அவசியமானதொன்றாக இருந்தது. அண்டை நாடான ஈரானின் செல்வாக்குடன் நீண்டகாலமாகச் செயற்பட ஆவலாக காத்திருந்த சியாத் மத பிரிவுகள் சதாம் ஹுசேனின் ஆட்சிக் காலத்தில் அடக்கி வைக்கப்பட்டிருந்தன. ஈராக்கின் தென் பகுதியில் பெரும்பான்மையைக் கொண்டிருந்த 'சியாத்' மதப் பிரிவினர் ஈராக்கின் நிர்வாக அமைப்பிலும் பெரும்பான்மையைப் பெறக்கூடிய தகுதியைக் கொண்டிருந்தனர். ஆனால் இதனை ஏற்றுக்கொள்ள சுன்னித் பிரிவினர் தயாராக இல்லை. அமெரிக்காவின் அடுத்த கட்ட நடவடிக்கையாக இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புக்களை ஈராக்கிலிருந்து அப்புறப்படுத்துவதாக இருந்தது. இதன் ஒரு கட்டமாக 'சியாத்' அமைப்பின் தலைவர் எனக் கருதக்கூடிய டசாதர்' எனும் மதத் தலைவர் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. அவரால் நடாத்தப்பட்ட பத்திரிகை தடைசெய்யப்பட்டது. அவரது உதவியாளர்கள் கைதுசெய்யப்பட்டனர். இதனை அடுத்து அமெரிக்க படைகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் 'சியாத்' மக்கள் ஈடுபடத்தொடங்கினர். முன்னர் ஒருமுனை எதிர்ப்பினை மட்டுமே சந்தித்துவந்த அமெரிக்கா சியாத் மக்களது

> இப்போது ஈராக்கில் அரசு ஒன்றில்லை. இயங்குவதாகக் கூறும் அமெரிக்க நிர்வாக அமைப்பும் முடக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் யுத்தநிறுத்தமொன்று அமெரிக்கத் தரப்பால் கோரப்பட்டுள்ளது. இதனையும் அவர்கள் ஏற்க மறுத்துள்ளனர். இப்போது ஈராக்கில் அமெரிக்கா தலைமையில் நிலைகொண்டுள்ள எல்லா நாட்டுப் படைகளும் பெரும் இன்னல்களைச் சந்தித்து வருகின்றன.

எதிர்ப்பை சம்பாதித்துக்கொண்டதன் மூலம் இரண்டாவது யுத்தமுனையைத் திறந்துகொண்டது. இரண்டு யுத்தமுனைகள்தானா என்று எண்ணிக் கொண்டு இருக்கையில், புதிதாக வடக்கே ஓர் அமைப்பினர் தாம் அமெரிக்கர்களின் வெளியேற்றம் வரை போராடப்போவதாக அறிவித்து களமிறங்கியுள்ளனர். இவர்கள் தங்களது முதல் வேலையாகத் தலைநகரம் மற்றும் அதன் சுற்றுப் புறங்களில் இருந்து 30 இற்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்களைக் கடத்திச் சென்றுள்ளனர். இவர்களில் அமெரிக்கர் ஜப்பானியர் கொரியர் பிரித்தானியர் இஸ்ரேலியர் என பலதரப்பட்ட நாடுகளையும் கொண்டோர் உள்ளதாக தெரிவித்துள்ளனர். இதற்கிடையே 'சியாத்' இன மதத் தலைவரான சாதர் இன்று, அதாவது சனியன்று, விடுத்துள்ள அறிக்கையொன்றில் அமெரிக்க அதிபர் புஷ் உலகின் இஸ்லாமியர்களது முதலாவது எதிரி என்றும், உடனடியாக ஈராக்கிலிருந்து படைகளுடன் வெளியேறவேண்டும் என்றும் இல்லாவிட்டால் இஸ்லாமியப் புரட்சியொன்றின் மூலம் அமெரிக்கக் கூட்டுப்படைகள் வெளியேற்றப்படும் என்றும் எச்சரித்துள்ளார்.

கடந்த ஞாயிறு முதல் இன்றுவரையான காலப்பகுதியில் அமெரிக்க கூட்டுப்படையினரது இழப்பு மிக அதிகமாகியுள்ளது. ஐம்பதிற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டும் ஏராளமானோர் காயங்களுக்கு உள்ளாகியுமுள்ளனர். உடமை இழப்புக்கள் என்ற வகையில் ஏராளமான கவச வாகனங்கள் டாங்கிகள் பிரயாண வாகனங்கள் என்பன அழிக்கப்பட்டுள்ளன. இப்போது ஈராக்கில் அரசு ஒன்றில்லை. இயங்குவதாகக் கூறும் அமெரிக்க நிர்வாக அமைப்பும் முடக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் யுத்தநிறுத்தமொன்று அமெரிக்கத் தரப்பால் கோரப்பட்டுள்ளது. இதனையும் அவர்கள் ஏற்க மறுத்துள்ளனர். இப்போது ஈராக்கில் அமெரிக்கா தலைமையில் நிலைகொண்டுள்ள எல்லா நாட்டுப் படைகளும் பெரும் இன்னல்களைச் சந்தித்து



வருகின்றன. அண்மையில் ஸ்பெயினில் மேற்கொள்ளப்பட்ட இரையில் குண்டுவெடிப்புக்களை அடுத்து அங்கு நடந்த தேர்தலில் அஸ்னார் தலைமையிலான கட்சியினர் தோல்வியடைந்து மீண்டும் அங்கு சோசலிச ஆட்சி ஏற்பட்டுள்ளது. புதிய ஆட்சியாளர்கள் ஸ்பெயினின் படைகள் ஈராக்கில் நிலைகொண்டிருப்பது ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் விரைவில் அவர்களை மீள பெற்றுக்கொள்ளத் தாம் முடிவுகளை மேற்கொண்டுள்ளதாக அறிவித்துவிட்டனர்.

இன்று ஈராக்கில் ஏற்பட்டுள்ள நிலைமையானது சில வருடங்களுக்கு முன் லெபனானில் இருந்த ஒரு நிலைமையை ஒத்து உள்ளது. அங்கும் நிலையான ஓர் அரசு இருக்கவில்லை. மாறாக பல குழுக்கள் லெபனானின் பகுதிகளை நிர்வகித்தன. அவற்றின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த பகுதிகளை ஆட்கடத்தல்கள் மற்றும் வெளிநாட்டுப் படைகளின் மீதான தாக்குதல்கள் என்பன தாராளமாக இடம்பெற்றன. ஒருவாறாக லெபனான் இன்று மீண்டும் ஒரு நிலையான அரசினை பெற்றுக்கொண்டுள்ளது. அங்கு அழிவுகள் மறைந்து மீண்டும் புதிய கட்டிடங்கள் எழும்புகின்றன. பொருளாதாரம் மீள பழைய நிலையை அடைய ஆரம்பித்துள்ளது. இதற்கு அண்டை நாடான சிரியாவின் ஆக்கிரமிப்பு ஒரு காரணமாக இருந்ததை மறுக்கமுடியாது.. அது ஒரு தேசத்தின் மீள் வரவிற்கான ஒரு தீர்வாக அமைந்திருந்தது. இங்கும், அதாவது ஈராக்கிலும் புதிய ஈராக் ஒன்றின் மீள் வரவிற்கான அரசு அமைக்கப்பட வேண்டும். இதற்கான பங்காளியாக தற்போது அமெரிக்காவும் ஏனைய நாடுகளும் உள்ளதை ஏற்றுக்கொள்வது சங்கடமாக உள்ளது. ஐநாவின் தலைமை ஸ்திரமானதாக இருந்தால் ஒருவகையில் மீள் கட்டுமானத்தில் அவர்களது பலத்தை ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால் ஈராக்கைப் பொறுத்தவரை ஐநாவும் பலமின்றியே உள்ளது. எவ்வகையான ஒரு மீட்பு ஈராக்கை பாதாளத்திற்குள் இருந்து காப்பாற்றும்? பொறுத்திருந்து பார்ப்போம்.

- உதயன்

சலசலப்பு விரைவில் நீங்கும். தமிழீழப் போராட்டம் புதிய எழுச்சியுடன் தொடரும்..

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக நடந்து வரும் ஆயுதப் போராட்டத்தால் இலங்கையில் தமிழ்த்தேசியம் பெருமெழுச்சி கண்டுள்ளது.

சாதி, மத, பிரதேச வேறுபாடுகள் எல்லாம் பேரளவு மறக்கப்பட்டு எல்லோரும் 'நாம் தமிழர்கள், தமிழீழ மக்கள்' எனப்பேசும் நிலை உருவாகியது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையைத் தமிழர்கள் ஏற்றார்கள்.

இந்தச் சூழலில் கிழக்கில் ஏற்பட்ட சலசலப்பால் தமிழீழ விடுதலைப்போராட்டம் சிறு சலசலப்பை அடைந்துள்ளது. இந்தச் சலசலப்பு விரைவில் நீங்கும். தமிழீழப் போராட்டம் புதிய எழுச்சியுடன் தொடரும்.

விடுதலைப் புலிகளின் அரசியல் மதியுரைஞர், 'பிரபாகரன் வரலாற்றின் உருவாக்கம். அவரூடாகவே தமிழீழ விடுதலைக்கான போராட்டம் நகர்கின்றது' என அடிக்கடி கூறுவதுண்டு.

தேசியத் தலைவர் பிரபாகரன் தனது நீண்ட போராட்ட வரலாற்றில், கைவிடுகை, துரோகம், இழப்பு ஆகியவற்றைப் பலமுறை சந்தித்தவர். இங்கே 'கைவிடுகை' என்பது நம்பிக்கையாகத் துணை நின்றோர் போராட்டத்தைக் கைவிட்டுச் சென்றமையையும், 'துரோகம்' என்பது துணையிருந்தோர் அவரையும், அவரால் கட்டிவளர்க்கப்பட்ட இயக்கத்தையும் அழிக்க முயன்றமையையும், 'இழப்பு' என்பது போராளிகளின் இழப்புகள், படைக்கலம், கட்டுப்பாட்டுப் பகுதி போன்றவற்றின் இழப்புக்களைக் குறிக்கின்றன.

புலிகளின் வரலாறு முடிந்தது எனப் பலமுறை எதிர்வு கூறப்பட்டதுண்டு. ஆனால், புலிகள் மீண்டும் மீண்டும் எழுந்தார்கள். அதிக பலம் பெற்று எழுந்தார்கள். வரலாற்றைத் திரும்பிப் பார்த்தால் புலிகளின் ஒவ்வொரு வீழ்ச்சிக்கும் பின்பு அவர்கள் கூடியபலம்கொண்டு எழுந்ததைக் காணமுடியும்.

இந்த எழுச்சிக்கும் பலத்திற்கும் மூலம் தேசியத் தலைவரே ஆகும்.

தமிழீழ வரலாற்றில் மட்டுமல்ல உலக வரலாற்றிலும் நமது தேசியத் தலைவர் போன்று ஒழுக்கம், கட்டுப்பாடு, விடாமுயற்சி, இடுக்கணழியாமை ஆகியவற்றைக்கொண்ட ஒருவரைக் காண்பது அரிது. அதே போன்று கொண்ட இலட்சியத்திற்காகப் பெருமிடர்கள் இடையிலும் தொடர்ந்து போராடிவரும் தமிழீழ விடுதலைப்புலிகள் போன்ற அமைப்பையும் காண்பது அரிது.

பெருந்தலைவரும் அவரால் கட்டி வளர்க்கப்பட்ட இயக்கமும் உள்ளவரை தமிழர்கள் சலசலப்புகளுக்கு அஞ்ச வேண்டியதில்லை.

இன்று தமிழீழமெங்கும் எதிரியை அஞ்சச் செய்யும் நவீன படைக்கலங்களுக்காகச் செலவிடப்பட்ட பணத்தின் பெறுமதி பல நூறு கோடிகளுக்கு மேலாகும். இதனிலும் மேலாக அவற்றை இந்த மண்ணில் கொண்டுவந்து சேர்க்கப் பல போராளிகள் உயிர் தந்தனர். இதே போன்றே எதிரியிடமிருந்து படைக்கலன்களைக் கைப்பற்ற ஆயிரக்கணக்கில் போராளிகள் உயிர் தந்தனர். இப்படியாகப் பல ஆயிரம் போராளிகளின் உயிர்க்கொடையால் பெறப்பட்ட கட்டுப்பாட்டுப் பகுதியில் நின்று பிரதேசவாதம் பேசுவதோடு நிற்காமல் அவர்களால் பெறப்பட்ட படைக்கலங்கள் குறித்த இரகசியங்களை வெளிப்படுத்தும் ஒரு சோக நாடகம் கிழக்கில் இடம் பெறுகின்றது.

போராளிகளின் உயிர்க்கொடை, நவீன படைக்கலங்களின் வருகை, போன்றவற்றால் ஏற்பட்ட எழுச்சி இன்றேல் இன்று முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு, மன்னார் ஆகிய மாவட்டங்களின் கணிசமான பகுதிகளையும் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களின் பெரும் பகுதிகளையும் நாம் இழந்திருந்தபோதும், தொடரும் காலங்களில் எல்லா மாவட்டங்களையும் இழக்கும் நிலைக்காளாக்கப்பட்டிருந்தோம்

ஒழுக்கமற்ற, விலைபோகும் தலைமைகளால், தன்னையும், தன்படையையும் ஈற்றில் தன்னைச் சார்ந்த மக்களையும் காக்க முடியாது. இவர்களின் கீழ் ஒழுக்கக்கேடும், துரோகமும் உயர்விழுமியங்களாகிவிடும்.

இவர்கள் தங்கள் சிறு நலனுக்காக வெளிச் சத்திகளின் நலனுக்கு இசைவார்கள். வெளிச் சக்திகள் தமது நலன் நிறைவேறும்வரை இவர்களைப் பயன்படுத்தும், பின்பு இவர்களைக் கைகழுவிவிடும்.

வெளிச்சக்திகள் இவ்வாறான நிலையில், குறிப்பாக இரண்டு மூன்று விடயங்களில் கவனம் செலுத்தும். அவை தமக்கு இசைந்து தமது மக்களைப் போராட்டத்தைக் காட்டிக்கொடுப்போரை ஓரளவுக்கு மேல் வளரவிடாது. இவர்களைப் பயன்படுத்தி விடுதலைப் போராட்டத்திற்குத் தொல்லை தந்து அதனைப் பலம் குன்றச் செய்து அதனை அழிப்பதில் குறியாக இருக்கும். இறுதியில் அவை விரும்பிய தீர்வைத் திணிப்பதில் கவனமாயிருக்கும். வெளிச் சக்திகளுக்கு இசைய மறுப்பதும் அவற்றின் ஆசை வார்த்தைகள் கண்டு மயங்க மறுப்பதும் விடுதலைப்புலிகளின் சிறப்பியல்புகளில் ஒன்றாகும்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைத் தேசியத் தலைவர் ஏற்றிருந்தால் வடகிழக்கு மாகாணசபையின் முதலமைச்சராக வளத்தோடு வாழ்ந்திருக்க முடியும். அவருக்குக் குறுகிய காலத்திற்கு எல்லாவித வசதிகளையும் செய்துதர இந்திய, இலங்கை, உலக அரசுகள் தயாராகவே இருந்தன.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைத் தேசியத் தலைவர் ஏற்றிருந்தால் வடகிழக்கு மாகாணசபையின் முதலமைச்சராக வளத்தோடு வாழ்ந்திருக்க முடியும். அவருக்குக் குறுகிய காலத்திற்கு எல்லாவித வசதிகளையும் செய்துதர இந்திய, இலங்கை, உலக அரசுகள் தயாராகவே இருந்தன.

ஒரு விடுதலைப் போராட்ட இயக்கம் அதற்கென ஒரு காப்பான தளத்தைக் கொண்டிராது வளரமுடியாது. அதனை எதிர்க்கும் ஒடுக்குமுறை அரசு அதன் தலைமையையும், இயக்கத்தின் படைக்கல வளர்ச்சிக்கான தொடர்பு வழிகளையும் அழிக்க முயலும், இவ்வாறே ஒரு விடுதலைப்போராட்டத்தில் இடம்பெறும்.

போராட்ட வளர்ச்சிக்கான காப்பான தளத்தையும் அங்கிருக்கும் தலைமைப் பீடத்தையும் காப்பதே போராளிகளின் முதற்கடமை. அதனைக் காப்பாக்கிய பின்பு படிப்படியாக மற்றைய பகுதிகளைக் காப்பாக்குதலே ஒரு விடுதலைப் போராட்டத்தில் நடைபெறும். சூரியக்கதிர், ஜெயசிக்குறு, செக்மேற் போன்ற நடவடிக்கைகள் எல்லாமே தலைமைப்பீடத்தையும், இயக்கத்தின் படை, படைக்கல வளர்ச்சிக்கான தளத்தை அழிப்பதையே இலக்காகக் கொண்டவை.

ஒரு போராட்டத்தின் நரம்புகளின் மையத்தைக் காப்பது எனது கடமையல்ல என எந்தவொரு போராளியும் கூறமாட்டான்.



தமிழீழப் போராட்டம் ஓரளவு வளர்ச்சிகண்ட பின்பு வடக்கிற்குத் தரச் சிங்களத் தலைமைகளும் உலக அரசுகளும் தயாராகவே இருந்தன.

புலிகள் பிரேமதாசாவோடு பேசிய காலத்தில் பிரேமதாசா பலமுறை `வடக்கைப் பிரபாகரன் ஆள்வதில் எமக்குச் சிக்கல் இல்லை. கிழக்குத்தான் சிக்கல். அங்கு சிங்களவர், முஸ்லிம்கள் உள்ளனர்` எனக் குறிப்பிட்டதுண்டு.

இதை நான் இங்கு குறிப்பிட்டமைக்குக் காரணம் புலிகளுக்கு எதிராக யாழ்ப்பாணத்திலோ, வன்னியிலோ நடத்தப்படும் தாக்குதல் புலிகளைப் பலம் குன்றச் செய்தல் என்பதோடு நிற்காமல் கிழக்கை முழுமையாக வெல்லல் என்ற நிலைப்பாடோடு இணைந்ததாகும்.

அரசுக்கு ஒன்று தெரியும் போராட்டத்தின் மூலத்தைப் பலமிழக்கச் செய்தால் கிழக்கைத் தன் கட்டுப்பாட்டுள் கொண்டுவர நீண்ட காலம் ஆகாது என்பதே.

கிழக்கைப் புலிகள் வென்றால் தமிழர்களுக்கு விடிவு விரைவில் கிழக்கைச் சிங்கள பேரினவாதம் வென்றால் அது கிழக்கு வாழ்தமிழ் மக்களின் அழிவோடு தொடங்கி ஒட்டுமொத்தமாகத் தமிழ் மக்களின் அழிவாக முடியும்.

ஜெயசிக்குறு, அக்கினிச்சுவாலை போன்ற நடவடிக்கையில் ஏற்பட்ட தோல்வியும் கிழக்கில் நவீன படைக்கலன்களுடனான புலிகளின் வளர்ச்சியுமே அரசைச் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வரவழைத்தது.

சமாதான காலம் விடுதலைப் போராட்டத்திற்குப் பெரிதும் அச்சுறுத்தலான காலமாகும். இந்தக் காலத்தில் பிறசக்திகளின் ஊடுருவலாலும் சமாதான காலம் தரும் பொய்யான அமைதியால் மக்களிடையே ஏற்படும் போராட்ட உணர்வின் தளம்பலாலும் ஒரு விடுதலை இயக்கம் பலமிழக்கச் செய்யப்படும். இதற்கான எளிமையான வழிகளை இந்தக் காலம் திறக்கும். இப்படியான செயல்வகையின் ஒரு விளைவே கிழக்கில் ஏற்பட்ட சலசலப்பு.

தமிழீழத் தேசியத் தலைவரின் காலத்தில் தமிழினம் ஒருபோதும் ஏமாறவோ, தோற்கவோ தயாராக இல்லை என்பதை பலமுறை நிருபித்துள்ளது.

விரைவில் சலசலப்புக்கள் நீங்கும். தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டம் தமிழீழத் தேசியத் தலைவரின் கீழ் புதிய மேலதிக பலத்தோடு மீண்டும் உலாவரும்.

`நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்`

என்ற உணர்ச்சிக் கவிஞர் காசி வரிகளை இங்கு மனதில் நிறுத்துவது பொருத்தமானதாக இருக்கும்.

- யோ.செ.யோகி

ஈழநாதம்.

புத்தாண்டு வாழ்த்துக்கள்



மாபெரும் மலிவு விற்பனை

சேலை வகைகள் 50% தள்ளுபடி

எதிர்வரும் தமிழ் சித்திரை புத்தாண்டை முன்னிட்டு பாரிஸ் லாசப்பலில் Sabrina Saree Tex ஸ்தாபனத்தில் எல்லா வகையான சேலை வகைகளும் மற்றும் நங்கையருக்கேற்ற சுடிதார், பஞ்சாபி, சோலி வகைகள் மற்றும் ஆடவர்களுக்கு பட்டுவேட்டி, சேட்டு, சாறம். சர்வாணி சூட் மற்றும் சிறுவர் சிறுமியர்களுக்குமான எல்லா வகை ஆடை வகைகளும் விசேட விலைக்கழிவில் 17.04.2004 வரை பெற்றுக்கொள்ளலாம்.

ஆடை வகைகள் 40% தள்ளுபடி

SABRINA SAREE TEX

199 Rue de fbg St Denis, 75010 Paris

Tel: 01 40 34 52 70

M°:LaChapple *ou* Gare du Nord

றோ அமைப்பின் ஆட்சேர்ப்பு நிலையமாக பண்டாரநாயக்கா மையம்!

- முகவராக கதிர்காமர் -

அங்கம் 3

ழத்தமிழ் மீனவர்கள் மீது சிறீலங்கா இராணுவ மும் கடற்படையும் ஒன்றிணைந்து பிரயோகிக்கும் அழுத்தங்கள் ஒரு முக்கிய செய்தியைக் கூறுகின்றன. இந்தியாவின் றோ உளவமைப்பு சிறீலங்கா படைகளுக்குள், விசேடமாக கடற்படைக்குள் ஊடுருவியுள்ளதோடு அவற்றின் நடவடிக்கைகளையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளது.

சிறீலங்கா அரசியலில் றோ அமைப்பு செலுத்தும் ஆதிக்கம் பற்றி இனிப்பார்ப்போம். ஜூன் 08. 2003ம் நாள் வெளிவந்த 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை பின்வரும் தகவலை வழங்குகின்றது. ரணில் விக்கிரமசிங்க தமிழர்களுக்கு வழங்குவதற்கு உத்தேசித்திருந்த இடைக்கால நிர்வாக அமைப்பைத் தடுப்பதில் றோவின் கரங்கள் வெளிப்படையாக ஈடுபட்டன. அதே காலப்பகுதியில் ஒரு 'றோ' அதிகாரி இந்திய இராசதந்திர அதிகாரி என்ற வேடத்துடன் யாழ்ப்பாணத்தில் உலவியுள்ளார். இதை வெளிப்படுத்திய யாழ்ப்பாணத்தின் முன்னணித் தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியர் கொழும்பில் வைத்து, இந்திய தூதரக அதிகாரிகளால் படுமோசமாக மிரட்டப்பட்டுள்ளார். இதே றோ உறுப்பினர் தனது யாழ். விஜயத்தின்போது யாழில் நிலைகொண்டுள்ள சிங்கள இராணுவத்திற்கு பாதுகாப்பு

சிறீலங்கா அரசியல் தலைமைத்துவம் றோ அமைப்பின் கட்டுப்பாட்டிலேயே இயங்குகின்றது நாடறிந்த இரகசியம். முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகருமான லக்ஸ்மன் கதிர்காமர், றோ முகவர் என்பது யாவரும் அறிந்த உண்மை. மேற்குலகினால் நிராகரிக்கப்பட்ட இவர், இப்போது இந்தியாவுக்கும் சிறீலங்கா அரசியல் தலைமைக்கும் இடையிலான பாலமாகச் செயற்படுகின்றார்.

ஆலோசனை வழங்கினார். 512ம் படையணி, யாழ். நகரில் தங்கியிருக்கும் உல்லாச விடுதியின் உட்புறத்தில் ஆழமான பதுங்குகுழிகள் அமைக்கும்படி அவர் ஆலோசனை கூறியதோடு கட்டடப்பணிகளுக்கான வரைபடங்களையும் தானே வழங்கினார். பலாலி விமான நிலைய வாசற்புறத்தில் ஒரு கண்காணிப்பு இலத்திரனியல் வளைவை நிறுவும்படி அதேநபர் ஆலோசனை வழங்கினார். இதே இலத்திரனியல் கருவியை, 'மலிவு விலையில்' இந்தியா வழங்க முன்வந்தது தெரிந்த விடயம்.

சிறீலங்கா அரசியல் தலைமைத்துவம் றோ அமைப்பின் கட்டுப்பாட்டிலேயே இயங்குகின்றது நாடறிந்த இரகசியம். முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகருமான லக்ஸ்மன் கதிர்காமர், றோ முகவர் என்பது யாவரும் அறிந்த உண்மை. மேற்குலகினால் நிராகரிக்கப்பட்ட இவர், இப்போது இந்தியாவுக்கும் சிறீலங்கா அரசியல் தலைமைக்கும் இடையிலான பாலமாகச் செயற்படுகின்றார். சந்திரிகாவின் அண்மைக்காலச் செயற்பாடுகள் யாவும் இந்தியாவின் உத்தரவுப்படியே நடக்கின்றன. றோ அமைப்பைச் சேர்ந்த இளைப்பாறிய இந்திய அரச அதிகாரிகளும் இராணுவத்தினரும் அடிக்கடி கொழும்பு வந்து கருத்தரங்குகளை நடத்திச் செல்கின்றனர். இக்கருத்தரங்குகளில் தலைமை தாங்கும் பொறுப்பை றோ முகவரான லக்ஸ்மன் கதிர்காமர் பெரும்பாலும் வகிக்கின்றார். இலங்கையின் இறைமை பற்றி பேசுவதையே தனது வாழ்க்கைப் பணியாகக் கொண்டுள்ள கதிர்காமர்தான், இலங்கையின் இறைமைக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்குகின்றார்.

அண்மைக்காலமாகக் கொழும்பு வந்து சென்ற றோ முகவர்களில் மிகவும் முக்கியமானவராகப் பேராசிரியர் எஸ்.டி.முனி அடையாளம் காணப்பட்டுள்ளார். இந்திய தேசிய பாதுகாப்புச் சபையின் முன்னாள் உறுப்பினரான முனி இப்போது புதுடில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் சர்வதேச விவகாரப் பேராசிரியராகப் பணியாற்றுகின்றார். முழு அளவு றோ உறுப்பினரான முனி மே 05, 2003ம் நாள் கதிர்காமர் தலைமையில் கொழும்பில் ஒரு மாநாடு நடத்தினார். அதே அரங்கில், இந்திய இராணுவம் தமிழீழத்தில் ஆக்கிரமிப்பில் ஈடுபட்ட காலத்தில், இந்தியக் கடற்படை அதிகாரியாகப் பதவி வகித்த உப-அட்மிரல் பி.எஸ்.தாஸ் வீற்றிருந்தார். தனது உரையின்போது தாஸ் பின்வருமாறு கூறினார். 'எமது கடலில் இந்திய- இலங்கை கடற்படைகளுக்கு மாத்திரம் இடமுண்டு, கடற்புலிகள் நான்கு ஓட்டைக் கப்பல்களையும் சில கடற்போராளிகளையும் கொண்டுள்ளனர். இவர்கள் அழிக்கப்படுவார்கள். இது கடற்படையல்ல, மாறாகப் பயங்கரவாத அமைப்பு மாத்திரமே'

`வேகமாக முன்னோக்கி` (Fast Forward) எனும் தலைப்பில் 17 டிசம்பர் 2003ம் நாள் டெயிலி நியூஸ் பத்திரிகையில் முனி ஒரு கட்டுரை எழுதியுள்ளார். இதை sdmuni@hotmail.com எனும் தளத்தில் காணலாம். கட்டுரையின் முக்கிய அம்சங்களைப் பார்ப்போம்.

சிறீலங்கா- இந்திய உறவுகள் வர்த்தக அடிப்படையில் அமைந்துள்ளன. மலைநாட்டில் வாழும் இந்தியக் குடியுரிமை பெற்ற தமிழர்களை இந்தியாவும் இலங்கையும் கூட்டாகக் கண்காணிக்க வேண்டும். அண்மைக்காலமாக மலையகத்தில் எல்.ரி.ரி.ஈ. பெருமளவில் கால்பதித்துள்ளது. ஏறத்தாழ 46 வீதம் மலையகத் தமிழர்கள் எல்.ரி.ரி.ஈ அனுதாபிகளாகக் காணப்படுகின்றனர். இலங்கையின் இறைமையையும் தரைப்பரப்பு ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதற்கு இந்தியா தயக்கம் காட்டமாட்டாது. ஜ.பி.கே.எவ். காலத்தில் கொடுத்த விலையிலும் பார்க்க; இன்னும் கூடுதலான விலையினைக் கொடுக்க இந்தியா சித்தமாக உள்ளது. இதற்கு எந்த விலை கொடுப்பதற்கும் தயாராக இந்தியா இருக்கின்றது. அந்நியப்படைகளை இலங்கையில் கால்பதிக்க இந்தியா அனுமதிக்காது. சிறீலங்கா படைகளுக்குப் பயிற்சி வழங்குவதற்கு, அந்நியப்படைகள் வந்து போக இந்தியா அனுமதிக்கின்றது.

இந்தியப் பல்கலைக்கழங்களில் ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம் மிகவும் வித்தியாசமானது. புதுடில்லியில் இயங்கும் இந்தக் கல்வி மையத்தை இந்திய வெளிவிவகார அமைச்சகம் ஆரம்பித்து நடத்துகின்றது. இதன் முதலாவது முதல்வராக மூத்த இராசதந்திரியும் இந்திரா காந்தியின் விசேட தூதுவருமான ஜி.பார்த்தசாரதி பதவி வகித்தார். இவர் தனது 83ஆம் வயதில் இறக்கும்வரை

ஆரோமே! றோ றோவோ!

(பேராசிரியர் இ.சிவசண்முகம் எழுதும் புதிய தோடர்)

(ஆகஸ்டு.01.1985) ஜேஎன்யு (JNU) என்று அழைக்கப்படும் இப்பல்கலைக்கழகத்தின் தலைமையை ஏற்று வழி நடத்தினார். இராசதந்திரிகளை உருவாக்கும் கல்வி மற்றும் பயிற்சி நிலையமாக ஜேஎன்யு இடம்பெறுகின்றது. இந்திய நிர்வாக, ராசதந்திர, முப்படைச் சேவைகளில் பணியாற்றி இளைப்பாறியோர் இங்கு பேராசியரியர்களாக பகுதி நேர விரிவுரையாளர்களாகப் பணியாற்றுகின்றனர். றோ உளவமைப்பைச் சேர்ந்தவர்களும் இங்கு விசேட பயிற்சிகளை வழங்குகின்றனர். சுருங்கக் கூறின் இது வோர் இராசதந்திர உளவுத் துறை அதிகாரிகளால் இராச தந்திர மற்றும் உளவுத் துறை அதிகாரிகளை உருவாக்கும் பயிலகமாக இடம்பெறுகின்றது.

மேற்கூறியதைப் போன்றதோர் அமைப்பை மிகச் சிறிய அளவில் 1960இல் தனது முதலாவது ஆட்சிக் காலத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்கா நிறுவினார். இதற்கு அனைத்துலகக் கற்கைகளுக்கான பண்டாரநாயக்கா மையம் என்று பெயர் சூட்டப்பட்டது. ஆங்கிலத்தில் Bandaranaike Centre for International Studies என்று இந்த நிறுவனம் அழைக்கப்படுகின்றது. BCIS என்பது சுருக்கப்பெயர். சிறீலங்கா இராசதந்திரத்தின் தந்தை என்று வர்ணிக்கப்படும் டாக்டர் வேர்ணன் எல்.பி மென்டிஸ் இந்த நிறுவனத்தின் அதிபராக நியமிக்கப்பட்டார். வாசிங்ரன், டோக்கியோ, பாரிஸ், மொஸ்கோ போன்ற தலைநகரங்களில் தூதரக அதிகாரியாகப் பணியாற்றிய மென்டிஸ் கால்நூற்றாண்டிற்கு மேலாக பண்டாரநாயக்கா மையத்தின் தலைவராகப் பணியாற்றினார்.

சென்ற வருடம் மென்டிஸ் இளைப்பாறிய பின் ஜனாதிபதி சந்திரிகா, லக்ஸ்மன் கதிர்காமரை அதிபர் பதவியில் அமர்த்தினார். இதன்பின் பல மாற்றங்கள் நிகழத் தொடங்கின. பேராசியர் எஸ்.டி.முனி, பேராசிரியர் சூரியநா



ராயணன் போன்ற றோ முகவர்கள் பண்டாரநாயக்கா மையத்தில் உரையாற்றுவதற்காக அடிக்கடி கொழும்பு வரத்தொடங்கினர். இதற்கு அனுசரணையாளராகக் கதிர்காமர் இடம்பெறுகிறார். ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தையும் பண்டாரநாயக்கா மையத்தையும் தொடுக்கும் முயற்சிகள் கதிர்காமர் தலைமையில் இப்போது நடைபெறுகின்றன. பாடத்திட்டங்கள், விரிவுரைகள், செய்முறை விளக்கங்கள். விரிவுரையாளர்கள்/பேராசிரியர்கள் பரிமாற்றம் போன்ற விடயங்கள் பற்றிய திட்டம் தீட்டப்பட்டுள்ளன. பண்டாரநாயக்கா மையத்தை ஒரு பிரிவு உருவாக்குவதே அடிப்படை நோக்கமாகத் தெரிகின்றது.

பண்டாரநாயக்கா மையத்தைச் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஒரு இராசதந்திரக் கல்லூரி மற்றும் பயிலகமாகவே நிறுவினார். இந்த நோக்கம் ஒருபோதும் நிறைவேறவில்லை. இக்கல்லூரியில் படித்தவர்கள் இராசதந்திர சேவையில் இணைக்கப்பட்டதாக வரலாறு கிடையாது. அரச நிதி இதற்கு ஒதுக்கப்பட்டது உண்மை ஆனால் பலன் கிட்டவில்லை. இப்போது கதிர்காமர் அதை உரிய இடத்தில் சேர்ப்பிக்க முயற்சி செய்கிறார். றோ முகவர்கள் தமது கருத்துக்களைப் பரப்புவதற்கு மிகவும் பொருத்தமான மேடையாக இந்த மையம் ஏற்கனவே செயற்படத் தொடங்கியுள்ளது. கதிர்காமர் தலைமை தாங்கும் பண்டாரநாயக்கா மையக் கருத்தரங்குகளில் றோ முகவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருத்துக்களைப் பகிரங்கமாக வெளிப்படுத்துகின்றனர். அத்தோடு றோ அமைப்பின் ஆட்சேர்ப்பு நிலையமாகவும் பண்டாரநாயக்கா மையம் இடம்பெறுகின்றது.

மார்கழி 2003இல் எம்.கே. றாஸ்கோத்திரா என்ற இந்திய முன்னாள்ச் செயலர் பண்டாரநாயக்கா மையத்தில் உரையாற்றும்போது, புலிகளின் இடைக்கால நிர்வாக ஆலோசனைகளைத் தனது அரசு முற்றாக நிராகரிப்பதாகக் கூறினார். சிறீலங்காவின் இறைமை பற்றிப் பேசுவதையே தனது வாழ்க்கைப் பணியாகக் கொண்ட லக்ஸ்மன் கதிர்காமர் றாஸ்கோத்ராவின் இந்த உரையை மௌனமாகச் செவிமடுத்தார். இந்தியாவின் இத்தலையீடு பற்றி அவர் ஆட்சேபிக்கவில்லை. சிங்களவர்களின் கொள்கை பற்றிய விமர்சனத்தை உள்விவகாரங்களில் தலையீடு என்றும் இறைமைக்குக் குந்தகம் என்றும் ஆட்சேபிப்பது கதிர்காமரின் வழமை. தமிழர்களைத் தாக்கிப் பேசினால் அது பற்றி அவர் அலட்டிக் கொள்ளமாட்டார்.

(தொடரும்)



விசேட விலைக் கழிவு

RHYTHM

Website rhythmentertainment.com

- Tamil, English, Hindi Movies for Sale
- Tamil, English, Hindi Movies for Rent
- Tamil, Hindi Audio Cd's, Audio Cassette

790 Harrow Road, Wembley, HA0 3EL
Tel : 02089049040
Fax: 02089049070
e-mail
info@rhythmentertainments.com

- Telephone Cards
- Party Shop
- Video Filming
- Photography

புத்திசிகாமணி பதில்கள்

? புதிய பிரதமராக மகிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்ட வுடனேயே அவரை முதலில் சந்தித்த வெளிநாட்டு இராஜ தந்திரி இந்தியத்தூதுவர் நிருபம் சென்தான். இது எதனை வெளிப்படுத்துகிறது?

ந. குணரட்னம் – பாரிஸ், பிரான்ஸ்.

! கடந்த ரணில் அரசை வழிநடத்தியது அமெரிக்கா, தற்போ தைய சந்திரிகா அரசை வழிநடத்தப்போகிறது இந்தியா. எவரும் எவரையும் வழிநடத்திவிட்டுப் போகட்டும். ஆனால் ஈழத்தமிழ் மக்களுடைய நியாயமான உரிமைகளை, அபிலாசைகளை மறுதலித்து சிறீலங்கா அரசை தவறான வழியில் அழைத்துச் செல்கின்ற எந்தவொரு அந்நிய சக்தியும் தமது இலக்கில் வெற்றிபெற முடியாது என்பது மட்டும் உறுதி.

? அமெரிக்காவுக்கு மற்றொரு வியட்னாமாக ஈராக் மாறி வருகிறதல்லவா?

சுதர்சன் – லாகொர்னேவ், பிரான்ஸ்

! சந்தேகமில்லை. ஈராக் மீது ஒரு ஆக்கிரமிப்பு யுத்தத்தை அமெரிக்கா தொடுத்த உடனேயே பல அரசியல் -இரா ணுவ ஆய்வாளர்களும் இந்தக் கருத்தை வெளியிட்டார் கள். தற்போது அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் புஷ் அவர்களை எதிர்த்துப் போட்டியிடும் கெர்றி அவர்களும் இந்தக் கருத்தை முன்மொழிந்துள்ளார். எத்தகைய ஆயுத பலத்தாலும் ஒரு ஆக்கிரமிப்பு இராணுவம் வெற்றிபெற முடியாது என்பதை ஈராக் மீண்டும் நிரூபித்து வருகிறது.

? கொழும்பு வந்திருந்த கிழக்கின் தமிழ் கூட்டமைப்பு உறுப் பினர்கள் பலவந்தமாக இராணுவ உலங்குவானூர்தியில் மட்டக்களப்புக்கு திருப்பி அழைத்துச் செல்லப்பட்டுள் ளமை எதனை வெளிப்படுத்துகிறது?

து. தவநேசன் – பாரிஸ், பிரான்ஸ்.

! கருணா விடயத்தில் அரசின் குழப்பமான நிலைமையைத் தான் இது வெளிப்படுத்துகிறது. அத்துடன் கருணாவுக் கும் இராணுவத்திற்குமிடையேயான நெருக்கமான தொடர் பையும் இந்தச் சம்பவம் உறுதிப்படுத்தியுள்ளது. கொழும்பு வந்திருந்த கிழக்கின் தமிழ் கூட்டமைப்பு உறுப்பினர்கள் தேர்தலுக்குப்பின் நடைபெற்ற கட்சிக்கூட்டத்தில் பங்கெ டுத்துக்கொண்டு தமிழ் தேசிய ஒருமைப்பாட்டின் மீதான தமது பற்றுறுதியை வெளிப்படுத்தியதைத் தொடர்ந்து கருணா தனது இராணுவ நண்பன் பலகல்ல ஊடாக கிழக் கின் தமிழ்கூட்டமைப்பு உறுப்பினர்களை மட்டக்களப் புக்கு பலவந்தமாக வரவழைத்துள்ளார். மட்டு-அம்பாறை மக்களின் ஜனநாயகத் தீர்ப்புக்கு மதிப்பளித்து வடகிழக்கு இணைந்த தமிழ் தேசியத்தை கட்டி வளர்க்க முற்படும் மக்கள் பிரதிநிதிகள் மீது கரிபூச முயல்கிறார் கருணா. அவரின் கனவு பலிக்கப்போவதில்லை.

? சந்திரிகா அம்மையாரின் அமைச்சரவை எப்படியிருக்கிறது புத்திசிகாமணியாரே?

சிவப்பிரகாசம் – பாரிஸ், பிரான்ஸ்.

! முதல் கோணல் முற்றும் கோணல் என்பதுபோல சந்திரி காவின் அமைச்சரவை பதவியேற்பே பல குழப்பங்களுட னும் இழுபறிகளுடனும் முக்கிய பங்காளரான ஜே.வி.பி. யின் பங்குபற்றுதலும் இன்றி ஒருவாறாக நடந்தேறியுள் ளது. இதில் அர்சுனா ரணதுங்க என்ற முன்னாள் கிரிக் கெட்வீரரும் தனக்கு விளையாட்டு அமைச்சு தரவில்லை என நிகழ்ச்சியிலிருந்து வெளிநடப்பு செய்திருக்கிறார். மொத்தத்தில் சந்திரிகா அரசின் ஆயுள் சொற்பமே என் பதை ஆரம்பநிகழ்வுகளே வெளிப்படுத்துகிறது.

? டக்ளஸ் தேவானந்தாவுக்கும் அமைச்சர் பதவி கிடைத்தி ருக்கிறதாமே....?

சஞ்சயன் –பாரிஸ், பிரான்ஸ்.

! அவருக்கும் ஒரு அமைச்சர் பொறுப்பு சந்திரிகாவால் வழங்கப்பட்டுள்ளதுதான். ஆனால் அப்படியான ஒரு அமைச்சை சந்திரிகா எங்கிருந்து, எப்போது, எப்படி பெற்றுக்கொண்டார் என்பது புரியாமல் நான் குழம்பிக் கொண்டிருக்கிறேன். விவசாய சந்தைப்படுத்தல், அபிவி ருத்தி- இந்து விவகாரம் தமிழ்மொமி, பாடசாலைகள், தொழிற்பயிற்சி-வடக்கு என்பதுதான் டக்கிளசின் அமைச்சு.

? தான் பாரதிய ஜனதா கட்சிக்கே வாக்களிப்பேன் என நடிகர் ரஜனிகாந் தெரிவித்துள்ளாரே...?

ச. முருகதாஸ் – சூரிச், சுவிஸ்.

! ரஜனி, தனது அரசியல் குரு சோவின் ஆலோசனைக் கிணங்க இந்த முடிவுக்கு வந்திருப்பது ஒன்றும் வியப் பானதல்ல. இவரின் அறிவிப்பு இந்திய அரசியலில் பெரி தாக எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்திவிடப்போவது மில்லை. ரஜனி தனது ஆளுமையையும் அரசியல் வசீக ரத்தையும் இழந்து கனகாலமாச்சு.

? வை.கோ விடயத்தில் பொடா மறு ஆய்வுக்குழுவின் தீர்ப்பை தாம் ஏற்கப் போவதில்லை என தமிழக அரசு அறிவித்துள்ளது குறித்து உங்கள் கருத்தென்ன?

கனேந்திரன் – பொபினி, பிரான்ஸ்.

! தற்போதைய ஜெயலலிதா அரசை மீண்டும் தமிழக மக் கள் ஏற்றுக்கொள்வார்களா என்கின்ற சந்தேகம் ஏற்பட் டுள்ள நிலையில் ஆதங்கத்திலும் அவசரத்திலும் வெளிப் படுத்தப்பட்ட இந்த முடிவு அவர்களுக்கே பாதகமாக அமையும் என்பதுதான் உண்மை.

? எதிர்காலத்தில் அரசுக்கும் - புலிகளுக்கும் இடையே நடை பெறப்போகும் சமாதானப் பேச்சுக்களில் இந்தியா நேரடி யாக பங்காற்றும் என கதிர்காமர் குறிப்பிட்டுள்ளதுபற்றி உங்கள் கருத்தென்ன?

த. சண்முகநாதன் – லாபிளான், பிரான்ஸ்.

! இதனை கதிர்காமரோ அன்றி இந்தியாவோ தனித்துத் தீர்மானிக்கமுடியாது. விடுதலைப்புலிகளே இவ்விடயத்தில் இறுதித்தீர்மான சக்தியாக இருப்பார்கள்.

? கிழக்கில் விடுதலைப்புலிகள், கருணா மீது மேற்கொண்டி ருக்கும் ஒழுங்காற்று நடவடிக்கையைத் தொடர்ந்து ஏராள மான போராளிகள் புலிகளுடன் இணைந்தும் பலர் பின் வாங்கியும் சென்றுள்ளார்களே. இது எதனை வெளிப்படுத் துகிறது?

ச. சத்தியசீலன் – பாரிஸ், பிரான்ஸ்.

! கடந்த வெள்ளிக்கிழமை தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட கருணா மீதான ஒழுங்காற்று நடவடிக் கையானது சகல தரப்பையுமே அதிர்ச்சிக்குள்ளாக்கி, புலி களின் பலத்தையும் தலைமையின் அதி உச்ச இராணுவ அரசியல் வல்லாண்மைத் திறனையும் மீண்டும் நிரூபித் துள்ளது. கருணாவின் வெளியகற்றுவதற்கான தாக்குதல் தொடங்கி சில நிமிடங்களிலேயே கருணா அணியினர் பெரு மளவில் புலிகளுடன் இணைந்துகொண்டதுடன்சிலர் பின் வாங்கியும் சென்றுள்ளார்கள். தலைவர் பிரபாகரனின் ஆற்றுகையிலும் வழிநடத்தலிலும் இருக்கும் வரையிலும் மக்கள் முன் பிரமாண்டமாகத் தெரிந்த கருணா, அவரை விட்டு என்று விலகினாரோ அன்றிலிருந்து வெறும் காற்ற டித்த பலூனாகிவிட்டார். அவரால் இனி ஒரு கம்பீரமான மிடுக்கான சிறந்த படைநகர்த்தும் தளபதியாக செயற்பட முடியாது என்பதைத்தான் கிழக்கு நிகழ்வுகள் நிரூபிக்கின்றன.

தான் பாரதிய ஜனதா கட்சிக்கே வாக்களிப்பேன் என நடிகர் ரஜனிகாந் தெரிவித்துள்ளாரே...?

ரியல் மட்ரிட் அதிர்ச்சித் தோல்வி! மொனாகோ அரையிறுதியில்!

சாம்பியன்ஸ் லீக் 2வது லெக் காலிறுதியில் கடந்த 6ம் திகதி மொனாகோ அணியிடம் 3-1 என்ற கோல் கணக்கில் பலம் வாய்ந்த ரியல் மட்ரிட் அணி அதிர்ச்சித் தோல்வியுற்றதால் மொனாகோ அணி சாம்பியன்ஸ் லீக் அரையிறுதிக்குச் சென்றது!

மட்ரிட்டில் நடந்த முதல் சுற்று காலிறுதியில் 4-2 என்று வென்ற மட்ரிட், 6ம் திகதி 1-3 என்று தோற்று கோல்கள் அடிப்படையில் 5-5 சமன் செய்திருப்பினும், அந் நிய மைதானத்தில் 2 கோல்களை அடித்த மொனாகோ அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

மொனாகோ அணித் தலைவர் லுடோவிக் கியுலி 45வது நிமிடத்திலும், பிறகு 66வது நிமிடத்திலும் 2 கோல்களை அடிக்க பெர்னாண்டோ மொரியண்டஸ் 48வது நிமிடத்தில் ஒரு கோல்போட்டார்.

ரியால் அணியில் ரால் 35 வது நிமிடத்தில் முதல் கோல் அடித்தார்.

சாம்பியன்ஸ் லீக் வரலாற்றிலேயே சாத்தியமில்லாத ஏமாற்றம் ரியால் மட்ரிட்டின் இந்தத் தோல்வி என்று வர் ணிக்கப்படுகிறது.

கடந்த வருட சாம்பியன் லீக் போட்டியில் அரையிறுதி யில் ஊவண்டஸ் அணியுடன் தோற்று வெளியேறியபிறகு தொடர்ந்து 2வது முறையாக இந்த வருடமும் வெளியேறி யுள்ளது குறிப்பிடத்தக்கது.

* * *

2வது கிரிக்கெட் டெஸ்ட்:

பாகிஸ்தான் அணி 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி



லாகூரில் இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான 2வது கிரிக்கெட் டெஸ்ட் போட் டியில் பாகிஸ்தான் இந்தியாவை 9 விக்கெட்டுகள் வித்தி யாசத்தில் வெற்றி கொண்டது. பாகிஸ்தான் அணியின் உமர் குல் ஆட்ட நாயகனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 5 ஒருநாள் போட்டி தொடரைக் கைப்பற்றி யது. தொடர்ந்து நடைபெற்றுவரும் டெஸ்ட் போட்டிகளில் முதல் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தானை, இந்திய அணி ஒரு இன்னிங்ஸ் மற்றும் 52 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்திச் சரித்திர சாதனை படைத்தது.

இதனையடுத்து, 2வது டெஸ்ட் போட்டி லாகூரில் கடந்த திங்கட்கிழமை தொடங்கியது. ஆட்டத்தின் முதல் நாளன்றே முதல் இன்னிங்சில் இந்திய அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 287 ரன்கள் எடுத்தது. இதில் யுவராஜ்சிங் மட்டுமே சிறப்பாக விளையாடி தனது முதல் டெஸ்ட் சதத்தை (112) எடுத்தார்.



பின்னர் ஆடிய பாகிஸ்தான் அணி தனது முதல் இன்னி ங்சை சிறப்பாக ஆடியது. பாகி ஸ்தான் அணி யின் கேப்டன் இன்சமாம் உல் ஹக் மற்றும் தொடக்க ஆட் டக்காரர் பர் ஹத் இருவரும் சிறப்பாக ஆடி சதமெடுத்தனர். முதல் இன்னிங்சில் பாகிஸ்தான அணி 489 ரன்கள் எடுத்தது.

தொடர்ந்து 2வது இன்னிங்சை ஆடிய இந்திய அணியின், விக்கெட்டுகள் தொடக்கத்திலேயே மளமளவென சரியத்து வங்கின. ஒருமுனையில் ஷேவாக் மட்டும் ஆடிக்கொண் டிருக்க, மறுமுனையில் விக்கெட்டுகள் சரிந்தவண்ணம் இருந்தன. ஒரு கட்டத்தில் இன்னிங்ஸ் தோல்வி அடைய இருந்த இந்திய அணியை, சரிவிலிருந்து மீட்டார் பார்த் தீவ் பாட்டேல். அவர் சிறப்பாக ஆடி 62 ரன்கள் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

2வது இன்னிங்சில் இந்திய அணி 241 ரன்கள் சேர்த்த நிலையில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. தொடர்ந்து 40 ரன்கள் சேர்த்தால் வெற்றி என்ற இலக்கு டன் தனது 2வது இன்னிங்சைத் துவக்கிய பாகிஸ்தான் ஒரு விக்கெட் மட்டும் இழந்து 40 ரன்களை எடுத்து வெற்றிபெற்றது.

3 டெஸ்ட்போட்டி கொண்ட இத்தொடரில் இந்திய, பாகிஸ்தான் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி பெற் றுள்ளன. ராவல்பிண்டியில் நடைபெறவிருக்கும் அடுத்த டெஸ்ட் போட்டியில் இரு அணிகளும் சம பலத்துடன் மோதவிருக்கின்றன.

இந்தியா: முதல் இன்னிங்ஸ் –287
2வது இன்னிங்ஸ் – 241

பாகிஸ்தான்: முதல் இன்னிங்ஸ் – 489
2வது இன்னிங்ஸ் –40/ 1

* * *

உலகின் முன்னணி துடுப்பாட்டவீரர் பொன்டிங்

கிரிக்கெட் பைபிள் என்று அழைக்கப்படும் விஸ் டன் கிரிக்கெட் அல்மனாக் அவுஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொன்டிங் உலகின் முன்னணி பேட்ஸ்மேன் என்று அறிவித்துள்ளது.



கடந்த வருடம் பொன்டிங் 1503 ரன் களை 100.00என்ற சராசரி விகிதத்தில் பெற்றுள்ளதால் முன்னணி வீரர் விருது பெற்றுள்ளார். ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 1154 ரன் களை 46.16 என்ற சராசரியில் பொன் டிங் பெற்றுள்ளார்.

இரு தரப்பு கிரிக்கெட்டிலும் சேர்த்து 11 சதங்களை அடித்துள்ளார் பொன்டிங். இதில் 3 இரட்டை சதங்கள் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

தன்னை ஒரு போரியல் மேதையாக சித்தரிக்க முயலும் கருணா!



புலிகள் இயக்கத்தின் கிழக்குப் பகுதித் தளபதியாக இருந்த கருணா - தனித்துச் செயற்பட, தலைமைத்துவத்துக்கு எதிராக முடிவு எடுத்த பின்னர் இந்திய, சிங்கள, ஆங்கில ஊடகங்கள் மத்தியில் அடிக்கடி பேட்டிகளைக் கொடுத்துவருகிறார்.

இந்தியாவின் பிரபல நாளிதழான 'ஹிந்து' வின் கொழும்புச் செய்தியாளர் சம்பந்தனுக்கு கருணா வழங்கிய பேட்டியில், தன்னை ஓர் இராணுவ மேதை என்பது போன்று புகழ்ந்து தள்ளியிருக்கிறார்.

கடந்த இரண்டு தசாப்த காலமாகக் கருணா பல்வேறு களங்களிலும் முக்கிய பங்கை வகித்திருந்தாலும் கூட அவர் கூறுவது போன்று புலிகள் இயக்கம் கருணாவை நம்பி வளர்ச்சி பெறவில்லை.

இயக்கத்தின் ஆரம்பகால வளர்ச்சியில் கருணாவுக்கு எந்தப் பங்களிப்பும் இருக்கவில்லை. 1987ம் ஆண்டு புலிகள் ஒரு பெரிய கெரில்லா படையாக வளர்ச்சி பெறும் வரை கருணா சாதாரணமான ஒருவராகவே - கள நிலையை அறியாதவராகவே இருந்து வந்தார்.

1987ம் ஆண்டுக்குப் பின்னர் மட்டு - அம்பாறை தளபதியாக நியமிக்கப்பட்ட பின்னரும் கருணாவின் போரியல் சாதனைகள் என்பது பெரியளவிலானதாக அமைந்திருக்கவில்லை. நிரந்தரத் தளப் பிரதேசத்தைக் கொண்டதாகக் கருணா தனது அணிகளைக் கெரில்லாக் குழுக்களாகவே பயிற்றுவிததுக் கொண்டிருந்தார்.

இரண்டாம் கட்ட ஈழப் போர் ஆரம்பித்த சில மாதங்களிலேயே மட்டக்களப்பு - அம்பாறைப் பகுதிகளை முழுமையான கட்டுப்பாட்டில் கொண்டுவரும் நடவடிக்கைகளை அரச படைகள் எடுத்தன. இதனால் புலிகளின் அணிகள் காடுகளுக்குள் பின்தள்ளப்பட்டன.

அதே வேளை புலிகள் இயக்கம் வடமுனையில் இன்னொரு பரிணாம வளர்ச்சியை அடைந்து கொண்டிருந்தது. படைபல வளர்ச்சி, பயிற்சி என்பவற்றின் மூலம் மரபுவழிப் படையணிகளை உருவாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1991இல் முதல் மரபுவழிப் படையணி உருவாக்கப்பட்டதையடுத்து மரபுவழிச் சமர்கள் ஆரம்பமாகின. அதே வேளை, கருணா மரபுவழிச் சமர்களுக்குகேற்ப தனது படையணியைப் பயிற்றுவிக்கக்கூட முடியாமல் இருந்தார். இந்தளவுக்கு இராணுவ நெருக்கடிகள் அவருக்கு இருந்தன.

இராணுவக் கெடுபிடிகளால் இயக்கத்தில் இணைந்து கொள்ளும் போராளிகளின் எண்ணிக்கை அதிகரித்த போது - வடக்கில் இராணுவ மூலஉபாயம் மாற்றப்பட்டது இரண்டாவது கட்ட ஈழப்போரில் கிழக்குப் பகுதியை முழுமையாகத் தக்க வைத்துக்கொள்வதும் வடக்கிலே தற்காப்பு நிலையில் இருப்பதும்தான் இராணுவத்தின் மூலோபாயமாக இருந்தது.

ஆனால், மூன்றாம் கட்ட ஈழப்போரில் இராணுவ மூலோபாயத் திட்டத்தை ஜெனரல் ரத்வத்தை மாற்றியமைத்தார். கிழக்குப் பகுதியில் மட்டுப்படுத்தப்பட்ட இடங்களில் படைகளைத் தற்காப்பு நிலையில் வைத்துக் கொண்டு வடக்கில் தாக்குதல்களை மேற்கொள்வதுதான் புதிய மூலோபாயம்.

இந்த மாற்றப்பட்ட மூலோபாயத்தினால் படுவான்கரைப் பகுதியில் இருந்த 40 இற்கும் மேற்பட்ட இராணுவ முகாம்கள் மூடப்பட்டு வடக்கிற்குப் படையினர் கொண்டு செல்லப்பட்டனர். இங்கேதான் கருணாவுக்கு ஒரு தளப் பிரதேசம் கட்டுப்பாட்டில் வந்தது.

ஹிந்து பேட்டியில் கருணா, தான் இல்லாமல் இனிமேல் புலிகளால் சண்டைகளை வழிநடத்த முடியாததென வும், தானே அனைத்துச் சமர்களையும் முன்னின்று நடத்தியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

75 சதவீதமான ஆட்பலத்தைத் தாமே கொடுத்துதவியதாகவும் குறிப்பிட்டிருக்கும் கருணா புலிகள் இயக்கத்துக்கு நவீன இராணுவ போருபாயங்களைத் தானே அறிமுகப்படுத்தியதாகவும் பெருமையாகச் சொல்லிக் காட்டியிருக்கிறார்.

கருணா 1987 முதல் 1995 வரை மட்டக்களப்பில் நிரந்தரத் தளப் பிரதேசத்தைத் தக்க வைத்திருக்கக் கூடிய வகையில் தனது போராற்றலை நிரூபித்துக் கொள்ள முடியாதிருந்த கருணா, போர்க் களங்களில் இன்றியமையாத ஒருவராகச் செயற்பட்டாரா எனப் பார்க்கலாம்.

முதலாம் கட்ட ஈழப்போர், இந்திய - புலிகள் போர், இரண்டாம் கட்ட ஈழப்போர் என்பனவற்றின் போது வடக்கில் நிகழ்த்தப்பட்ட போர்ச் சாதனைகளில் கருணாவின் பங்களிப்பு எதுவுமே இருக்கவில்லை.

சிலாவத்துறை, ஆனையிறவுச் சமர்களில் வெற்றி கிட்டாவிடினும் இப்பெரும் சமர்களில் கருணாவின் பங்கு எதுவுமில்லை. பூநகரித் தாக்குதலுக்கு ஒரு பகுதிக்கான சண்டையை மட்டுமே கருணா நடத்தியிருந்தார்.

வன்னிப் படையெடுப்புக்கள், யாழ்-தேவி படைநடவடிக்கை, 'லீப்போவேட்' நடவடிக்கை முறியடிப்பு, மண்டைதீவு முகாம் தாக்குதல் போன்று இடம்பெற்ற சண்டைகளில் எல்லாம் கருணாவின் பங்களிப்பு இருக்கவில்லை.

ரிவிரெச நடவடிக்கையின் பின்னர் வன்னிக்குள் புலிகள் முடங்கியபோது - ஓயாத அலைகள் நடவடிக்கைகளை புலிகள் மேற்கொண்டு முலலைத் தீவுத்தளத்தை அழித்தனர். இதற்கு கருணா எதையும் செய்யவில்லை.

ஆனையிறவுத்தளம் மீதான ஊடறுப்புத் தாக்குதலிலும் இவ்வாறே இருந்தது. ஜெயசிக்குறு களமுனையை வழிநடத்திய அதேவேளை கிளிநொச்சித் தாக்குதலுக்குக் கருணா கட்டளைகளை வழங்கியிருந்தார்.

ஆனால் ஓயாத அலைகள் - 3 நடவடிக்கையில் கருணாவின் பங்கு குறைந்தளவே இருந்தது. இந்த நடவடிக்கையின் ஆரம்ப கட்டத்தை கேணல் சொர்ணம், கேணல் தீபன் ஆகியோர்தான் வழிநடத்தியிருந்தனர்.

இரண்டாவது கட்டத்திற்கு வடமராட்சிக் கிழக்கு நோக்கிய தாக்குதலுக்குக் கருணா தலைமை தாங்கியிருந்தார். பின்னர் களமுனையில் அவரது செயற்பாடு காரணமாக ஆனையிறவுத் தளம் மீதான இறுதிக்கட்டத் தாக்குதலில் கேணல் பானுவே தலைமை தாங்கினார்.

கருணா 1987 முதல் 1995 வரை மட்டக்களப்பில் நிரந்தரத் தளப் பிரதேசத்தைத் தக்க வைத்திருக்கக் கூடிய வகையில் தனது போராற்றலை நிரூபித்துக் கொள்ள முடியாதிருந்த கருணா, போர்க் களங்களில் இன்றியமையாத ஒருவராகச் செயற்பட்டாரா? முதலாம் கட்ட ஈழப்போர், இந்திய – புலிகள் போர், இரண்டாம் கட்ட ஈழப்போர் என்பனவற்றின் போது வடக்கில் நிகழ்த்தப்பட்ட போர்ச் சாதனைகளில் கருணாவின் பங்களிப்பு எதுவுமே இருக்கவில்லை. ஓயாத அலைகள் நடவடிக்கைகளை புலிகள் மேற்கொண்டு முலலைத் தீவுத்தளத்தை அழித்தனர். இதற்கு கருணா எதையும் செய்யவில்லை.

யாழ்ப்பாணம் மீதான சமருக்கு கேணல் சொர்ணம் தலைமை தாங்கியிருந்தார். நிலைமை இப்படியிருக்கும் போது கருணா, தான் இல்லாவிட்டால் புலிகளால் மரபு வழிச்சமர்களைச் செய்யமுடியாது என்று கூறுவது எவ் வகையில் பொருந்தும்?

தன்னை ஒரு நிரம்பிய இராணுவ மேதை எனக் கூறும் கருணா ஒரு முட்டாள் சிந்திக்கின்ற அளவுக்குக் கூடச் சிந்திக்காது விட்டது ஏன்? மரபு வழிச்சண்டைகளைக் கருணா வன்னிக் களத்தில்தான் கண்டார். அதற்கு முன்னர் அவரது இராணுவ அறிவு கெரில்லாத் தாக்குதல் சார்ந்ததாகவே இருந்தது.

ஆனால் 1990ம் ஆண்டு முதலே புலிகள் வடபோர் முனையில் எத்தனையோ மரபுவழிச் சண்டைகளை நடத்தியிருக்கின்றார்கள். அதை வழிநடத்திய தளபதிகள் பலர் இப்போதும் இருக்கின்றனர். இப்படியிருக்கும் போது கருணா, தான் இல்லாவிட்டால் புலிகள் சண்டைகளை வழிநடத்த முடியாது எனக் கூறுவதை நகைப்புக்கிடமான கருத்தாகவே எடுத்துக் கொள்ள முடியும்.

அடுத்தது ஹிந்து பேட்டியில் கருணா கூறியுள்ளார்: 75 வீதமான படைபலத்தை தாமே கொடுத்து உதவியதாகவும் அதைவிட தமிழீழப் போராட்டத்துக்காக உயிர்துறந்த மாவீரர்களின் தியாகத்தையே கருணா வடக்கு-கிழக்கு என்று கூறுபோட்டுத் தன்னை அசிங்கப்படுத்தியிருக்கிறார்.

மட்டு-அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த 4550 மாவீரர்கள் இதுவரை வீரச்சாவடைந்திருப்பதாகவும் இவர்களில் 2248 பேர் யாழ், வன்னி மண்ணில் வீரச்சாவடைந்தாகக் கருணா கூறியிருக்கிறார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இதுவரை சுமார் 18 ஆயிரம் மாவீரர்கள் வீரச்சாவடைந்திருக்கிறார்கள். இவர்களில் 4550 பேர் மட்டுமே மட்டு-அம்பாறை சேர்ந்தவர்களென்றால் கருணா கூறுவது போன்ற 75 வீதமான படைபலத்தை அவர் எப்படி கொடுத்து உதவியிருக்க முடியும்?

படைச் செறிவுக்கு ஏற்பவே உயிரிழப்பு ஏற்படும். அப்படி 75 வீத படைபலத்தை கருணா கொடுத்து இருந்தால் இதுவரை 18 ஆயிரம் மாவீரர்கள் வீரச்சாவடைந்திருப்பதால் அதில் 75 வீதமாகவும் இருந்திருக்க வேண்டும்.

புலிகளுக்கு நவீன இராணுவத் தொழில்நுட்பங்களைத் தானே அறிமுகப்படுத்தியதாகக் கருணா கூறுகிறார். கருணாவுக்கு மரபுவழிப் போராயுதங்கள் அறிமுகமானதே 1997 இற்குப் பின்னர் வன்னிக் களமுனைகளில்தான்.

கருணா வன்னிக்கு வருவதற்கு முன்னரே புலிகள் ஆட்லறிகளைப் பயன்படுத்தத் தொடங்கி விட்டனர். போர் உத்திகள், நவீன இராணுவ தளவாட அறிமுகங்கள் எல்லாமே புலிகளின் தலைமைப்பீடத்தில் இருந்து தான் கருணாவுக்குக் கிடைத்தது.

கருணா இப்படிக்கூறுவதை இந்திய ஊடகங்கள் பெரிதாக எடுத்துக் கொள்ளலாம். புலிகள் பலவீனப்படுவதை இந்திய ஊடகங்கள் விரும்புகின்றன. அவ்வாறான ஊடகங்களுக்குக் கருணா இப்படிக் கூறுவது இனிப்பானதாக இருக்கலாம்.

கருணாவும் தன்னை இப்படிப் பிரபலப்படுத்திக் கொண்டால்தான் தன்னையிட்டு மற்றவர்கள் கரிசனை கொள்வார்கள் எனக் கருதியிருக்கலாம்.

ஆனால் கருணா இப்போது செல்லாக்காசாக மாறி வருகிறார். இதை ஜனாதிபதி சந்திரிகா வெளிப்படையாக பி.பி.சி. பேட்டியில் கூறியிருக்கிறார். கருணா தன்னை அணுகப் பலமுறை தொடர்பு கொண்டதாகவும் தான் அதைத் தவிர்த்துக் கொண்டதாகவும் சந்திரிகா கூறியுள்ளார்.

இதிலிருந்து கருணாவின் முகம் சிங்களப் பேரினவாதிகளால் வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. எந்தச் சக்தியுடன் கைகோர்த்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அழிக்க கருணா நினைத்தாரோ, அந்தச் சக்திகளே கருணாவை நம்பத் தயாராக இல்லை. கருணா போன்றவர்களின் வரலாறு இப்படிப்பட்டதாகவே இருந்து வரும் என்பதில் சந்தேகமில்லை.

- சுபத்ரா

TRISTAR ALLIANCE

வீட்டுக் காப்புறுதி, மருத்துவக் காப்புறுதி, வாகனக் காப்புறுதி, ஆயுட் காப்புறுதி, அனைத்துக் காப்புறுதிகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

TRISTAR ALLIANCE

18, Rue Démarquai, 75010 Paris
Tél: 01 42 09 06 66 / Fax: 01 42 09 15 05
Métro: Gare du nord
www.tristarassurance.com

Pub-Fr-40

தமிழில் உரையாடி உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும் மேலும் விமானச் சீட்டுக்களை குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளவும்

BYBA TOURISME

LA CHAPELLE

இறைச்சிக் கடை

சுவையான, சுத்தமான, தரமான ஆடு, மாடு, உயிர் கோழி மற்றும் கோழிக் கால்களுடன் அனைத்து வகையான இறைச்சி வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்

34 Rue Philippe Girard
Paris 75010, M° : La chapelle
Tel : 01 42 05 00 95

அதிசயம் ஆனால் உண்மை

உங்கள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் தேவையான பேப்பர் பிளேட்ஸ், கப், மேசை விரிப்பு, கரண்டி, பாயாசக்கப், கை துடைக்கும் பேப்பர் மற்றும் உங்களுக்குத் தேவையானவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

விமல் விநியோக நிலையம்
VIMAL DISTRIBUTION
1 Bis , Rue Chemain Vert
93800 Epiny Sur Saine
Port 0616812200 Ou 0666795689
Tel.et Fax - 01 42 35 24 98
குறிப்பு - மிகுதிப் பொருட்கள் திரும்பப் பெறப்படும்.

Luxmy Photo & Transport

புகைப்படத் தேவைகளுக்கும் சுற்றுலாப் பயணங்களுக்கும்



தொடர்புகளுக்கு:
Pub-06

Ashha Video Movies

உங்கள் இல்லத்தின் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா பிறந்தநாள் மற்றும் அனைத்து மங்கலகரமான நிகழ்வுகளைச் சிறந்த முறையில் (Digital - DV Camera) மூலம் வீடியோவில் படம் பிடித்து, நவீன முறையில் கணினி (Computer) மூலம் பதிவுசெய்து தருகின்றோம். அத்துடன் புகைப்படமும் எடுத்துக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 01 48593429 / 0615737073
Pub-Fr-39

போட்டோ பாலா

மங்கலகரமான உங்கள் விழாக்கள் மற்றும் அனைத்து நிகழ்வு போட்டோ அல்பங்களை பாதுகாப்பான முறையில் Lamination செய்துகொள்ளாம்

உங்கள் அனைத்து தொடர்புகளுக்கும்:
Photo Bala
87 Rue de Clignancourt, 75018 Paris
Tel&Fax: 01.42.23.39.15 / 06 18 35 40 77

பிரான்சில் விசா இல்லையா?

கவலை வேண்டாம்!

ஓஃ ப்ரா, கொமிசன், நீஅப்பீல் இலவசம்*

உங்கள் கேசுக்குரிய அத்தாட்சிப் பத்திரம் எடுப்பதற்கான தொடர்புகள் இல்லையா? அதையும் செய்து தரலாம்!

தமிழில் எழுதித் தரப்படும் கேஸ், 48 மணிநேரத்தில் பிரெஞ்சில் மொழிபெயர்ப்புச் செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு: தியாகராஜா மாஸ்டர்
06 09 36 71 89

* மொழிபெயர்ப்பைத் தவிர
Pub. Fr.05

கருணா தனது எதிர்ப்பை முற்றாக நிறுத்தி விட்டார்

- எரிக் சொல்ஹெய்ம் -

தனக்குக் கிடைத்த செய்திக ளின்படி, கருணா தரப்பினர் தமது எதிர்ப்பை முற்றாக நிறுத் திக்கொண்டு பின்வாங்கி விட்ட தாக எரிக் சொல்ஹெய்ம் செய்தி யாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

கருணாவின் தற்போதைய நிலை என்ன, எங்கே ஒளிந்திருக் கிறார், யார் பாதுகாப்பு வழங்குகி றார்கள் என்ற விபரமெதுவும் தனக்குக் கிடைக்கவில்லை என்று தெரிவித்த சொல்ஹெய்ம், கருணாவின் எதிர்ப்பு முற்றாக நிறுத்தப்பட்டு விட்டதை உறுதிப் படுத்தியுள்ளார்.

யுத்த கண்காணிப்பாளர்களு டன் ஓர் அவசர சந்திப்பிற்கு விடு தலைப் புலிகள் அழைப்பு விடுத் துள்ளதாகவும், நாளை செவ்வாய் க்கிழமை இச்சந்திப்பு இடம்பெற வுள்ளதை கண்காணிப்புக்குழு வின் பிரதித் தலைவர் ஹேக்ரப் ஹோக்லான்ட் உறுதிசெய்துள்ள தாகவும் மேலும் அவர் தெரிவித் தார்.

இதற்கிடையில், கருணா தரப் பினர் பாதுகாப்பைக் கோரும் பட் சத்தில், உயிரைப் பாதுகாக்கும் பொருட்டு, அடிப்படைப் பாது காப்பு வழங்க அரசு தயாராகவி ருப்பதாக, சிறீலங்காவின் பாது காப்பு செயலாளர் சிரில் ஹேரத் தெரிவித்துள்ளார்.

பிரதமரின்...

(28ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் திருத்தம் கொண்டு வரப்படும் பட்சத்து சந்திரிகா தனது அதிகாரத்தை தக்க வைத்து கொள்வதற்காக, தூர நோக்குடன் இந்த இராஜிநாமா கடிதத்தை சந் திரிகா ஏற்றுக்கொண்டுள்ளதாக வும் தெரியவருகிறது. அதே வேளை ஜேவிபி.யின் அழுத்தம் தொடருமிடத்து மகிந்த ராஜபக்ஷ பதவியிலிருந்து விலக்கபடலாம் எனறும் கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

எங்களுக்...

(28ம் பக்கத் தொடர்ச்சி)

புலம்பெயர் தமிழர்கள் குறிப் பாக இங்கிலாந்து வாழ் தமிழர் கள் இச் சட்டத்தரணிகள் அமைப் புகளுக்கு அழுத்தங்களைக் கொடுத்து இலங்கையை பாது காப்பற்ற நாடாக (White list) இங்கிலாந்து அரசு அறிவிக்க முயற்சி எடுக்க வேண்டும். இதற் காக பொருளாதார உதவியையும் கேட்டிருக்கிறார்கள் இத் தடுப்பு முகாமிலுள்ள தமிழர்கள்.

இந்தக் கோரிக்கையைப் புறக் கணிக்காமல் இங்கிலாந்துவாழ் ஈழத் தமிழர்கள் உடனடியாக முயற்சிகளை மேற்கொள்ள வேண் டும் என்றும் தாமதிப்பின் வரும் காலங்களில் பலருக்கும் அவ் அக திகளின் நிலையே ஏற்படும் என் றும் சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி...

(28ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற அமைச்சரவை பதவியேற் பில் கலந்துகொள்வதில்லை எனத் தீர்மானித்த பின்பே ஜே.வி.பி. இந்தக் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளது.

அத்துடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மத்திய குழுவையும் உடனடியாக கூட் டும் படி ஜே.வி.பி. ஜனாதிபதி சந்திரிகாவிடம் கேட்டுள்ளது.

இதற்கான கோரிக்கை கடிதம் கடந்த 11ம் திகதி ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணியின் கோட்பாடுகள், வாக்கு றுதிகள் மீறப்பட்டுள்ளதாக ஜனா திபதியை குற்றம் சாட்டியுள்ள ஜே.வி.பி., எதிர்காலத் தீர்மானங் களை எடுக்க மத்திய குழுவின் ஆலோசனை பெறப்பட வேண் டும் என்றும் வலியுறுத்தி இருப்ப தாகவும் தெரிய வருகிறது.

தமிழ்க்...

(28ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்தில் பரிசீலனைக்கு எடுத் துக் கொள்ளப்படும் என்றும் கூட் டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரி வித்தார்.

சபாநாயகர் பதவிக்கான தேர் தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் முன்னாள் நீதி அமைச் சர் டபிள்யு.ஜே.எம்.லொக்குபண் டார போட்டியிடவிருக்கின்றார்.

அடுத்த...

(28ம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலில் தனித்துப் போட்டியிட் டால் சுதந்திரக் கட்சியின் ஜனாதி பதி வேட்பாளரைவிட கூடியளவு வாக்குகளைப் பெறலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாகவே அவர் தனித் துப் போட்டியிட தீர்மானித்திருப் பதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, தற்போது சுதந் திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைத்துள்ள ஜே.வி.பி.யி னர் இன்னும் இரண்டு வருட காலத்தினுள் கூட்டணியை முறித் துக் கொண்டு வெளியேறுவார் கள் என அரசிலாய்வாளர்கள் எதிர்வு கூறியுள்ளனர்.

சுதந்திரக் கட்சி ஆதரவாளர்க ளிடையே விமல் வீரவன்சவிற்கு பலத்த ஆதரவுள்ளது. இந்த ஆதர வைத் தக்கவைத்துக் கொள்ளவே அவர் இம்முறை அமைச்சுப் பத வியை ஏற்கவில்லை எனவும் தெரி விக்கப்படுகிறது.

ஈழமுரசு
POOBALAM WEEKLY

"POOBALAM"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

Siege Social
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.

RCS PARIS
B 452 164 817 (2004B03079)
Directeur de la publication:
A.F. Santiogu
Redacteur: K. Jeisanthar
Impression:
IMPRIMERIES IPS
27 BERNAY, FRANCE.
நிர்வாகி: அ.பி. சந்தியோகு
ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

தபால் தொடர்புகளுக்கு:
POOBALAM
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-
Poobalam_murasu@hotmail.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:
பிரான்ஸ்:
Tel: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16
ஜேர்மனி:
T C C (வெளியீட்டுப் பிரிவு)
POSTFACH 101 613
46016 OBERHAUSEN
GERMANEY
TEL: 0208 205 99 103
FAX: 0208 205 99 104
HAND: 0170 2173152
சுவிஸ்:
MEDIA HOUSE
POSTFACH 6707, 3001 BERN.
TEL: 031 381 75 72
டென்மார்க்:
அன்பு
P.O.Box 65
7400 Herning, Denmark.
Tel: 86336352 - Fax: 65302588
பிரித்தானியா:
பரணி : - Tel: 07958675021
மோகன் : - Tel: 07961582285
இத்தாலி: மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056
நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527
நெதர்லாந்து: தலிங்கரட்ணம்
Tel: 076 5425804
அவுஸ்திரேலியா:
Tel: 61 3 8802 8368

குறிப்பு:

இவ் இதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.

ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

Restaurant **Tharsana's**

தர்ஷனாஸ் உணவகம்
23, Rue Perdonnet, 75010 Paris
Tél: 01 40 05 08 36- 06 80 02 93 41
M°: La Chapelle *ou* Stalingrad

* இலங்கை, இந்திய உணவுவகைகளை உங்கள் குடும்பத்தோடு வந்து சுவைத்து மகிழ்ந்திடவும்
* உங்கள் இல்லத்தின் இனிய விழாக்களை கொண்டாடி மகிழ்ந்திடவும், அனைத்து உணவு வகைகளையும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்வதற்கும் லாச்சப்பலில் நீங்கள் நாடவேண்டியது.



தர்ஷனா & பிரஷா
உணவகங்கள்
இங்கு சாப்பாடுகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்வதுடன், உங்கள் விழாக்களையும் இங்கு மகிழ்வுடன் கொண்டாடலாம்



Restaurant **Prassah**
Gastronomiques Indiennes

பிரஷா உணவகம்
54 Rue Louis Blanc, 75010 Paris
Mo: La Chapelle *ou* Louis Blanc
Tel: 01 53 26 39 41

ஈழமுரசு
ஐரோப்பா
POOBALAM WEEKLY

அனைத்துத் தொடர்புகளுக்கும்:

"POOBALAM"
22, Rue Perdonnet
75010 Paris

Tél: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16

வீடு வாங்குதல்–விற்றல்–முதலீடு செய்தல்

- வீடு வாங்குவோருக்கான 100% கடன் வசதி
- SCI ஸ்தாபனத்தின் முலம் வீடுகள் வேண்டி முதலீடு செய்து கொள்ளுதல்
- கட்டப்பட்ட புதிய – பழைய வீடுகள் வேண்டுதல்
- நிலம் வேண்டி புதிய வீடுகள் கட்டுதல்

முழு அளவிலான இலவச
ஆலோசனைகள் வழங்கப்படும்
தொடர்புகள்: 06 64 73 19 82

ஜனாதிபதி சந்திரிகாவிற்கு ஜே.வி.பி. எச்சரிக்கை

உடனடியாக மத்திய குழுவை கூட்டுமாறு கோரிக்கை

தங்களது உடன்பாடின்றி பிரதமராக மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டதால், மிகக் கடுமையான நடவடிக்கைகளைத் தாங்கள் எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு ஜே.வி.பி. எச்சரிக்கை விடுத்துள்ளது.

பிரதமரின் நியமனத்தால் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பி.க்குமிடையே முறுகல் நிலை தீவிரமடைந்து, அமைச்சரவைப் பதவியேற்பு வைபவத்தை புறக்கணிக்குமளவுக்கு ஜே.வி.பி. நெருக்கடிகளை உருவாக்கியுள்ளது.

இந்த நிலையில், ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவின் கையெழுத்துடன் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில், பிரதமராக லஷ்மன் கதிர்காமரை நியமிக்குமாறு நாங்கள் தெரிவித்திருந்த போதிலும், அதனையும் மீறி நீங்கள் மகிந்த ராஜபக்ஷவை நியமித்தமையானது எமக்கிடையிலான புரிந்துணர்வில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

பௌத்த சிங்களவர் ஒருவரைத் தான் பிரதமராக நியமிக்க வேண்டுமென்று நீங்கள் விரும்பியிருந்தால், எமது தெரிவான அநுரா பண்டாரநாயக்க அல்லது மைத்திரிபால சிறிசேனவையாவது நியமித்திருக்கலாம்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இது தொடர்பாக ஜே.வி.பி.யின் முக்கியஸ்தர்களான விமல் வீரவன்ச மற்றும் ரில்வின் சில்வாக ஆகியோருடன் ஜனாதிபதி கலந்தாலோசித்த பின்னர், எமது தெரிவாக லஷ்மன் கதிர்காமரை பிரதமராக்குவதென உடன்பட்டு அது பற்றி கதிர்காமருக்கும் அறிவித்திருந்தபோதிலும், அதனையெல்லாம் மீறி பின்னர் மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கியுள்ளார்.

சிங்கள பௌத்தர் ஒருவரையே பிரதமராக்க வேண்டுமென ஜனாதிபதி கருதினாலும், சர்வதேச சமூகத்தின் மத்தியில் கதிர்காமர் பிரபல்யமானவர்.

எமது கூட்டமைப்பு எவர் மீது மிகுந்த நம்பிக்கை வைக்கின்றதோ, அவரைப் பிரதமராக்குவதற்காக அரசியலமைப்பில் மாற்றங்களைக் கூடக் கொண்டு வரலாம் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 10ம் திகதி மாலை ஜனாதிபதி மாளிகையில் நடை

(தொடர்ச்சி 27ம் பக்கம்)

பிரதமரின் இராஜினாமா கடிதம்

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் கையளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திகதியிடப்படாது வழங்கப்பட்டுள்ள இக்கடிதத்தை, பிரதமராகப் பதவியேற்க முன்பே மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியிடம் ஒப்படைத்து விட்டதாகவும் அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேநேரம் பிரதமராகப் பதவியேற்றுள்ள போதிலும், ராஜபக்ஷ அலரிமாளிகையை தனது வாசஸ்தலமாகக் கொள்ளாததுடன், தனது அலுவலகமாக அதனைப் பயன்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மகிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள போதிலும், இந்த நியமனம் தொடர்பாக தங்கள் கூட்டமைப்புக்குள் நிலவும் எதிர்ப்புகள் குறித்து அவர் மிகுந்த கவலையடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(தொடர்ச்சி 27ம் பக்கம்)

தமிழ்க் கூட்டமைப்புக்கு ரணில் அழைப்பு!

புதிய பாராளுமன்றத்தின் சபாநாயகர் பதவிக்கான தேர்தலில் தமது வேட்பாளருக்கு ஆதரவு வழங்குமாறு ஐக்கிய தேசிய கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கோரியுள்ளது.

முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, இக் கோரிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்றக் குழுவின் தலைவர் இரா.சம்பந்தனுடனான சந்திப்பின்போது விடுத்தார் என்று அறியவருகின்றது.

ரணிலின் அழைப்பின் பேரில் அவரை சம்பந்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்றக் குழுவின் முதலாவது கூட்டம் கொழும்பில் நடைபெற்ற பின்னர் சந்தித்தார். பொதுத் தேர்தல் முடிந்த பின்னர் தோன்றியுள்ள அரசியல் நிலைவரம் பற்றி அச் சந்திப்பின்போது ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. சபாநாயகர் தேர்தல் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி விடுத்த கோரிக்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்றக் குழுவின் அடுத்த

(தொடர்ச்சி 27ம் பக்கம்)

அடுத்த ஜனாதிபதி விமல் வீரவன்ச

2006ம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி.யின் சார்பில் அக்கட்சியின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச போட்டியிடவுள்ளதாக அக்கட்சி வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

இதற்காகவே அவர் இம்முறை அமைச்சுப் பொறுப்பெதனையும் ஏற்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நடந்து முடிந்துள்ள பொதுத் தேர்தலில் அவர் 2 37 185 விருப்பு வாக்குகளைப் பெற்றார். இதன் மூலம் எதிர்வரும் ஜனாதிபதித்

(தொடர்ச்சி 27ம் பக்கம்)

எங்களுக்காக வாதாடுங்கள்


இலண்டன் தடுப்புமுகாமிலிருந்து கண்ணீர் கடிதம்

இங்கிலாந்தில் அரசியல் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு இலங்கைக்குத் திருப்பியனுப்புவதற்காக தடுப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான ஈழத் தமிழர்கள் சார்பாக கேட் பிறிச் *(ஒகின்டன்)* தடுப்பு முகாமிலுள்ள தமிழர்கள் உருக்கமிகு நீண்ட கண்ணீர் கடிதமொன்றை ஈழமுரசிற்கு அனுப்பி வைத்துள்ளார்கள்.

இருட்டில் நடக்கும் பல சம்பவங்களை அக் கடிதம் அம்பலப்படுத்துகின்றது. தினமும் ஏழு, எட்டு ஈழத் தமிழர்களாவது நாட்டிற்கு திருப்பி அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கும் செய்தி தற்போது தெரிய வந்துள்ளது. தமிழ் சட்டத்தரணிகளின் அலட்சியப் போக்கும் அம்பலப்படுத்தப்பட்டுள்ளது. (இலண்டனில் தமிழ்ச் சட்டத்தரணிகள் - Solicitors தமிழகதிகள் விடயத்தில் பணத்தையே குறிவைத்து இயங்குவதும் முடிவில் அவர்களை இக்கட்டான ஒரு சூழ்நிலைக்குள் சிக்க வைத்து அவர்களின் வதிவிட அனுமதியை கேள்விக்குள்ளாக்குவது குறித்து ஏற்கனவே பல தரப்பிலிருந்தும் எமக்கு ஏகப்பட்ட புகார்கள் வந்தது குறிப்பிடத்தக்கது.) தமிழர்களுடைய பணத்தினால் தமது பொருளாதாரப் பின்புலத்தை கட்டமைத்துக் கொண்ட இச் சட்டத்தரணிகள் தமிழர்களுக்கான நியாயமான முறையில் வாதாட முன்வர வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. சுமார் 150 சட்டத்தரணிகள் அமைப்பு இங்கிலாந்தில் இயங்குவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றது. இவர்கள் இலங்கை ஒரு பாதுகாப்பாற்ற நாடு என்று வழக்குத் தொடர முன்வராதது குறித்து கேள்வியெழுப்பப்பட்டுள்ளது.

(தொடர்ச்சி 27ம் பக்கம்)

PHONE 2000
LES PROFESSIONELS DE LA TELEPHONIE A VOTRE SERVICE
Réparation - Abonnements -Téléphones Mobiles - Vente en Gros et Détail - Déblocage
Internet - Installation Cybercafé - Abonnement ADSL - Création de Site Web.



Pour plus d'information visitez: www.phone2000.net - Tél: SFR Siva : 06 20 21 11 11